www.tamilarangam.net

இதழ் 107 விலை 7.00

ஒக்.10 - ஒக்.23, 1996


# சரிநிகர்



## சந்திரிகாவின் அமைதிப் புரட்சி?



## ஐ.தே.கவுக்கு 50 வயது!



### மருதமுனை: ஒற்றுமைக்கு ஆப்பு?

### யாழ்ப்பாணம்: மக்களை துன்புறுத்துவதில் மகிழ்ச்சி!

### அம்பாறை: மனிதக் கேடயங்களாக மக்கள்!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சரிநிகர்

இருவாரங்களுக்கொருமுறை

"சரிநிகர் சமானமாக வாழ்மிந்த நாட்டிலே" பாரதி

ஆசிரியர்குழு
ச.பாலகிருஷ்ணன்
சிவகுமார்
சரவணன்
எம்.கே.எம்.ஷகீப்
அரவிந்தன்
சி.செ.ராஜா
சிவகுருநாதன்
சேரன்

வடிவமைப்பு
ஏ.எம்.றஷ்மி

வெளியிடுபவர்
ச.பாலகிருஷ்ணன்
18/2, அலோசாலை,
கொழும்பு-03

அச்சுப்பதிவு
நவமக அச்சகம்,
334,காலிவீதி,
இரத்மலானை

ஆண்டுச் சந்தா விபரம்
இலங்கை - ரூபா 210/=
வெளிநாடு 30 U.S.$

(தபாற் செலவு உட்பட)

காசுக்கட்டளை/காசோலை யாவும் MIRJE என்ற பெருக்கே எழுதப்படல வேண்டும்.

எல்லாத் தொடர்புகட்கும்
ஆசிரியர்,
சரிநிகர்,
04 ஜெயரட்ன வழி,
திம்பிரிகஸ்யாய,
கொழும்பு -05
தொலைபேசி: 593615
தொலைமடல்: 594229

# யாழ்ப்பாணத்தில் கைதாவோர் எங்கே?

### முன்பு போலவே...

யாழ்ப்பாணத்தில் மருந்து வகைகளுக்குத் தட்டுப்பாடு நிலவுகிறது. முன்னர் மருந்துகளை புலிகள் எடுத்துவிடுகிறார்கள் எனக் கூறி குறைந்தளவு மருந்துகளை அனுப்பி வந்தது அரசு. அதுவும் சில சமயம் மாதக்கணக்கில் மருந்து வராது மக்கள் பல்வேறு கஷ்டங்களை அனுபவித்தனர். சில சமயம் நோயாளிகள் இறந்துமுள்ளனர். அண்மையில் மருந்து இல்லாமல் நான்கு வயதுக் குழந்தையொன்று இறந்துள்ளது.

வலிகாமத்துக்குள் மக்கள் வந்த பின் யாழ் போதனா வைத்தியசாலைக்கு அமைச்சர் பௌசி பல தடவை வந்துள்ளார். சுகாதார அதிகாரிகளும் கொழும்பில் இருந்து வந்து போயினர். மருந்துகள் அனுப்பப்படும் என்பார்கள். பத்திரிகைகளிலும் செய்திகள் வரும். ஆனால் முன்னைய நிலையே இன்னமும் தொடருகிறது.

இன்று யாழ்ப்பாணத்தில் நடப்பது தான் என்ன? யாழ் பெரியாஸ்பத்திரிக்கு சிகிச்சைக்காக ஒரு நோயாளி போகமுன் மூன்று நான்கு இடங்களில் படையினரால் சோதிக்கப்படுகின்றார். பெரியாஸ்பத்திரியிலோ மருந்துகள் இல்லை என்று கூறப்படுகிறது. வைத்தியர்கள் எழுதும் மருந்துகளை வெளியில் தான் அதுவும் இரட்டிப்பு விலையில் வாங்க வேண்டும். செல்வாக்கு இருந்தால் மட்டுமே ஆஸ்பத்திரியில் மருந்துகள் பெறலாம்.

எப்போதாவது மருந்துகள் கப்பல்களில் வருகின்ற போதும் தனியார் மருந்துக் கடைகள் அவற்றைப் பதுக்கி விடுகின்றன. ஒரு கடையில் அம்பிசிலின் முடிந்தால் மற்றக் கடையில் அதற்கு இரட்டிப்பு விலை. "வெஸ்கோ", "இரட்னம் பாமஸி" என்ற இரு மருந்துக் கடைகளிலும் எல்லா மருந்துகளும் கிடைக்கும். ஆனால் இரட்டிப்பு விலை.

### சாராயம் தேவை தானா?

இந்த நிலையில் சாராயம் கப்பலில் வந்திறங்குகிறது. மெண்டிஸ் ஒரு போத்தல் 500 ரூபாவுக்கு விற்கப்படுகிறது. வாமஸ் என்ற தனியார் வர்த்தக நிலையம் கொழும்பிலிருந்து சாராயத்தை கொண்டுவர அனுமதித்த அதிகாரிகள் மருந்து கொண்டுவர அனுமதிப்பதில்லையாம். தற்போதைய நிலையில் சாராயம் தேவைதானா? புலிகள் இருந்த போதும் கொழும்பு குடிவகைகளுக்கு இங்கு தடையிருந்தது. புலிகளுக்கு வரிவரியாகக் கொடுத்து மெண்டிஸை 500 ரூபா முதல் 700 வரை விற்றார்கள் வாமாஸ் நிறுவனத்தினர். இப்போதும் அதே சாராயம் தட்டுப்பாடின்றி அதே விலைக்கு விற்பனையாகின்றது.

### மண்ணெண்ணெயில் கொமிஷன்!

மண்ணெண்ணெய் மிகவும் அத்தியாவசியமான பொருளாக மாறியுள்ளது. மின்சாரம் இல்லாததால் வெளிச்சத்துக்கும் விவசாயத்துக்கும் இது மிகவும் அதிகமாகத் தேவைப்படுகிறது. கப்பலில் வந்த மண்ணெண்ணெய் தனியார் கடைகளில் தாராளமாக லீற்றர் 35 ரூபாவுக்கு விற்கப்படுகிறது. "மாக்பெட்" மற்றும் சில எரிபொருள் விற்பனை நிலையங்கள் மூலம் லீற்றர் 12.50 வீதம் விற்கப்படுமென அரசாங்க அதிபர் அறிவித்திருந்தார். ஆனால் பொது மக்கள் கொளுத்தும் வெய்யிலில் நீண்ட கியூவில் நின்றும் கூட ஒரு சிலருக்கு மட்டுமே மண்ணெண்ணெய் கிடைகிறது. மிகுதி தனியாருக்கு கமிஷனுக்கு விற்கப்பட்டு விடுகிறது.

### அதிகரிக்கும் கைதுகள்!

கைது செய்யப்படும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. இரவில் வீடுகளில் புகுந்து பிடித்துச் செல்வதற்குப் பதில் பகல் நேரத்தில் கைது செய்யலாமே என்று கிறிஸ்தவ மதகுருமார் கேட்டதற்கு திருப்தியான பதிலெதுவும் இல்லை. இராணுவக் காவலரண்கள் ஒவ்வொரு வீதிச்சந்திகளிலும் முளைத்துள்ளன. அவற்றிலும் பலர் கைதாகின்றனர். அண்மையில் யாழ் ஆயர் இல்லத்தின் பாலர் பாடசாலை ஆசிரியை செல்வி ஜெ.ரஜனி நள்ளிரவில் திடீரென வீட்டுக்குள் புகுந்த படையினரால் பிடித்துச் செல்லப்பட்டார். நியாயம் கேட்கப் போன தாயார் காலால் உதைக்கப்பட்டு காயமுற்ற நிலையில் யாழ் பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டார். பாசையூரில் உடை தைத்துத் தர தாமதம் செய்து விட்டார் என்ற காரணத்துக்காக ஒரு தையல் கடைக்காரர் கைது செய்யப்பட்டுள்ளார். குருநகர் கடலில் மீன்பிடிக்கச் சென்ற ஒரு மீனவர் கல்முனைக் கடலில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார். டேவிட் ரோட்டில் இரவு ரி.வி பார்க்கச் சென்ற இருவர் கைது செய்யபட்டுள்ளார்கள்.

கடைக்குப்போன கணவர் 'வீடுவரவில்லை, டியூசனுக்குப்போன மகன் வீடு திரும்பவில்லை என்று கூறிக்கொள்வது யாழ்ப்பாணத்தில் இப்போது சாதாரணமாகிவிட்டது. இப்போது நீதிக்கும் சமாதானத்துக்குமான மக்கள் குழுவொன்று யாழ் ஆயர் இல்லத்தில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டுள்ளது. இக்குழுவுடன் படையினர் ஒத்துழைப்பார்களா என்பது கேள்விக்குறியே.

### எங்கும் கியு வரிசை !

யாழ்ப்பாணத்தில் இப்போது தட்டுப்பாடில்லாத ஒன்று இருக்கின்றதென்றால் அது கியூ வரிசை தான். கொழும்பு மற்றும் தென் பகுதிகளுக்குப் போக கப்பல், விமானத்துக்கு பதிவு செய்ய கியூ. எரிபொருள் வாங்க கியூ, சதொசவில் கியூ, ஆஸ்பத்திரியில் அனுமதி பெறுவதற்கும் கூட கியூதான்.

முன்பு புலிகளின் பாஸ் அலுவலகத்திலும் இவ்வாறு தான் கியூ இருந்தது. அலுவலகத்துக்குள் போனால் உங்கள் பகுதி பொறுப்பாளரிடம் துண்டு வாங்கி வாருங்கள், படம் கொண்டு வாருங்கள், கிராம சேவையாளரின் கடிதம் வேண்டும் என மக்கள் மாதக்கணக்கில் புலிகளால் இழுத்தடிக்கப்பட்டனர். அதே நிலைதான் இப்போதும். யாழ் நிருவாக அதிகாரி அலுவலகம் முன் மக்கள் நாள்தோறும் நாயாக அலைகிறார்கள்.

– மறிவேந்தன் –

## நம்பிக்கை இல்லை!

வரையறுக்கப்பட்ட இலங்கை நிருவாக சேவை 94ம் ஆண்டுக்கான நிர்வாக சேவையில் ஆட்சேர்ப்பதற்கான பரீட்சை முடிவுகள் வெளிவந்ததும் சிறுபான்மையான தமிழ் முஸ்லிம் பரீட்சார்த்திகள் அதிர்ச்சியும் வேதனையும் அடைந்தனர்.

இப்பரீட்சையில் "மெரிட்" தெரிவில் 40 சிங்களவர்கள் மட்டுமே தெரிவாகினர். ஒரு தமிழரோ, முஸ்லிமோ இதில் இல்லை, இனவிகிதாசாரம் கூட கடைப்பிடிக்கப்படவில்லை, சுங்கத்திணைக் களத்திலோ வருமான வரித் திணைக்களத்திலோ உள்ள 'அதிகாரிகளை மட்டுமே "மெரிட்" முறையில் தெரிவு செய்யக் கூடாது! இது கடைப்பிடிக்கப்படவில்லை.

பாராளுமன்ற உறுப்பினர் சித்தார்த்தன் உரிய அதிகாரிளுடன் தொடர்பு கொண்டு இது பற்றி உரையாடிய போதும் இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இலங்கையில் 40பேர் தெரிவாகி இருக்கும் போது இதில் தமிழர்களும் முஸ்லிம்களும் இல்லை என்றால் சந்திரிகா அரசின் சிறுபான்மையினர்கள் நலன்கள் தான் என்ன என கேட்காதிருக்க முடியாது.

வடகிழக்கில் உள்ள வெற்றிடங்களுக்கு சிறுபான்மையினர் எடுக்கும் புள்ளிகள் அடிப்படையில் நியமனங்கள் வழங்கப்படல் வேண்டும். புதிய நியமனங்கள் வழங்குவதற்கு நிதிப்பற்றாக்குறை காரணமென அரசு சொல்கிறது. இவர்களுக்கு நியமனங்கள் வழங்குவதால் நிதிப்பற்றாக்குறை ஏற்பட வழியில்லை. காரணம் ஏற்கெனவே இவர்கள் நிர்வாக சேவை அதிகாரிகள் தரத்திலான சம்பளத்தை தங்களது ஒவ்வொரு திணைக்களத்திலும் பெற்று வருபவர்கள். குறைந்தது 10வருடங்களுக்கு மேலாக சேவை அனுபவமுள்ளவர்கள்.

இவர்களுக்கு நியமனங்கள் வழங்கப்படாதது, சிங்கள ஆட்சியாளர்கள் மீதான சிறுபான்மையினரின் நம்பிக்கையீனத்தை இன்னும் அதிகரிக்கிறது.

## கப்பம் கோரும் புலிகள்!

திருமலை மாவட்டத்தின் கிண்ணியாப் பிரதேச முஸ்லிம்களிடமிருந்து புலிகள் கப்பம் கோரிவருகின்றனர் என்று அப்பிரதேசவாசிகள் கூறுகின்றனர். இதுவரை சுமார் முப்பது பேர்களுக்கு கடிதம் மூலம் கோரிக்கை விடப்பட்டுள்ளதாகவும் அதில் பல பேர் பணம் கொடுத்திருப்பதாகவும் தெரியவருகிறது. பத்தாயிரம் முதல் ஒரு லட்சம் வரைக்கும் கப்பம் கோரிய கடிதங்களை பலர் பெற்றிருக்கிறார்கள். குறித்த தொகை இல்லாதபோது தன்னால் முடிந்தளவு தொகையை தருவதாகத் தெரியப்படுத்தி பேரம் பேசல்களும் இடம்பெற்றுள்ளது. கப்பக் கோரிக்கை விடு க்கப்பட்டவர்கள் புலிகளுக்கு அஞ்சி எவ்விதத்திலாவது பணத்தைக் கொடுக்கவே முயற்சிக்கிறார்கள். முன்னரும் இவ்வாறு தொடங்கிய விரிசல்கள் பின்னர் பாரிய கலவரங்களாக உருவெடுத்ததும் வரலாற்றில் மறக்க முடியாதவை.

தற்போது கப்பம் உட்பட வண்டில்கள் கால்நடைகள் கடத்தல் என்பன போன்ற நடவடிக்கைகளும் இடம் பெறுகின்றன. இரவு வேளைகளில் ஊருக்குள் புலிகள் வந்து சென்றால் அப்பகுதி மக்கள் பின்னர் படையினரின் விசாரணகளுக்கும் முகம் கொடுக்க வேண்டிய சூழ்நிலைகளும் ஏற்படுவதாக அறியமுடிகிறது.

உள்ளூர் வியாபாரிகளின் முக்கியஸ்தர்களின் முகவரிகளை புலிகள் எவ்வாறு பெற்றுக் கொள்கிறார்கள் என்பதையிட்டு கிண்ணியா வாழ் முஸ்லிம்கள் ஆச்சரியம் தெரிவிக்கின்றார்கள்.

கேட்பதற்கிணங்க உள்ளூர்ப் பாதுகாப்புத் தரப்பினரையும் மீறி கொடுக்கப்பட்டுவரும் கப்பம் முஸ்லிம்களால் மறுக்கப்படுமாயின் என்ன எதிர்விளைவுகள் ஏற்படும் என்பதும் பலரிடம் அச்சத்துடன் எழும்புகின்ற கேள்விகளாகும்.

இது புலிகளின் உத்தியோக பூர்வ நடவடிக்கை அல்லவென்றும் சில உள்ளூர் புலிகளின் நடவடிக்கையே என்றும் இனங்காணப்பட்டிருப்பினும் இதனால் ஏற்படுகின்ற விளைவுகள் மோசமானதாகவே அமையப் போகிறது என்பதில் சந்தேகம் இல்லை.

இவ்வாறான செயல்கள் உடனே நிறுத்தபட்டு ஒரு நம்பிக்கையான சூழலை உருவாக்குவதே அனைத்துத் தரப்பினரினதும் முன்னுள்ள தலையாய பணி இப்போது.

நில்ஷா

## எழுதாதே!

மூச்சு விடாதே! உனது பேனாவை மூடிவை!

அரசாங்கத்தை புகழ்ந்து மட்டும் எழுது-உனது கருத்துக்களை சுதந்திரமாக எழுதின் பொலிஸ் கூண்டுகளுக்குள் நீ இருப்பது நிச்சயம். அதுவும் நீ சிறுபான்மையினனாய் இருப்பின் இன்னும் நிச்சயம்!

பத்திரிகை, எழுத்துச் சுதந்திரத்தை காப்பதாகக் கூறிப் பதவிக்கு வந்த சந்திரிகாவின் அரசும் அதன் பொலிஸ் இராணுவமும் "அரண்டவன் கண்களுக்கு இருண்டதெலாம் பேய் போல்" செயற்படுகிறது.

கொழும்பிலிருந்து வெளிவரும் "மூன்றாவது மனிதன்" ஆசிரியரும் அதனை அச்சிடுபவரும் பொலிஸ் விசாரணைக்குட்படுத்தப்பட்டனர். சஞ்சிகையை அச்சிட்டுக் கொடுத்தவர் ஒரு நாள் வரை பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். பத்திரிகை ஆசிரியர் எம்.பௌஸர் பொலிஸாரின் தீவிர விசாரணைக்குட்படுத்தப்பட்டார்.

"எத்தனை பிரதிகள் அடிக்கிறாய்?"

"நீ புலி ஆதரவாளனா?"

"வெளிநாடுகளுக்கு எத்தனை பிரதிகள் அனுப்புகிறாய்?"

"பின் அட்டையில் உள்ள கவிதையை ஏன் எழுதினாய்?"

"தற்கொலை பெண் புலிகளை நீ ஆதரிக்கிறாயா?"

"பின் அட்டையில் உள்ள படத்தை புலிகள் தந்தனரா?"

"இலங்கையில் அப்படியென்ன கொடுமை நடக்கிறது?"

"இனங்கள் பிரிந்து போவதை நீ ஊக்குவிக்கின்றாயா?"

போன்ற கேள்விகள் கேட்கப்பட்டன. பத்திரிகை ஆசிரியரிடமும் அச்சிட்டவரிடமும் வாக்குமூலங்கள் பெறப்பட்டன.

இச்சம்பவங்கள் இலங்கைக்குப் புதிய அல்ல. எதை எழுதினும், எதைப் பார்ப்பினும் எங்கும் எதிலும் புலிகள். புலிகள்!

சுதந்திரமாக நடமாட முடியாது! சுதந்திரமாக எழுத முடியாது. ஒன்று நீ புலி என குற்றம் சாட்டப்படுவாய், அல்லது புலியாய் ஆக்கப்படுவாய்!

எழுத்தாளர்களும் கலைஞர்களும் துப்பாக்கிகளுக்கு பயந்து ஓடி ஒளிந்து கொண்டதாக வரலாறு இல்லை, தோற்றதாகவும் வரலாறில்லை. அடக்குமுறை அரசும் அதன் இராணுவமும் பொலிசும் எப்போதும் போல் இங்கும் வரலாற்றில் தோற்றுத்தான் போகும்!

– அம்ரிதா –

## கடைத்தேங்காய் உடைக்கும் எம்.பிக்கள்

வீதி அபிவிருத்தி அதிகார சபையானது (RDA) அண்மையில் பொறியியலாளருக்கான நேர்முகப் பரீட்சையை நடத்தியது.

இதில் 45பேர் தெரிவுசெய்யப்பட்டனர். இவர்களில் நால்வர் தமிழர்; ஐந்துபேர் முஸ்லிம்கள்; ஏனையோர் பெரும்பான்மையர்! இது அல்ல பிரச்சினை.

தெரிவு செய்யப்பட்ட நான்கு தமிழரும் தமது பட்டத்தில் Class எடுத்தவர்கள். அத்தோடு தெரிவுசெய்யப்பட்ட அனைவரும் 60 புள்ளிக்கு மேல் எடுத்தவர்கள் என்று அறிவிததல் பலகைக் குறிப்பு கூறுகிறது.

இவர்களுடைய நியமனக் கடிதங்கள் அந்த அந்தத் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர்கள் மூலம் இவர்களை அழைத்து வழங்கப்பட்டன.

கிழக்கு மாகாணத் தமிழ் எம்.பி. ஒருவர் இந்தக் கடிதத்தை வழங்கும் போது சில புத்திமதிகளையும், சம்பள விபரத்தையும், பயிற்சிகள் பற்றியும் சொன்னாராம்.

நியமனக் கடிதத்தைப் பெற்றுக்கொண்டவருக்கு மட்டற்ற மகிழ்ச்சியும் அளவற்ற நன்றிகளும் மனதில்; வெளியில் வந்து கடிதத்தைப் பிரித்து பார்த்தாராம் எம்.பி. சொன்ன யாவும் அதில் இருந்தன.

கிழக்கு மாகாணத்தின் மற்றொரு முஸ்லிம் எம்பி. அவரும் கொழும்பில் வைத்து நியமனக்கடிதத்தை உரியவருக்கு கொடுத்தார். அவர் சம்பளவிபரங்கள் பயிற்சிகள் என்பவற்றுடன் நிற்பாட்டவில்லை. எனக்கு ஓரிடம்தான் தந்துள்ளனர் - என்றதுடன் அது உமக்குக் கிடைப்பதையிட்டு மகிழ்ச்சியடைகிறேன் என்றார். எம்.பி.யைத் தெரியாத அவருக்கு எம்.பி இப்படி உதவியிருக்கிறார் என்பதில் தலைகால் தெரியாத புளுகம்.

தென்மாகாணத்தில் ஒரு பிரதியமைச்சர் சிங்களப் பொறியியலாளருக்கு கடிதத்தைக் கொடுக்குமுன் முன்குறிப்பிட்ட விபரங்களைக் கூறியதுடன் நான் கஷ்டப்பட்டு இதை எடுத்துள்ளேன். நீர் நல்லபடி நாட்டுக்கு சேவைசெய்ய வேண்டும் என்றாராம்.

அவரும் கண்ணீர்மல்க பிரதியமைச்சருக்கு நன்றிகள் சொன்னாராம்.

நாம் காதால் கேட்டது. இந்தக் கடிதங்கள் அனைத்தும் முதல்நாள் RDAக்கு பொறுப்பான அமைச்சரால் இவர்களிடம் வழங்கப்பட்டதாம். அந்தந்தத் தொகுதியை சேர்ந்தவர்களுக்கு கொடுக்கும்படி!

மகாஜனக் கல்லூரி பழைய மாணவர் சங்கம் (பாரிஸ்) நடாத்திய நாடகப் போட்டியின் முடிவுகள் அறிவிக்கப்பட்டுள்ளன. போட்டியில் பங்குகொண்ட 22 நாடகப்பிரதிகளுள்பரிசு பெறும்பிரதிகள்:-

முதலாவது:- சி. பிரேம்ராஜின் 'வல்லமை தாராயோ' (நோர்வே)

இரண்டாவது:- ரீ.வி.ஆர். சங்கரின் 'மீண்டும் தொடங்கும்மிடுக்காம்' (இலங்கை)

மூன்றாவது:- ஷோபா சக்தியின் 'அற்றேன்ஷின்பிளீஸ்' (பாரிஸ்)

பாராட்டு பெறும்பிரதிகள்:-

சு.தினதயாளனின் 'அநாமதேயம்' (இலங்கை)

தேவனின் 'மணமகள்தேவை' (சுவிஸ்)

மா. மகேஸ்வரனின் பாட்டி சாகப்போகிறாள் (இலங்கை)

மேற்படி போட்டியின் நடுவர்களாக சி. சிவசேகரம், கி.பி.அரவிந்தன், க. ஆதவன் ஆகியோர்பணியாற்றியுள்ள னர்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மருதமுனை: ஒற்றுமைக்கு ஆப்பு?

— சத்யேந்திரா —

அம்பாறை மாவட்டத்தில் மீண்டும் ஒரு முறை தமிழ் முஸ்லிம் ஒற்றுமைக்கு வேட்டு வைக்கப்பட்டுள்ளது. தமிழ் தேசிய விடுதலைப் போராட்டம் ஆரம்பமான காலம் தொடக்கம் தமிழர்களும் முஸ்லிம்களும் வன்செயல் என்ற பெயரில் பலியாவதும், உயிர், உடைமைகளை இழந்து அகதி வாழ்க்கை வாழ்வதும் சாதாரண ஒரு நிகழ்வாக மாறிவிட்டது.

இவ்வாறான சம்பவங்கள் ஒவ்வொன்றின் போதும் மனித நாகரிகம் குழி தோண்டிப் புதைக்கப்படுகிறது. காட்டுமிராண்டித்தனம் தலைவிரித்தாடுகிறது. அப்பாவிப் பொது மக்கள் கொல்லப்படுகின்றனர்.

இது தான் கடந்த செப்.28ம் திகதி அன்றும் மருதமுனையில் நடந்தேறியது. அன்றைய தினம் மருதமுனை திரெளபதி அம்மன் கோவிலில் வைத்து புலிகளால் கடத்தப்பட்ட ஐந்து முஸ்லிம் ஊர்காவல்படையினர் பின்னர் கொல்லப்பட்டு கிடக்கக் காணப்பட்டனர். இவர்களது சடலங்கள் பாண்டிருப்பு மயானத்தில் போடப்பட்டிருந்தன. இச்சம்பவத்தின் எதிரொலியாக மருதமுனையின் ஊடாகப் பிரயாணம் செய்த அப்பாவித் தமிழ் ம்க்கள் கொல்லப்பட்டுள்ளனர். மற்றும் பெருந்தொகையானோர் வெட்டுக்காயங்களுடன் வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இவையெல்லாவற்றையும் விட வதந்திகள் பெருமளவில் பரவி அனைவரையும் கலவரத்துக்குள்ளாக்கிக் கொண்டிருந்தன.

இச்சம்பவத்தில் அகப்பட்டு அதிரடிப்படையினரால் காப்பாற்றப்பட்ட பெரிய நீலாவணையைச் சேர்ந்த சோமசுந்தரம் என்பவரை மட்டக்களப்பு வைத்தியசாலையில் சந்திக்க முடிந்தது. தான் இன்னும் இரண்டு இளைஞர்களுடன் துவிச்சக்கர வண்டியில் மருதமுனையினூடாக வந்து கொண்டிருந்த போது தங்களை பலர் துரத்திக்கொண்டு வந்ததாகவும், தன்னுடன் வந்த இருவரும் இளைஞர்களாக இருந்தபடியால் ஓடித் தப்பிவிட்டதாகவும் தன்னால் ஓட முடியாதபடியால் அகப்பட்டுவிட்டதாகவும், தன்னைப் பிடித்து தலைப்பக்கத்தால் ஒரு சாக்காலும் கால் பக்கத்தால் இன்னொரு சாக்காலும் கட்டி வீதி ஓரத்தில் போட்டுவிட்டு வீதி போடுவதற்காக குவிக்கப்பட்டிருந்த கருங்கற்கலால் தன் மீது பலர் எறிந்ததாகவும் கூறினார். தன்னை மயக்கம் வரும் வரை கல்லால் எறிந்த பின்னர் அக்பர் கிராமத்துக்கு கொண்டு சென்று எரிக்க வேண்டும் என அவர்கள் கதைத்ததை தன்னால் கேட்கக்கூடியதாக இருந்ததாகவும் கூறினார். திடீரென ஜீப் சத்தம் கேட்டதை அடுத்து அனைவரும் ஓடிவிட்டதாகவும் பின்னர் அதிரடிப்படையினர் தன்னை விடுவித்ததாகவும் கூறினார்.

தற்போது சிகிச்சை பெற்று வரும் இவரின் தலையிலும், உடம்பிலும் கற்களால் தாக்கப்பட்ட காயங்கள் நிறைந்து காணப்படுகின்றன.

கடந்த பல வருடங்களாக இவ்வாறான சம்பவங்கள் நடைபெற்றாலும் மருதமுனைக் கிராமம் ஒருபோதும் இவ்வாறான விடயங்களில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டது இல்லை. எப்போதும் தமிழ் மக்களுடன் சுமுகமான உறவைக் கொண்டிருந்த மருதமுனை முஸ்லிம்கள் இச்சம்பவத்தினால் பெருமளவு மனத்தளவில் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். தாங்கள் ஒருபோதும் இவ்வாறான சம்பவங்களில் ஈடுபடமாட்டோம் என அடித்துச் சத்தியம் செய்தார் மருதமுனையைச் சேர்ந்த இப்ராகிம் என்ற வயோதிபர். தமிழ் மக்களை கொன்று, அந்தக் கலவரங்களில் ஆதாயம் தேட முயன்றோரின் செயல்தான் இதுவென்றும், இதற்கு மருதமுனைக் கிராமத்தைப் பயன்படுத்தியதன் மூலம் தமது கிராமத்துக்கு தமது இனத்தைச் சேர்ந்தோரே தலைகுனிவை ஏற்படுத்திவிட்டதாகக் கூறி மிக வேதனைப்பட்டார் ஏ.ஈ.சலீம் என்ற இளைஞர்.

நடந்து முடிந்த இச்சம்பவத்தின் பின்னணியில் வலிமையான கரம் ஒன்று இருந்திருக்கிறது என்ற சந்தேகம் பரவலாக எழுப்பப்படுகிறது. ஏனென்றால் இச்சம்பவம் நடப்பதற்கு முன்பு நடைபெற்ற சில நிகழ்ச்சிகள் இச்சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளன.

வழமையாக மருதமுனை விசேட அதிரடிப் படையினரின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்ட பிரதேசமாகவே இருந்து வந்திருக்கிறது. ஆனால் சம்பவம் நடைபெறுவதற்கு முதல் நாள் கொழும்பில் இருந்து வந்த உத்தரவில் மருதமுனைக்கு செல்லவேண்டாம் என அதிரடிப்படையினருக்கு பணிக்கப்பட்டிருந்ததாகக் கூறப்படுகிறது. இதனால் முற்றுமுழுதாக முஸ்லிம் பொலிஸாரைக் கொண்டிருந்த கல்முனை பொலிஸ் நிலையத்தின் பாதுகாப்பின் கீழ் மருதமுனை கொண்டு வரப்பட்டது. அதுமட்டுமல்லாது அதிக எண்ணிக்கையான முஸ்லிம் பொலிஸாரைக் கொண்டிருந்த மருதமுனை எல்லையிலிருந்த பொலிஸ் நிலையமும் கல்முனைப் பொலிஸ் நிலையத்தின் கட்டுப்பாட்டிலேயே இயங்கியுள்ளது. என்றுதான் சொல்ல வேண்டும். ஏனென்றால் மேற்படி சம்பவத்தில் பாதிக்கப்பட்டு வெட்டுக் காயங்களுடன் இப்பொலிஸ் காவல் நிலையத்துக்கு ஓடி வந்த ஒரு பெண், தான் தெரிவித்த முறைப்பாட்டைக் கூட அங்கிருந்த பொலிஸார் கவனத்தில் எடுக்காது அசட்டையாக இருந்திருக்கின்றனர் என்று தெரிவித்துள்ளார். இது இங்கு நடைபெற்ற சம்பவம் திட்டமிட்டுச் செய்யப்பட்டதுடன், இது பொலிஸாருக்கு முன் கூட்டியே தெரிந்திருக்கிறது என்ற சந்தேகத்தை வலுப்படுத்தியுள்ளது.

அத்தோடு கலவரங்களில் ஈடுபட்டவர்கள் எவருமே மருதமுனையைச் சேர்ந்தவர்கள் இல்லை என்றும், அனைவருமே கல்முனைக் குடி, நற்பிட்டிமுனை ஆகிய இடங்களில் இருந்து கொண்டு வரப்பட்டவர்கள் என்றும் தற்போது வந்துள்ள செய்திகள் தெரிவிக்கின்றன.

இத்தனைக்கும் அப்பால் நடந்தேறிய சம்பவங்களைப் பற்றி அரசியல் கட்சிகளின் அறிக்கைகளும் சில விடயங்களை எமக்குச் சுட்டிக் காட்டுகின்றன. ஸ்ரீ லங்கா முஸ்லிம் கட்சியின் தலைவர் சேகு இஸ்ஸத்தீன் தனது அறிக்கையில் இலங்கை அரசபடையில் சேர்ந்து ஆயுதமேந்திய எவரையுமே தனது எதிரியாகக் கருதும் புலிகள் ஊர்காவல் படைவீரர்களைக் கொன்றதுக்குப் பழிவாங்கும் நடவடிக்கையாக தமிழர்களைக் கொன்றது ஒரு போதும் ஏற்றுக் கொள்ள முடியாதது என்று கூறியுள்ளார். ஆனால் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸோ பக்கச் சார்பான ஒரு அறிக்கையை வெளியிட்டிருக்கின்றது. அதில் கிளிநொச்சியில் மோதலில் ஈடுபட்டிருக்கும் படையினரின் கவனத்தைத் திசைதிருப்ப புலிகளினால் மேற்கொள்ளப்பட்ட முயற்சியே இது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த அறிக்கையின் பின்னணியில் நடந்த சம்பவத்திற்கான முக்கியத்துவத்தையும், கண்டிப்பையும் விட இதைக் கொண்டு கட்சியின் ஆதரவை எப்படி பெருக்க முடியும் என்ற முனைப்பே அதிகம் காணப்பட்டது. இதைப் பார்க்கும் போது முஸ்லிம் காங்கிரஸ் அம்பாறை மாவட்டத்தில் இழந்து வரும் தனது செல்வாக்கை மீண்டும் நிலைநிறுத்த இவ்வாறான சம்பவங்களையே அடிநாதமாக நம்பியிருக்கின்றதா என்ற கேள்வி எழுவதைத் தவிர்க்க முடியவில்லை! ஆயினும் மருதமுனையில் நடைபெற்ற சம்பவத்தை அனைத்து முஸ்லிம் உள்ளூர் தலைவர்களுமே கண்டித்திருப்பது கிழக்கின் தமிழ் முஸ்லிம் உறவு குறித்து நம்பிக்கையூட்டுவதாகவுள்ளது.

மருதமுனையில் நடைபெற்ற சம்பவங்களுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் கடந்த ஒக்டோபர் 3ம் திகதியன்று மட்டக்களப்பில் ஹர்த்தால் ஒன்று அனுட்டிக்கப்பட்டது. கடந்த ஐந்து வருடங்களுக்குப் பிறகு பரந்த அளவில் அனுட்டிக்கப்பட்ட ஹர்த்தால் இது என்பதோடு காத்தான்குடி முஸ்லிம்கள் அனைவரும் முற்றுமுழுதான ஆதரவை நல்கிய ஹர்த்தாலாக இது அமைந்தது.

ஹர்த்தாலை ஒழுங்கு செய்தது யார் என்று தெரியாத நிலையிலும் கூட மக்கள் இன, மத பேதங்களையெல்லாம் தள்ளி வைத்துவிட்டு வழங்கிய ஆதரவு இப்பிரதேசத்தின் மக்களிடையே ஏற்பட்ட முற்போக்கான எண்ணங்களினதும், வழிகாட்டல்களினதும் வெளிப்பாடு என்று தான் கூற வேண்டும். இவ்விடயத்தில் காத்தான்குடி வாழ் முஸ்லிம் மக்களும், முஸ்லிம் உள்ளூர் தலைவர்களும் ஹர்த்தாலின் போது கடையடைத்து காட்டிய ஆதரவும் ஒற்றுமையும் அரசியல் விளைவுகளுக்கும் அப்பால் போற்றப்பட வேண்டிய ஒன்று. இதனைப் பொறுக்க முடியாத படையினர் கடைகளைத் திறக்குமாறு பல இடங்களில் பலவந்தப்படுத்தியுள்ளனர்.

கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களும் மருதமுனை சம்பவங்களுக்காக ஒரு நாள் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டனர். அத்தோடு மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களின் ஒன்றியம் அதன் தலைவர் செழியன் பேரின்பநாயகம் தலைமையில் கூடி மருதமுனை சம்பவத்தைக் கண்டித்துள்ளது.

இதே போல் காத்தான்குடி பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனமும் இச்சம்பவத்தைக் கண்டித்து அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது. "பாண்டிருப்பில் இடம்பெற்ற துரதிருஷ்டவசமான சம்பவங்கள் எமக்கு மிகுந்த அதிர்ச்சியையும் ஆழ்ந்த வேதனையையும் ஏற்படுத்தியுள்ளன. சில சுயநலமிகளாலும், சந்தர்ப்பவாதிகளாலும் எமது உறவுகளைச் சீர்குலைக்கத் திட்டமிட்ட சதிகள் நிறைவேற்றிய போதும் இரு சமூகங்களினதும் பண்பான முயற்சிகளால் உறவு மீண்டும் புத்துயிர் பெற்றுள்ளது என அவ்வறிக்கை கூறுகிறது.

இந்நிலை எதிர்காலத்தில் அரசியல் அயோக்கியத்தனத்திற்கும் பெரும் சவாலாக உருவாகிவிட்டதும் மறைக்கப்படமுடியாத ஒன்று. ஏனெனில் கண்டிக்கப்பட வேண்டிய விடயம் ஒன்றிற்காக தமிழ்-முஸ்லிம் மக்கள் ஒற்றுமைப்பட்டதானது எதிர்காலத்தில் தங்களின் அடாவடித்தனங்களுக்கு எதிரானதாகவும் அமைந்துவிடும் என்பதை இப்பிரதேசத்தின் அரசியல் வாதிகள் நன்கு உணர்ந்து விட்டதாகவும் அதற்காக அவர்கள் தற்போது பயப்படுவதாகவும் அரசியல்வாதிகளின் நெருக்கமானவர்களிடம் இருந்து அறியக் கூடியதாக உள்ளது. அத்தோடு இதுவரை மக்கள் எது நேர்ந்தாலும் தம்மிடம் வரவேண்டும் என்ற நிலை தம் கண் முன்னாலேயே அடிபட்டுப் போனதை மட்டக்களப்பில் இருந்த அனைத்து அரசியல்வாதிகளுமே கண்கூடாகக் கண்டு கொண்டார்கள்.

இந்த எழுச்சி, ஆரோக்கியமான போக்கு என்பன சரியாக வளர்த்தெடுக்கப்பட வேண்டும். சரியாக நெறிப்படுத்தப்பட வேண்டும் என்பதே தற்போது எல்லோருடைய எதிர்பார்ப்புமாகும்.

மக்கள் தங்களுடைய பிரச்சினைகளை தமது கரங்களிலேயே எடுத்துக் கொண்டு அதற்கான ஆக்க பூர்வமான செயற்பாடுகளில் ஈடுபட்டமை, தொடர்ந்தும் மக்களை ஏய்க்க முடியாது என்ற உண்மையை சுட்டி நிற்கின்றது.

# யாழ்ப்பாணம்: மக்களை துன்புறுத்துவதில் மகிழ்ச்சி!

பலாலி இராணுவ முகாமிலிருந்து பல திக்குகளிலும் புறப்பட்ட இராணுவத்தினர் வழியில் தென்படுகின்ற பொது மக்களின் அனைத்து சொத்துக்களையும் சேதப்படுத்திய வண்ணமே தங்கள் பயணங்களை மேற்கொள்கின்றனர். இதைத் தொடர்ந்து வரும் 'அழிப்புக்குழு' பொதுமக்களின் வீடுகளிலுள்ள பெறுமதி வாய்ந்த பொருட்களை அழிப்பதிலும், கொள்ளையடிப்பதிலும் ஈடுபடுகின்றது. பொருளாதார, கல்வி, கலாசார பெறுமானங்களை, அடையாளங்களை எல்லாம் அழிப்பதற்கான இவ்விராணுவ 'அழிப்புக்குழு' மேற்கொண்டு வருகின்றது. அனேகமான எல்லாப் படித்தவர்களதும் வீடுகளிலிருந்த புத்தகங்கள் ஒன்றில் சேதப்படுத்தப்பட்டோ அல்லது அழிக்கப்பட்டோ விடுகின்றன. இந்த அழிப்புகட்கு பின்னால் வெளித்தெரியாத ஒரு சக்தி இருந்து அவர்களை இயக்குவது, அவர்களது நடவடிக்கைகளைப் பார்க்கும் போது தெரிகிறது. இக் கொள்ளையர்களின் கைகளால் எழுதப்பட்ட சுவர் எழுத்துக்கள் இதை உறுதி செய்கின்றன.

இன்னொரு மூன்றாவது குழுவும் இயங்குவது தெரிகிறது. இக்குழு மரங்களை அழிப்பதில் ஈடுபடுகிறது. தென்னை, பனை மற்றும் பழ மரங்களெல்லாம் அழித்தொழிக்கப்பட்டு வளமிழக்கச் செய்யப்படுகின்றன. வீட்டின் கூரைகள், ஜன்னல்கள் எல்லாம் சூறையாடப்பட்டு இராணுவக் காவலரண்களை பலப்படுத்தவும் வடிவமைக்கவும் பயன்படுத்தப்படுகின்றன. பயிர் நிலங்கள் அரண்கள் அமைப்பதற்காகக் கிண்டிக் கிளறப்படுகின்றன.

அரசாங்கம் மக்களை மீண்டும் வந்து குடியேறுமாறு அழைக்கின்றது. அவர்கள் வந்து எங்கேதான் குடியிருப்புது. வானம் பார்க்கின்ற, சுற்றிவர சுவர்களுடைந்த கட்டடங்களின் காட்டுக்குள்ளேயா? புலிகள் இருப்பதாக கூறியே வீடுகள் துவம்சம் செய்யப்படுகின்றன. ஆனால் வீடுகளும் பொருட்களும் புலிகளுடையது அல்லவே-மக்களுடையவை அவர்கள் மறந்து விடுகிறார்கள்? அது மாத்திரமல்ல... உள்ளூர் வாசிகள் சிலரும் இராணுவத்துடன் சேர்ந்து பெறுமதியான வீட்டுப் பொருட்களையெல்லாம் எடுத்துச்செல்கின்றனர். இது தொடர்கின்ற ஒரு நிகழ்வாக உள்ளது.

இவ்வாறு எடுத்துச் செல்லப்படும் பெறுமதியான தளபாடப் பொருட்களில் ஒரு பகுதி விறகுக்காகவே பயன்படுத்தப்படுகின்றது.

இன்னும் சிலரோ இராணுவத்துடன் சேர்ந்து கூரைகளை அகற்றி வேறு ஆட்களுக்கு விற்கிறார்கள். இந்தக் களவு வியாபாரம் கண்டு கொள்ளப்படுவதில்லை. கள்வர்களை பிடிக்க பொலிஸார் சென்றால் தானே அவர்கள் பயப்பட. அங்கு எல்லாம் வழமையற்ற நிகழ்வுகள் தான். உண்மையில் இராணுவக் கட்டுப்பாட்டில் உள்ள பிரதேசங்களில் உண்மையில் ஒரு இராணுவ அரசாங்கத்தின் ஆட்சியே நடைபெறுகிறது. இது இங்கு மட்டுமல்லாமல் இன்னும் பல இடங்களுக்கும் பரவினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை

ஆயிரக் கணக்கான மக்கள் தெற்கு நோக்கிப் புறப்பட காத்து நிற்கிறார்கள். ஆனால் இந்தப் புறப்பாட்டு நடவடிக்கையில் இராணுவத்தின் ஒத்துழைப்பு திருப்தியற்றதாகவே உள்ளது. எல்லோரும் சந்தர்ப்பங்களைப் பயன்படுத்தி பணம் சம்பாதிக்கவே முயல்கிறார்கள். சதொச போன்ற நிறுவனங்களும் பண உழைப்பையே கருதிச் செயல்படுகின்றன. ஆனால் அரசாங்கமோ தாங்கள் தமிழ் மக்களுக்கு உதவிக்கொண்டிருக்கிறோம் என்று சொல்லிக்கொண்டு இருக்கிறது. போக்குவரத்துக்கு ஈடுபடுத்தப்படும் பஸ்கள், வான்கள் என்பனவும் கடுமையான இடைஞ்சலுக்கு உள்ளாகின்றன. இதனால் மாணவர்கள் உத்தியோகத்தர்கள் ஆசிரியர்கள், வியாபாரிகள், நோயாளிகள் என பல தரப்பினரும் பாதிப்புக்குள்ளாகின்றனர். யாழ்-பருத்தித்துறை, யாழ்-சாவகச்சேரி, பயணப் பாதைகளில் எண்ணற்ற தடை முகாம்களில் இவற்றில் எவருக்குமே விதிவிலக்கில்லை. கர்ப்பினிப் பெண்கள், குழந்தைகளை ஏந்திய பெண்கள், வயோதி பர்கள், குழந்தைகள், சிறுவர்கள் எல்லோ ருமே சுடும் வெய்யிலில் மணிக்கணக்காக நின்று காய்கிறார்கள். சிறுவர்களது உடல் பரிசோதிக்கப்படுவதும், அவர்களது புத்தகங்கள் பரிசோதிக்கப்படுவதும் பார்ப்பவருக்கு கிரக்கமூட்டுகின்ற நடவடிக்கைகளாகும். மக்களின் வேதனையில் மனங்குளிர்கிறார்கள் இராணுவத்தினர். ஒவ்வொருவரையும் புலிகளாக சந்தேகித்து துருவித் துருவி ஆராய்வதில் அதீத சுகம் அவர்களுக்கு.

யாழ் நகரில் நடக்கின்ற விடயங்களில் முக்கியமானது இளைஞர்கள், யுவதிகளின் கண்மூடித்தனமான கைது. எந்தநேரமாயினும் எந்த இடமாயினும் சந்தேகமென்றால் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டு துன்புறுத்தப்படுகிறார்கள். இதை இராணுவம் மறுக்கிறது. எனினும் நிலைமைகள் ஹிட்லர் காலத்து பெல்சன் (belsen) முகாம் நிழ்வுகளை ஒத்ததாக இருக்கின்றன. இராணுவத்தின் துன்புறுத்தல் நடவடிக்கைகள் இருப்பதாக வதந்திகள் நிலவுகின்றன. வெள்ளை வேன்களின் நடமாட்டமும் அடாவடித்தனங்களும் அதிகரித்திருக்கின்றன. மனித உரிமை அமைப்புக்களாக தங்களை காட்டிக் கொண்டிருக்கிற அமைப்புக்கள் கூட இதனைக் கண்டு கொள்வதாக இல்லை. இவற்றை அரசாங்கத்துக்கு தெரியப்படுத்துகின்ற பணியையாவது இவை செய்வதில்லை. ஒரு மாதத்துக்கும் மேலாக வலிகாமம் மேற்கு-யாழ்ப்பாணம் பயணப்பாதையில் தடை போடப்பட்டிருந்தது. இப்போது தான் மாணவர்கள் ஆசிரியர்கள் வியாபாரிகள் எனச் சிலருக்கு பயணம் அனுமதிக்கப்பட்டிருக்கிறது. புலிகள் அந்தப் பகுதியில் இருப்பார்கள் என்ற சந்தேகத்திலேயே இவ்வாறு மேற்கொள்ளப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது. எனினும் அப்பாவி மக்களுக்கு ஏன் இத்தண்டனை? புலிகளுடன் சண்டையிட வேண்டுமானால் அவர்களுக்கு எதிரான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றால் அவர்களுடன் சென்று சண்டையிடுவது தானே ஏன் மக்களுக்கு இடையூறுகளையும் கஷ்ரங்களையும் ஏற்படுத்துகிறீர்கள்?

வடக்கில் மீள் குடியேற்றம் என்பது பல வருடங்கள் தேவைப்படுகின்ற ஒரு நிகழ்வாகும். கிழக்கிலும் இதே நிலைமை தான். வெளிநாட்டு நிறுவனங்கள் நன்நோக்கோடு மறுசீரமைப்புக்கான நிதியுதிகளை வழங்குகின்றன. எனினும் இவ்வாறான நிலையில் அவர்களின் நோக்கங்கள். நிறைவேறுவதில்லை. இவ்வாறானவர்கள் செய்யவேண்டியது ஒன்றுதான் உள்ளது. அதாவது எரிந்து கொண்டிருக்கும் இந்த இனப்பிரச்சினையை உடனடியாகத் தீர்த்து வைக்குமாறு அரசுக்கு நெருக்குதல்களை வழங்குவது தான். பிரச்சினை தீர்க்கப்படாது மேற்கொள்ளப்படுகின்ற எது வித நடவடிக்கையும் எந்தப் பயனையும் அளிக்கப் போவதில்லை. ஆனால் அரசாங்கம் இப்போது இவ்வாறான நிலைமைகளுக்கு நேர்மாறாக பாலாறும், தேனாறும் ஓடும் ஒரு பிரதேசமாகவே யாழ்ப்பாணத்தை சர்வதேச சமூகத்துக்கு காட்டிக்கொண்டிருக்கிறது.

— சந்யா —

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





சொல்வதைத் தவிர வேறு வழியில்லை

# மருதமுனை: வெட்கித் தலைகுனிகிறது..!

தொண்ணூறுகளில் எரியும் தணலாய் தகித்துக்கிடந்தது கிழக்கு. விடுதலைப் புலிகளின் முஸ்லிம்கள் மீதான படுகொலையின் பின் தமிழர்களுக்கும், முஸ்லிம்களுக்குமிடையே எழுந்த கொடூரத்தின் பிசாசு, இயற்கை வனப்புமிகு கிழக்கை பிணக்காடாக்கியது. தென்கிழக்கின் பொத்துவில் தொடக்கம் வாழைச்சேனைவரை இனக்கொடூரங்களின் கரங்கள் தமிழர், முஸ்லிம்களின் வாழ்வைச் சூறையாடின.

ஆயிரக்கணக்கான தமிழர்களும், முஸ்லிம்களும் தங்கள் வாழ்விடங்களிலிருந்து துரத்தப்பட்டனர். கோடிக்கணக்கான சொத்துக்கள் அழிக்கப்பட்டன. கட்டிட இடிபாடுகளின் சூழலும் மக்கள் இல்லாத மயானங்களுமாகின கிழக்கின் பல கிராமங்கள். தமிழர்களுக்கும், முஸ்லிம்களுக்குமிடையே இருந்த நெருக்கம் வெறுப்பின் இடைவெளியானது. இதன் விளைவுகளால் தமிழர்களதும், முஸ்லிம்களதும் பொருளாதாரத்தளம், கலாசார, பண்பாட்டுத்தளம் பெரிதும் நலிவுக்குள்ளாயிற்று. தமிழர்களுக்கும், முஸ்லிம்களுக்குமிடையேயிலான குரோதம் பொருளாதார நலிவும், எதிர்ச்சக்திகளின் அரசியல் இலாபங்களுக்கான வாய்ப்பையையும் தந்தது.

காலம் எப்போதும் போல் தொடர்ந்தும் ஒரே மாதிரியாகக் கொடூரத்துடன் இருப்பதில்லை. அழிவுகளினதும், இடிபாடுகளினதும் இழப்புகளினதும் அனுபவங்களிலிருந்து மனிதாபிமானம், இனவுறவு துளிர் விடத்தொடங்கியது. 92களின் பிற்பகுதியில் இச்சூழலைத் தோற்றுவித்ததன் பங்களிப்புள்ளவர்களாக மனிதாபிமானமிக்க தமிழர், முஸ்லிம் சக்திகளும் தமிழ், முஸ்லிம் எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள், கலைஞர்களும், உள்ளனர்.

'92இன் பின்னான ஒவ்வொரு பொழுதுகளிலும் தமிழர்களும், முஸ்லிம்களும் கிழக்கில் நெருங்கிவர ஆரம்பித்தனர். காலம் தந்த இன சௌஜன்ய சூழலை, உறவை பாண்டிருப்பு திரௌபதியம்மன் கோயில் சம்பவமும் அதன் பின்னரான மருதமுனை தமிழர்கள் மீதான படுகொலையும் சிதைத்து விட்டிருக்கிறது. மருதமுனை சமாதானத்தின் கிராமம். அக்கிராமத்தில் அப்பாவித் தமிழ் மக்கள் கோரமாகக் கொல்லப்பட்டிருப்பதானது தமிழர்களுக்கும், முஸ்லிம்களுக்குமிடையிலான ஐக்கியப்பட்ட சமத்துவத்தைக் கோரிநின்ற அனைவருக்கும் பலத்த அடிதான் என்பதில் சந்தேகமில்லை.

இனவாத சக்திகள் மட்டும் இக்கொடூரங்களின் விளைவால் சந்தோஷம் கொள்ள மனிதாபிமானத்தின் மீது அக்கறை கொண்ட அனைத்துத்தமிழர்களும், முஸ்லிம்களும் மருதமுனைப் படுகொலையைக் கண்டித்து இருக்கின்றனர். 1985 ஏப்ரலில் தமிழர் முஸ்லிம்களுக்கிடையேயான யுத்த முனைப்புக் கொண்ட முதலாவது பாரிய தமிழர், முஸ்லிம் கலவரங்கள் நடந்த போதும் மருதமுனைக் கிராமம் தமிழர்களுக்கு அபயம் தந்தது. அங்கு எதுவும் நடக்கவில்லை. 90களிலும் மருதமுனை சமாதானக் கிராமமாகவே இருந்தது. ஆனால் இன்று அது அப்பாவி தமிழர்களின் உயிர்களை ஆவேஷம் கொண்டு பிரித்த மண்ணாக வெட்கித்து நிற்கிறது.

விடுதலைப் புலிகளுக்கு முஸ்லிம் ஊர்காவல் படை தொடர்பான தெளிவும் முஸ்லிம்களுக்கு அப்பாவி தமிழ் மக்கள் தொடர்பான தெளிவும் உடனடியாக ஏற்படல் வேண்டுமென்ற அவசித்தை இச்சம்பவம் அழுத்திய நிற்கிறது. முஸ்லிம் ஊர்காவல் படை அமைக்கப்பட்ட சூழலானது 1985களில் இருந்து தொடங்கினாலும் 1990களில் விடுதலைப் புலிகளால் முஸ்லிம் கிராமங்கள் தாக்கப்படுகின்ற ஒரு சூழலில் எழுந்த தேவையின் காரணம்தான் அதற்கான அடிப்படை நியாயமாயிற்று. கூட விடுதலைப்புலிகள் முஸ்லிம் கிராமங்கள் மீதான தாக்குதல்களை கைவிட்டு விட்டார்கள் என உத்தியோகபூர்வமாக அதன் தலைமையினால் வெளிப்படுத்தப்படாதவரை முஸ்லிம் ஊர்காவல் படைகளின் அத்தேவையை உதாசீனம் செய்துவிட முடியாது.

இவ் ஊர்காவல் படையினர் தமது முஸ்லிம் கிராமங்களைப் பாதுகாக்கும் பணியை விடுத்து அதற்கும்மேலாக தமிழ் மக்களை வஞ்சிக்கும் ஒரு படையாகவும் கடந்த காலங்களில் செயற்பட்டிருக்கிறார்கள். நற்பிட்டிமுனை, துறைநீலாவணை போன்ற கிராமங்களில் ஊர்காவல் 'படையினர்' அரசபடைகளோடு சேர்ந்து தமிழர்களின் வீடுகளை எரித்து அட்டகாசம் புரிந்திருக்கிறார்கள். இந்த நிலையில் விடுதலைப் புலிகள் முஸ்லிம் ஊர்காவல் படையினரை அரச இயந்திரத்தின் ஆயுதம் தரித்த படையாகப் பார்ப்பதும் தவறென்று சொல்லிவிட முடியாது! ஆகவே விடுதலைப் புலிகள் முஸ்லிம் மக்கள் மீதான பாதுகாப்பு உத்தரவாதத்தை நேர்மையுடன் வழங்க முன்வந்தால் ஊர்காவல் படையினரின் தேவையை இல்லாமலாக்கி விடலாம் எனச் சொல்ல முடியும்.

அம்பாறை மாவட்டத்தைப் பொறுத்தவரை அது இன்று தமிழ் பேசும் மக்களின் மாவட்டம் என்ற கதை பழங்கதையாகி விட்டது. கிழக்கில் அம்பாறை மாவட்டம் மாத்திரமல்ல, திருமலை மாவட்டமும், சிங்கள ஆக்கிரமிப்பாளர்களின் குடியேற்றங்களால் தமிழ் மொழி மாவட்டம் என்ற நிலை மாறி சிங்கள மாவட்டங்களாக மாறுகிற தருணத்தில் உள்ளது. ஆகவே, இந்த அபாயகரமான சூழலை தமிழர்களும், முஸ்லிம்களும் உணராது தமக்குள் சண்டையிட்டுக்கொள்வதானது சிங்கள ஆதிபத்தியத்தியத்திற்குள்ளேயே தமிழர்களையும், முஸ்லிம்களையும் இட்டுச் செல்லும்.

1920ஆண்டு கிழக்கில் 4 சதவீதமாக இருந்த சிங்களவர்கள் 1981ம் ஆண்டு குடிசன மதிப்பீட்டின் படி 24 சதவீதமாக இருக்கின்றனர். 1920ம் ஆண்டு அம்பாறை மாவட்டத்தில் 10 சதவீதத்திற்கும் குறைவாக இருந்த சிங்களவர்கள் 1981ம் ஆண்டின் குடிசன மதிப்பீட்டின் படி 33 வீதமாக இருக்கின்றனர். திருமலை மாவட்டத்தில் 1981ம் ஆண்டின் குடிசன மதிப்பீட்டின்படி சிங்களவர்கள் 34 சதவீதமாக இருக்கின்றனர். இப்புள்ளி விபரங்களின் அடிப்படையில் அம்பாறை, திருமலை மாவட்டங்கள் பறிபோகும் அபாயத்தின் இறுதிக்கட்டத்தில் இருக்கிறதென்பதும், தமிழர்களும், முஸ்லிம்களும் கிழக்கை பறிகொடுக்கும் கடைசித் தருணத்தில் நிற்கிறார்கள் என்பதும் தெளிவாய் வெளிப்பட்டு நிற்கிறது.

1981ம் ஆண்டின் சனத்தொகை கணக்கெடுப்பின்படி அம்பாறை மாவட்டத்திலுள்ள 33 சதவீதமான சிங்களவர்களோடு அதன் பின் அம்பாறை மாவட்டத்துடன் தெஹியத்த கண்டி சிங்களப் பிரதேசம் இணைக்கப்பட்டவுடன் அம்மாவட்டத்தில் உள்ள முஸ்லிம்களை விடவும் அதிகரித்த சனத்தொகை உள்ளவர்களாக மாறிவிட்டனர்.

ஆக்கிரமிப்புச் சூறையாடல் நோக்குடன் தொடந்தும் இயங்கும் சிங்கள அரசியல் தலைமைகளின் கபட நோக்குடன் சமரசம் செய்து கொண்டு முஸ்லிம்களின் இன உரிமைக்கு ஒரு போதும் போராட முடியாது என்பது இன்னும் உணரப்படவில்லை முஸ்லிம் தலைமைகளால்.

1981ம் ஆண்டின் குடிசனமதிப்பீட்டின் படி அம்பாறை மாவட்டத்தில் 33 சதவீதமான சிங்களவர்கள் 70 சதவீதமான நிலப்பரப்புக்களை தங்கள் வசம் வைத்திருப்பதானது தமிழர்களையும், முஸ்லிம்களையும் சிந்திக்க வைக்கவில்லையா? இச்செய்தி தமிழர்களினதும், முஸ்லிம்களினதும் காதுகளை நெஞ்சங்களை உணர்வுகளை எட்டியிருப்பின் ஒரு போதும் தமிழர்களும், முஸ்லிம்களும் தங்களுக்குள் மோதிக்கொள்ள மாட்டார்கள்.

நாங்கள் காரைதீவு பிரதேச சபையென்றும் நிந்தவூர் பிரதேச சபையென்றும் கருங்கொடித்தீவு பிரதேச சபையென்றும் அக்கரைப்பற்று பிரதேச சபையென்றும், கல்முனை முஸ்லிம் பிரதேச சபை கல்முனை தமிழர் பிரதேச சபை என்றும் தமிழர்களும், முஸ்லிம்களும் நிலங்களையும், வளங்களையும் பகிர்ந்துகொள்வதற்காக மோதிக் கொண்டிருக்கிறோம். நாங்கள் மோத வேண்டியவர்கள் சிங்கள ஆக்கிரமிப்பாளர்களே - தமிழர்களுக்கும், முஸ்லிம்களுக்கும் நியாயமாகச் சேரவேண்டிய நிலங்களும், வளங்களும் அவர்களிடமே இருக்கிறது. எமது மண்ணையும், எமது வளங்களையும் எமது உரிமைகளையும் ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து மீட்பது எப்போது?



# அம்பாறை: மனிதக் கேடயங்களாக மக்கள்!

அம்பாறை மாவட்டத்திலுள்ள குடியிருப்புமுனையிலுள்ள நாவிதன் வெளியைச் சேர்ந்த 23 வயதான கே.கமலாகரன் பக்கத்துக் கிராமமான 14ஆம் யுனிற்றுக்கு 12.04.1996 அன்று தனது ஆடுகளை இன்னொரு வியாபாரியொருவருக்கு விற்பனை செய்வது தொடர்பாகப் பேசச் சென்றுள்ளார். அவர் மண்டூர் சோதனைச் சாவடியில் கைது செய்யப்பட்டு, ஈவிரக்கமின்றி விஷேட அதிரடிப்படையினரால் தாக்கப்பட்டார். விசாரணைகளின் போது அவர் நாவிதன் வெளி விஷேட அதிரடிப்படை முகாமுக்குப் பதிவுப் புத்தகத்தில் கையொப்பமிடச் செல்வதாகக் கூறியுள்ளார். அதன் பின் இச்சம்பவம் தொடர்பாக எவருக்கும் சொல்லக் கூடாதென்ற கடும் அறிவுறுத்தலுடன் அவரை படையினர் விடுவித்துள்ளனர்.

நாகமணி சிவகரன் (21) நாகமணி கெங்காதரன் (26) விநாயகமூர்த்தி விஷ்ணுதரன் (22) ஆகியோர் நற்பிட்டிமுனை ஊர்காவல் படையினரின் உதவியுடன் கல்முனைப் பொலிசாரால் கைது செய்யப்பட்டுக் கல்முனைப் பொலிஸ் நிலையத்துக்கு 15.04.1996 அன்று கொண்டு செல்லப்பட்டனர். இந்நபர்கள் மூவரும் கல்முனைப் பொலிஸ் நிலையத்தில் அன்றைய தினம் முழுவதும் தடுத்து வைக்கப்பட்டு இரவு கடுமையாகத் தாக்கப்பட்டு மறுநாட் காலை விடுவிக்கப்பட்டுள்ளனர். இவர்களின் கைதுக்கு எதுவித காரணமும் சொல்லப்படவில்லை.

தம்பிலுவிலுள்ள, இல. 02 ஆம் பிரிவு சிவன் கோவில் வீதியில் வசிக்கும் சுப்பிரமணியம் சபேஷகரன் (22) 20.04.96 அன்று தனது கால்நடைகளைத் தேடி வீதி வழியாகச் சென்று கொண்டிருந்தார். மதுபோதையில் சிவில் உடையில் இருந்த விஷேட அதிரடிப் படையினர் இருவர் இந்நபரைப் பிடித்து கடுமையாகத் தாக்கிவிட்டு வீதியில் விட்டு விட்டுச் சென்றுள்ளனர். அதே தினத்தன்று இச்சம்பவத்தின் பின்பு மேற்கூறப்பட்ட அதிரடிப்படை நபர்கள் தம்பிலுவிலுள்ள மகேஸ்வரன் கல்வி நிலையத்தில் வகுப்புக்களுக்குச் சென்று கொண்டிருந்த பருவமடைந்த பெண் பிள்ளைகளை தொல்லைக்கும் அவமதிப்புக்கும் உள்ளாக்கியுள்ளனர்.

### மனிதக்கேடயங்கள்

09.04.1996 அன்று அம்பாறை மாவட்டத்தில் இருந்து பொத்துவில் அக்கரைப்பற்று நோக்கிச் சென்று கொண்டிருந்த மக்கள் மயப்படுத்தப்பட்ட போக்குவரத்துச் சேவை பஸ் ஒன்று தாண்டியடி விஷேட அதிரடிப்படையால் நிறுத்தப்பட்டது. ஆட்களையும் பொருட்களையும் சோதனையிட்ட பின் விஷேட அதிரடிப் படையினர் பிரயாணிகளை மிதிபலகையில் பயணம் செய்யப் பண்ணியதுடன், தாங்கள் ஆசனத்தில் அமர்ந்தபடியே முடிவுவரை பயணம் செய்தனர்.

இவ்வாறு அப்பாவிப் பொது மக்களை மனிதக் கேடயங்களாகப் பயன்படுத்தும் இன்னொரு சம்பவம் 10.01.1996 அன்றும் நிகழ்ந்துள்ளது.

சம்மாந்துறைப் பிரிவிலுள்ள 13ஆம் யுனிற் கிராம முகாமைச் சேர்ந்த விஷேட அதிரடிப்படையினர் 7, 15/01, 15/02 யுனிற் கிராமங்களைச் சேர்ந்த அப்பாவிப் பொதுமக்கள் 25 பேரைத் தெரிவு செய்து பலவந்தப்படுத்தி அவர்களை தமக்கு முன்னால் செல்லுமாறு துப்பாக்கிப்பிரயோகம் செய்தபடியே நெடிவத்த காட்டுப்பிரதேசத்தை நோக்கி முன்னேறினர். எதிர்த்திசையிலிருந்து எதுவித துப்பாக்கிச் சூடுகளும் நிகழ்த்தப்படாததால் அப்பாவிப் பொதுமக்கள் எவரும் காயமடையவில்லை.

17.04.1996 அன்று 18 வயது மாணவரான எம்.தேவராஜா கல்முனைக்கு அருகிலுள்ள கிட்டாங்கிப் பாலத்தைச் சேர்ந்த ஏனைய 07 பேருடன் சேர்த்து சீருடை தரிக்காத விஷேட அதிரடிப்படையினரால் மனிதக் கேடயமாகக் கொண்டு செல்லப்பட்டு மூன்று மணித்தியாலங்களின் பின் விடுவிக்கப்பட்டனர்.

ஊரணி எனும் கிராமத்தில் 11.04.1996 காலை தினசரி தமது வேலைக்குப் போகவிருந்த ஆண்கள் எல்லோரும் சுற்றி வளைக்கப்பட்டு வீதியோரமாகவுள்ள புதர் காட்டைச் சுத்தம் செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டனர். தினக்கூலியை நம்பியிருக்கும் இத் தொழிலாளர்கள் அன்றைய தமது ஊதியத்தை இழந்தனர். அதேதினம் காலை ஏழு மணியளவில் அண்மைக் கிராமமான தாண்டியிலும் கூட தினக்கூலித் தொழிலாளர்கள் வீதியோரக் காடுகளைச் சுத்தம் செய்ய நிர்ப்பந்திக்கப்பட்டனர். இக்கிராமத்தில் வாழும் ஏழைக் குடும்பங்கள் தினசரி தமது உணவுக்கு நாளாந்தக் கூலியை நம்பியே இருக்கின்றன. இத்தினத்திலும் கூட பல குடும்பங்கள் பட்டினியால் வாடின.

19.04.1996 காலை 10.30 மணிக்கு பொத்துவிலிலுள்ள அருகம்மைக் கிராமத்தில் அருகம்மை விஷேட அதிரடிப்படையால் சுற்றி வளைத்துத் தேடுதல் நடவடிக்கையொன்று ஆரம்பிக்கப்பட்டது. இந்நடவடிக்கையில் 50 படையினர் மட்டில் ஈடுபட்டனர். எல்லா ஆண்களையும் ஒரு மரத்தின் கீழ் ஒரு மணித்தியாலத்துக்கு ஒன்று கூடுமாறு கேட்கப்பட்டது. எச்சரிக்கை செய்யப்பட்ட பின்னர் அவர்கள் வீடு செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

24.04.1996 அன்று பொத்துவிலிலுள்ள இன்ஸ்பெக்ரர் ஏற்றம் அருகம்பை முகாம் அதிரடிப்படையினரால் சுற்றிவளைக்கப்பட்டு இளைஞர்கள் கைது செய்யப்பட்டனர். ஒரு மணித்தியாலத்துக்குப் பின்பு தீவிரவாதிகளுக்கு உதவி செய்ய வேண்டாமெனவும், தீவிரவாதிகள் படையினர் மீது எப்போதாவது தாக்குதல்கள் தொடுத்தால் இவ்விளைஞர்கள் கொலை செய்யப்படுவார்கள் எனவும் அச்சுறுத்தப்பட்டு விடுதலை செய்யப்பட்டனர்.

பொத்துவிலிலிருந்து, அக்கரைப்பற்றுக்கு காலையில் புறப்படும் எல்லா மக்கள் மயப்படுத்தப்பட்ட பஸ்களும் எதுவித நியாயமான காரணங்களுமின்றி ஒவ்வொரு சோதனைச் சாவடியிலும் 30 தொடக்கம் 45 நிமிடங்கள் வரை தாமதப்படுத்தப்படுகின்றன. தூர இடங்களான அம்பாறை, மட்டக்களப்பு ஆகிய இடங்களுக்குச் செல்லும் பிரயாணிகளும் அராங்க ஊழியர்களும், ஏனைய நிறுவன ஊழியர்களும் தமது வேலைத் தளங்களுக்கு உரிய நேரத்திற்குச் சென்றடைய முடிவதில்லை.

*சுயாதீனப் பிராந்திய இணை வலையமைவு (Indenpendent Regional Associated Network - I.R.A.N.) அறிக்கையிலிருந்து*


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஒரு தாயின் வயிற்றில் பிறந்தோம்!

வ.ஐ.ச. ஜெயபாலன்



1996 செப்ரெம்பர் மாதத்தின் இறுதி நாட்கள் கிழக்கு மாகாணத்தில் சீரடைந்து வரும் தமிழ் - முஸ்லிம் உறவுகளின் அத்திவாரமற்ற தன்மையை அம்மணமாக்கியுள்ளது.

கிழக்கு மாகாணத்தைப் பொறுத்து தமிழ் இயக்கங்கள் அப்பாவி முஸ்லிம் மக்களை தாக்குவதும், கொல்வதும் தமிழர்களது விடுதலைப் போராட்டமாகவும், அரச ஆதரவுடன் முஸ்லிம் தீவிரவாதிகள் அப்பாவி தமிழ் பொதுமக்களைத் தாக்குவதும் கொல்வதும் முஸ்லிம் மக்களின் விடுதலைப் போராட்டமாகவும் 1980 களின் நடுப்பகுதிகளில் இருந்தே மிகவும் காட்டுமிராண்டித்தனமாக புரிந்து கொள்ளப்பட்டிருக்கிறது. இத்தகைய காட்டு மிராண்டித்தனமான புரிந்து கொள்கை 1980களில் இருந்தே ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எப், விடுதலைப் புலிகள், ஜிகாத் என்று பொதுவாக பேசப்பட்ட முஸ்லிம் ஆயுதக்குழுக்கள், முஸ்லிம் காங்கிரசின் தீவிரவாதப் பிரிவு, முஸ்லிம் ஊர்காவல் படைகள் என சகல கிழக்கு மாகாணத்து தமிழ் - முஸ்லிம் தேசியவாத அமைப்புகளையும் வக்கிரப் படுத்தியுள்ளது.

1980களில் அஷ்ரஃபின் தலைமையில் எழுச்சி பெற்ற முஸ்லிம் தேசியவாதமும், விடுதலை உணர்வும் தமிழ் இயக்கங்களால் அரசியல் சித்தாந்த அடிப்படையிலும் தொலை நோக்குடனும், ஒரு தோழமை வளர்ச்சியாகப் புரிந்து கொள்ளப்படவில்லை. 1983ல் வெளிவந்த தேசிய இனப்பிரச்சினையும் முஸ்லிம் மக்களும் என்ற எனது ஆய்வு நூல் மேற்படி ஆபத்தான சூழலை முன் உணர்ந்ததின் விளைவேயாகும்.

கிழக்கு மாகாணத்து தமிழ் அமைப்புகள் சுயசார்பான, வன்முறைத் தன்மையுள்ள முஸ்லிம் விரோத. இனவாத வழிதவறல்களுக்கும் கிழக்கு மாகாணத்து முஸ்லிம் தேசிய அமைப்புக்கள் அரசபடைசார்ந்து வன்முறை தன்மையுள்ள தமிழர் விரோத இனவாத வழிதவறல்களுக்கும் ஆளாகிற சூழல் இக்கால கட்டத்திலேயே முளைவிட ஆரம்பித்தது.

இந்தக் காட்டுமிராண்டித்தனமான இனவாத வழிதவறல்கள் 1980 களின் நடுப்பகுகளில் மட்டக்களப்பு படுவான்கரை முஸ்லிம் கிராமங்களிலும் முஸ்லிம் குடியிருப்புக்களிலும் புலிகளும் ஈரோஸ் அமைப்பும் தவிர்ந்த ஏனைய தமிழ் இயக்கங்கள் தொடர்ச்சியாக கட்டவிழ்த்து விட்ட முஸ்லிம் இனப்படுகொலை நடவடிக்கைகளுடன் பூதாகரமாக வெளிப்பட்டது. மறுபக்கத்தில் படிப்படியாக தமது பங்கிற்கு முஸ்லிம் தேசியவாத இயக்கத்தின் தீவிரவாத பகுதிகள் அம்பாறை மாவட்டத்தில் அரச படைகளின் ஆதரவுடன் தமிழர் விரோத காட்டுமிராண்டித்தனங்களில் குதித்தன. இதன் உச்சக்கட்டமாக 1985ல் காரைதீவில் கட்டவிழ்த்து விடப்பட்ட தமிழ் இனப்பட்டு கொலைகளைக் குறிப்பிட வேண்டும்.

காக்கா அவர்களது தலைமை மட்டுமே விடுதலைப் புலிகளின் கிழக்கு மாகாண பிரிவினரை கட்டுப்படுத்தியிருந்தது. காக்கா அவர்களின் தலைமையேயன்றி அந்த அமைப்பின் சித்தாந்த அரசியல் தெளிவல்ல என்பதை பின்னர் நிகழ்ந்த முஸ்லிம் விரோத காட்டுமிராண்டித் தனங்கள் வெளிப்படுத்தின. ஈரோசும் தன்பங்குக்கு எருக்கலம்பிட்டி சம்பவத்தின் தகவல் வெளிவராத வேறு ஒரு தாக்குதலின் மூலம் ஒரு சில முஸ்லிம்களின் உயிருக்கு உலை வைத்தது.

1990 ஈழப்போர் கிழக்கு மாகாணத்து தமிழ் தேசியவாத அமைப்புக்களின் இனக்குரோதவக்கிரங்களை தெளிவாக வெளிப்படுத்தியது. அரச படைகளின் உதவியுடன் தமிழர்களது விடுதலை அமைப்புக்ளையும் போராட்டங்களையும் அழித்து விடலாம் என்று முஸ்லிம் இனவாத தரப்பினரும், தமிழர்களது விடுதலை அமைப்புகளது உதவியுடன் முஸ்லிம் மக்களது எழுச்சியையும் விடுதலை அமைப்புக்களையும் அழித்து விடலாம் என தமிழ் இனவாத தரப்பினரும் கங்கணம் கட்டிக்கொண்டு நின்ற காலமது. அம்பாறை மாவட்டத்தில் இந்த வகையில் கவிஞர் பாண்டியூரான், அவரது மகன் உட்பட பல தமிழ் முன்னணி சக்திகள் அரசபடையினரின் உதவியுடன் முஸ்லிம் தீவிரவாதிகளால் கடத்திக்கொல்லப்பட்டதும், காத்தான்குடி பள்ளிவாசல் தாக்குதல்கள் போன்று வரலாற்றில் தமிழ் மக்களை தலை குனியவைத்த இனப்படுகொலைத்தாக்குதல்களில் தமிழீழ விடுதலைப் புலிகள் ஈடுபட்டதும் இக்காலத்தில்தான். இரண்டு பக்கத்து வெறியாட்டங்களிலும் நூற்றுக் கணக்கில் முஸ்லிம் - தமிழ் அப்பாவிப் பொது மக்கள் கொன்று குவிக்கப்பட்டனர். வீடுகள் சொத்துக்கள் தீக்கிரையாக்கப் பட்டன. ஆயிரம் ஆயிரம் தமிழர்களும், முஸ்லிம்களும் அகதிகளானார்கள். இதைவிட படுபயங்கரம் இலங்கை வரலாற்றிலேயே ஒப்பாரும் மிக்காருமில்லாத உயர்ந்த மனிதாபிமானிகளான ஒன்றுமறியாத வடபகுதி முஸ்லிம் மக்கள் விடுதலைப் புலிகளால் வெறியேற்றப் பட்டமையும், முஸ்லிம் விரோத காட்டு மிராண்டித்தனம் அமைப்பு ரீதியாக அது வரை முன்மாதிரியாக இருந்த வடபகுதிக்கு எடுத்துச் செல்லப்பட்டமையுமாகும்.

வரலாற்று வளர்ச்சிப்போக்கில் தமிழ் இனவாதிகளின் பயங்கரவாதம் மட்டக்களப்பு மாவட்டத்திலும், முஸ்லிம் இனவாதிகளின் பயங்கரவாதம் அம்பாறை மாவட்டத்திலும் அமைப்பு ரீதியாக வேரூன்றியது.

1980களின் ஆரம்பங்களில் புலிகள் அல்லாத தமிழ் விடுதலை இயக்கங்களின் கிழக்கு மாகாண தலைமைகள் மீதும் 1985 காரைதீவு தாக்குதலில் முஸ்லிம் காங்கிரஸ் தலைமை மீதும் 1990களில் இடம்பெற்ற தாக்குதல்களில் விடுதலைப்புலிகள் மீதும் பகிரங்கமாகவே குற்றம் சாட்டப் பட்டுள்ளது.

1985 காரைதீவு சம்பவம் பற்றி 'ஸாஹிறா' செப்ரம்பர், டிசம்பர் 1994 இதழில் கல்முனை ஸாஹிறா கல்லூரி அதிபர் ஏ. முகம்மது ஹுசைன் பின்வருமாறு குறிப்பிடுகிறார்.

''1985ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் இருந்து 1986ம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் வரை அல்-ஹாஜ் அஷ்ரஃப் அவர்கள் பொதுவாழ்வில் இருந்து ஒதுங்கியிருந்தார். கல்முனைப் பிரதேசத்தில் அக்காலகட்டத்தில் நிலவிய தமிழ் - முஸ்லிம் கலவரங்களுக்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைமைத்துவம் தான் காரணம் என்று சில பேரினவாத கட்சிகளின் அரசியல் அடிவருடிகள் திட்டமிட்டு விசமப் பிரசாரங்களில் ஈடுபட்டிருந்த காலம் அது. தமிழ் மக்கள் மத்தியில் அஷ்ரஃப் அவர்களுக்குஇருந்த அபரிதமான செல்வாக்கை இல்லாமல் செய்யவும், தமிழ் - முஸ்லிம் உறவைக் குலைத்து சிங்களப் பேரினவாத நலன்களை குறிப்பாக அம்பாறை மாவட்டத்தில் வளர்த்துக்கொள்ளவும் அப்பொழுது முயற்சிகள் நடந்துகொண்டிருந்தன. அது மாத்திரமன்றி அல் - ஹாஜ் அஷ்ரஃப் அவர்களுக்கு அச்சுறுத்தல்களும் விடப் பட்டன. அப்பொழுது உருவாகி வந்த முஸ்லிம் தனித்துவத்தை அழித்து விடவும் பெருமுயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. அதனால் அவர் தற்காலிகமாக ஒதுங்கியிருக்க வேண்டிய நிலை உருவாகிற்று''.

விடுதலைப் புலிகளும் ஏனைய தமிழ் போராட்ட அமைப்புகளும் முஸ்லிம் காங்கிரசும் ''அப்பன் குதிருக்குள்ளே இல்லை'' என்று சிறுபிள்ளைத் தனமாக சொல்லிக்கொண்டிருப்பதை உடனடியாகக் கைவிட்டுவிட்டு விமர்சனம் சுய விமர்சனம் என்ற அடிப்படையில் தாங்கள் தம்மீதும் தமிழ் முஸ்லிம் சமூகங்கள் மீதும் சுமத்திய அழுக்குகளை கூட்டித் துடைத்து சுத்திகரிக்கவேண்டிய கடைசித்தருணமிது என்பதை துல்லியமாகக்காட்டுகின்றது.

ஓரிரு அப்பாவி முஸ்லிம்களை கொன்று சிலர் தமிழர்கள் மத்தியில் செல்வாக்கு பெறுவதற்கும் ஓரிரு அப்பாவித்தமிழர்களைக்கொன்றுபோட்டு ஒருசிலர் முஸ்லிம் மக்களது மத்தியில் செல்வாக்கு பெறுகிறதற்குமான சூழல் தமிழ் மக்களையும் முஸ்லிம் மக்களையும் சூழ விதைக்கப்பட்டிருக்கிற மிதி வெடிகளாகும். இவை தாமாக அகலாது பிறரும் அவற்றை அகற்ற மாட்டார்கள். தமிழ் - முஸ்லிம் மக்களும் தலைமைகளும் நேர்மையான விமர்சனம், சுய விமர்சனம் என்ற அடிப்படையில் இனவாத குருடு நீங்கப்பெறுவதன் அடிப்படையில் தமிழ் மக்களதும், முஸ்லிம் மக்களதும் வாழ்வும், வளமும், விடுதலையும், சுபீட்சமும் பின்னிப்பிணைந்திருப்பதை உணர்வதன் மூலம் மட்டுமே நம்மை சூழ்ந்துள்ள தமிழ் - முஸ்லிம் குரோதம் என்கிற மிதி வெடிகளை துப்பரவு செய்ய முடியும்.

மேற்படி பின்னணியின் வெளிச்சத்தில் நாம் பாண்டிருப்பில் முஸ்லிம் ஊர்க்காவல் படையினர் விடுதலைப் புலிகள் என்று சந்தேகிக்கப்படுகிறவர்களால் கடத்திக் கொல்லப்பட்டதைத் தொடர்ந்து மருதமுனையில் இடம் பெற்ற அப்பாவித் தமிழர்கள் பெண்கள், சிறுவர்கள், கொல்லப்பட்ட தமிழர் விரோத காட்டுமிராண்டித்தனம். இதனைத் தொடர்ந்து ஏறாவூரில் ஒரு அப்பாவி முஸ்லிம் (ஜனாப் சலாம்) ரெலோ அமைப்பினர் என்று சந்தேகிக்கப்படுகிறவர்களால் கடத்திப் படுகொலை செய்யப்பட்டமை போன்ற காட்டுமிராண்டித்தனங்களை ஆராய வேண்டும். மேற்படி ஆய்வின் போது பாண்டிருப்பு சம்பவங்கள் பற்றி சேதி கேட்டதும் காத்தான்குடி முஸ்லிம்கள் தமது பிரதேசத்தில் தமிழர்களுக்கு எதிரான வன்முறை எதுவும் நடந்துவிடாமல் இருப்பதை உறுதிப்படுத்தும் வகையில் அவசர அவசரமாக மேற்கொண்ட விழிப்பு நடவடிக்கைகளையும் நாம் கருத்தில் எடுக்க வேண்டும். இதற்காக காத்தான்குடியைச் சேர்ந்த பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனத்தை எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

தமிழ் - முஸ்லிம் உறவுகளை வளர்ப்பது தொடர்பாக கிழக்கு மாகாணம் முழுவதிலும் காத்தான்குடி பள்ளிவாசல்கள், முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனம் போன்றவை பணிபுரிய வேண்டும். பாண்டிருப்பு - மருதமுனை சம்பவம் தொடர்பாக எனது ஆய்வுகள் பின்வரும் விடயங்களைப் புலப்படுத்தியுள்ளது.

1. பாண்டிருப்பு திரௌபதியம்மன் கோவில் திருவிழாவுக்கு எவ்வித முகாந்தரமுமில்லாமல் முஸ்லிம் ஊர்காவல் படையினர் சென்றதும், கோயிலுக்கு வந்திருந்த பெண்களுக்கு தொல்லை கொடுத்ததும், எதிர்ப்பு கிளம்பியபோது தம்மை முஸ்லிம் ஊர்காவல் படையினர் என அடையாளப்படுத்தி மிரட்ட முனைந்தது.

2. இலங்கை அரசபடைகளின் ஒரு அங்கமான முஸ்லிம் ஊர்காவற் படையினரை புலிகள் என்று கருதுபவர்கள் கடத்திச் சென்றமை. கடத்தப்பட்ட முஸ்லிம் ஊர்க்காவற் படையினரை விசாரிப்பது, அவர்களது தமிழர் விரோத, பெண்கள் விரோத, குற்றச் செயல்கள் தொடர்பாக எச்சரித்து விடுதலை செய்வது அல்லது தடுத்து வைத்து முஸ்லிம் தலைமைகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவது என்ற யுத்த தர்மத்தை போராளிகள் கடைப் பிடித்திருக்கவேண்டும். சீரடைந்து வரும் தமிழ்- முஸ்லிம் உறவை கருத்தில் கொள்ளாமல் முஸ்லிம் ஊர்காவற்படையினரை போராளிகள் கொன்றமை.

3. ஏற்கெனவே ஒரு முஸ்லிம் கொல்லப் பட்டால் பத்து தமிழர்களைக் கொல்வது என்று சில சக்திகள் அம்பாறை மாவட்டத்தின் சில ஊர்களில் எடுத்திருக்கிற முடிவுகளின் அடிப்படையில் மருதமுனையைச் சேர்ந்த இனவாத சக்திகள் அகப்பட்ட அப்பாவி தமிழர்களை பால், வயது வேறுபாடின்றிப் படுகொலை செய்து வெறிக்கூத்தாடியது.

4. காத்தான்குடி பள்ளிவாசல்கள் முஸ்லிம் நிறுவனங்களின் சம்மேளனம் காத்தான்குடி தலைநிமிரத் தக்கவகையில் எடுத்த தமிழர் பாதுகாப்புக்கான நடவடிக்கைகள்.

5. ஏறாவூரில் ரெலோ என்று சந்தேகிக் கப்படுகிறவர்கள் அப்பாவி முஸ்லிம் ஒருவரை கடத்திச் சென்று படுகொலை செய்த காட்டுமிராண்டித்தனம்.

கடந்த கால சம்பவமும் மேற்படி சம்பவக் கோவையும் நமக்கு புலப்படுத்துவது என்ன?

முஸ்லிம்களை அச்சுறுத்தி வைப்பதன் மூலம்தான் தமிழர்களது பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியும் என்கிற விடுதலைப்புலிகள் உட்பட சகல தமிழ் போராளிகள் குழுக்களையும் சார்ந்த தமிழ் தீவிரவாத சக்திகள் நம்புவதும், தமிழர்களை அடித்து அச்சுறுத்திவைப்பதன் மூலம்தான் முஸ்லிம்களது பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியும் என்று அம்பாறை மாவட்டத்து ஊர்காவற்படைகள் உட்பட முஸ்லிம் காங்கிரசின் உள்ளும் வெளியிலும் உள்ள தீவிரவாதிகள் நம்புகிறதும் என்கிற அரசியல் முட்டாள்தனத்திலிருந்தும் மூர்க்கத்தனத்திலிருந்தும் ஊற்றெடுத்ததே இன்றைய அப்பாவி முஸ்லிம்- தமிழ் மக்களது கண்ணீரும், ரத்தமும் தோய்ந்த கதை.

இந்த அரசியல் முட்டாள்தனத்திலிருந்து விடுபடாமல் தமிழர்களுக்கும் வாழ்வில்லை; முஸ்லிம்களுக்கும் வாழ்வில்லை.

வடகிழக்கு மாகாண முஸ்லிம்கள் பிரிக்க முடியாத ஒரு தேசிய இனம் என்பதை விடுதலைப் புலிகளும், அம்பாறை மாவட்டம் உட்பட வடகிழக்கு மாகாண தமிழர்கள் பிரிக்க முடியாத ஒரு தேசிய இனம் என்பதை முஸ்லிம் காங்கிரசும் ஏற்கிறவரை இந்த முட்டாள் தனத்திலிருந்து நமக்கு விடிவில்லை. இந்த அரசியல் முட்டாள் தனத்தின் ஒரு வெளிப்பாடே முஸ்லிம்களை மாவட்டமாக பிரித்து சமரசம் செய்ய விரும்புகிற, தமது தலைமையை முஸ்லிம்கள் மீது திணிக்க விரும்புகிற தமிழர்களது அமைப்புகளதும், விடுதலைப் புலிகளதும் நீண்ட கால அணுகுமுறை.

மேற்படி அரசியல் முட்டாள்தனத்தின் மற்றொரு வெளிப்பாடே தமிழ்த் தேசிய இனத்தை பிளவுபடுத்தி கையாளுவது என்கிற அடிப்படையில் வடகிழக்கு மாகாணத்தைப் பிளவுபடுத்துவதற்காகவும், அல்லது தமிழ்த் தேசிய இனத்தின் பிரிக்கமுடியாத அங்கமான அம்பாறை மாவட்ட தமிழர்களை பிரித்தெடுத்து முஸ்லிம்களது தலைமையை அவர்கள் மீது திணிப்பதற்குமான முஸ்லிம் தேசிய அமைப்புகளதும் முஸ்லிம் காங்கிரசினதும் நீண்ட கால அணுகுமுறை. இந்த இரண்டு அணுகுமுறைகளுமே இனவாதங்களின் குரலாகும்.

இத்தகைய அணுகுமுறையை இத்துடன் விட்டுவிடுங்கள் என விடுதலைப்புலிகள் உட்பட சகல தமிழ் அமைப்புக்களுக்கும், முஸ்லிம் காங்கிரஸ் உட்பட சகல முஸ்லிம் அமைப்புக்களுக்கும் தமிழ் - முஸ்லிம் மக்கள் ஒரே குரலில் உரத்துச் சொல்ல வேண்டும்.

சந்திக்கிறபோது அம்மணமாக நிற்கிற தமிழ் - முஸ்லிம் அறிஞர்களும், கலைஞர்களும், அரசியல் சமூக பிரமுகர்களும், விமர்சனம் சுயவிமர்சனமடிப்படையிலான நேர்மையான கலந்துரையாடலை தவிர்த்து ''உங்கள் உடைகள் அழகாக இருக்கிறது எங்கே வாங்கினீர்கள்?'' என குசலம் விசாரித்து பிரிகிறது இனியும் நமக்கு நன்மை செய்யப்போவதில்லை.

விடுதலைப் புலிகளும் ஏனைய தமிழ் அமைப்புகளும் காக்கா போன்று முஸ்லிம் மக்கள் தொடர்பாக அறிவும், அக்கறையுள்ளவர்களை முன்னிலைப்படுத்துவதும் முஸ்லிம் காங்கிரஸ் உட்பட சகல முஸ்லிம் அமைப்புகளும் பசீர் சேகு தாவுத் போன்ற தமிழ் மக்கள் தொடர்பாக அறிவும் அக்கறையும் உள்ளவர்களை முன்னிலைப் படுத்துவதும், தமிழ் முஸ்லிம்களிடையேயான ஒற்றுமைக்காக பாடுபட்டுவரும் மருதூர் பஷீத், அபூநிதால், இம்தியாஸ், கலாநிதி ஹஸ்புல்லா, சுபியன் மௌலவி போன்ற அறிஞர்கள், எழுத்தாளர்கள், கலைஞர்களை முன்னிலைப்படுத்துவதும் காலத்தின் தேவையாகும்.

*ஒரு தாயின் வயிற்றில் பிறந்தோம்*
*நாம் சண்டையிட்டாலும்*
*சகோதரர் அன்றோ!*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net




# ஈராக் மீதான தாக்குதல்: அமெரிக்காவின் ஆக்கிரமிப்பு நடவடிக்கையே!

—பேராசிரியர். நோம் சொம்ஸ்கி





*மசாசுசெற் தொழிநுட்ப நிறுவனப் பேராசிரியரும், மொழியியல் விஞ்ஞானத்துறை முன்னோடியும், அமெரிக்க வெளியுறவுக் கொள்கை வல்லுநருமான நோம் சொம்ஸ்கி அவர்கள் அமெரிக்காவின் ஈராக் மீதான தாக்குதல் குறித்து இந்தியாவின் புறொண்ட் லைன் (Front line) சஞ்சிகைக்கு அளித்த பேட்டி இங்கு தரப்படுகிறது. அமெரிக்கா பல வருடக்கணக்காகக் கட்டிக் காத்து வந்த தனது அரசியல், இராணுவ ஒழுங்குகளின் உச்ச மேலாட்சியை சதாம் ஹுசைன் குழப்பாதிருப்பதை உத்தரவாதப்படுத்தவே அமெரிக்கா ஈராக் மீது ஏவுகணை கொண்டு தாக்குகிறது எனக் கூறுகிறார் பேராசிரியர் நோம் சொம்ஸ்கி.*



***அமெரிக்கா, ஈராக் மீது அண்மைய சுற்று ஏவுகணைத் தாக்குதல்களை ஆரம்பித்தது ஏன்?***

சதாம் ஹுசைன் தனது சொந்த மக்களுக்கெதிராகச் செய்யும் துஷ்பிரயோகங்களுக்குப் பதில் நடவடிக்கையாகவே அது செய்யப்பட்டது என ஜனாதிபதி கிளின்ரன் கூறியுள்ளார்.

உண்மையில் அது ஒன்றும் சதாமின் துஷ்பிரயோகங்களுடன் எத்தகைய தொடர்பையும் கொண்டதல்ல. இத்தாக்குதல்கள் சதாமின் துஷ்பிரயோகம் நிகழ்ந்து கொண்டிருக்கும் வட பகுதியில் ஈராக் மேற்கொள்ளும் நடவடிக்கைகளுடன் தொடர்பற்றவை.

இந்நடவடிக்கைகள் சேதக்கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் என்றே கருதப்பட வேண்டும். அமெரிக்கா அப்பிராந்தியத்தில் நீண்ட காலமாக வைத்திருக்கும் தனது நிலையைப் பேண முயல்கிறது. 1991 வளைகுடா யுத்தத்தின் மூலம் அமெரிக்கா வளைகுடா பிராந்தியத்திலான தனது நிலையைப் பேணத்தக்க ஒழுங்குகளை மேற்கொள்வதனை மிகவும் குறிப்பான வடிவில் செய்திருந்தது. இந்த ஒழுங்குகளை சதாம் ஹுசைன் குழப்பிவிடாமல் இருப்பதை உறுதி செய்து கொள்வதே அமெரிக்காவின் இன்றைய தேவையாகும். அமெரிக்காவின் இந்த ஒழுங்கமைப்புகளின் ஒரு அம்சமாக அது இப்பிராந்தியத்தின் தனது இராணுவ சட்டாம்பிள்ளைத் தனத்தையும், பிராந்திய அரசுகள் மற்றும் அரசியலில் தனது விருப்பங்களைத் திணிப்பதையும் தொடர்ந்து பேணி வருவதை தனது கடமையாக எடுத்துக் கொண்டுள்ளது. ஜனாதிபதி கிளின்ரன் எடுத்த இந்தத் தாக்குதல் நடவடிக்கை ஒரு குறியீடு போல அமைந்த நடவடிக்கையாகும். உண்மையில் இத்தாக்குதலின் போது கொல்லப்பட்ட மக்களுக்கு இது ஒன்றும் ஒரு குறியீட்டு நடவடிக்கையாக இல்லாவிட்டாலும் பிராந்தியத்தின் பொதுத்திட்டப்போக்கில் இது ஒரு குறியீட்டுத் தன்மைவாய்ந்தது தான். அதாவது, சதாம் ஹுசைன் அண்மைக் காலமாக உண்மையில் பெற்று வரும் வாய்ப்புக்கள் மூலமாக இப்பிராந்தியத்திலுள்ள தனது நிலைகளைக் குலைக்காமல் இருப்பதை உத்தரவாதம் செய்வதற்காக செய்யப்பட்ட ஒரு தாக்குதலே இதுவாகும்.

ஈராக் தொடர்பாக கூறுகையில், சதாம் ஹுசைனுக்கு மாற்றீடாக அவருக்கு கிட்டத்தட்ட சமமான சக்தி வாய்ந்த, இரும்புக்கரத்துடன் ஆட்சி நடத்தக்கூடிய உறுதியான மனிதரொருவரை தன்னால் கண்டுபிடிக்க முடியும் என்றும் கவர்ச்சிகரமாகப் பிரச்சாரம் செய்திருந்தது அமெரிக்கா.

வடஈராக்கில் கருத்து வேறுபாடு கொண்டுள்ள பல குழுக்களுக்கு அமெரிக்கா ஆதரவு அளித்து வருகிறது. அவற்றுள் சில அடிப்படையில் இராணுவத்தன்மை கொண்டவை. சில உண்மையிலேயே ஜனநாயகத் தன்மை கொண்டவை. (இவற்றால் அமெரிக்காவுக்கு மிகச் சிறியளவு பயன்களே இருந்தன.) ஆனால், பர்சானி (Barzani) குழுவுக்கு ஆதரவு வழங்குவதற்காக இக்குழுக்கள் மீது நடாத்தப்பட்ட சதாம் ஹுசைனின் தாக்குதலினால் முற்றுமுழுதாக துடைத்து அழிக்கப்பட்டன. சதாம் ஹுசைனினால் அனுப்பி வைக்கப்பட்ட பாதுகாப்பு, உளவுத்துறை அதிகாரிகள் தம்மால் முடிந்தளவுக்கு மாற்றுக்கருத்துடைய குழுக்களைக் கண்டுபிடித்துக் கொலை செய்துள்ளதாகத் தெரியவருகிறது. இது சீ.ஐ.ஏயின் மேற்கூறிய உத்தேச நடவடிக்கையான சதாம் ஹுசைனுக்கு ஒரு வித சமனான திடமான நபரொருவரை மாற்றீடு செய்யும் உத்தேசத்தை சாத்தியமற்றதாக்கி விட்டுள்ளது. இந்த நடவடிக்கை சதாம் ஹுசைனைப் பொறுத்தவரை அவர் பதவியில் தொடர்ந்து இருப்பதற்குரிய வாய்ப்பை ஏற்படுத்தித் தந்துள்ளது.

சதாம் ஹுசைன் தான் எதிர்பார்த்த படியே அமெரிக்காவுக்கும், இப்பிராந்தியத்திலுள்ள அமெரிக்க சார்பு நாடுகளுக்குமிடையே முறிவை ஏற்படுத்துவதிலும் வெற்றி பெற்றார். இந்நடவடிக்கைபற்றி இந்நாடுகள் எதுவுமே பெரிய மகிழ்ச்சியைக்காட்டிக்கொள்ளவில்லை. அமெரிக்காவின் மிகுந்த ஆதரவுநாடான இஸ்ரேல் கூட ஈராக்கை விட ஈரானை அமெரிக்கா தாக்குவதையே அதிகம் விரும்புகிறது. வட ஈராக்கில் ஈராக் தலையிடுவதற்கு ஒருவாரம் முன்பதாக ஈரான் தலையிட்ட போதும் அதுபற்றி அமெரிக்கா எத்தகைய எதிர்ப்பையும் வெளிப்படுத்தியிருக்கவில்லை.

துருக்கி குழப்பமான நிலையொன்றையே கொண்டுள்ளது. அது ஈராக்குடனும், ஈரானுடனும் நல்லுறவுகளை ஏற்படுத்தவே முயல்கிறது. அதேசமயம் வட ஈராக்கின் பெரும் பகுதியொன்றை துருக்கி தான் எடுத்துக்கொள்ளவும் முயல்கிறது. இது அமெரிக்காவின் நோக்கங்களுக்கு முற்றிலும் எதிரானதாகும். சவுதி அரேபியாவும், வளைகுடா இராச்சியங்களும் (Gulf Emirates) தமது சொந்த மக்கள் பற்றிக் கவலைப்பட வேண்டியுள்ளது. அவர்களுள் எவருமே ஈராக் மீதான அமெரிக்கத் தாக்குதலொன்றையிட்டு மகிழ்ச்சியாக இல்லை. இது ஈராக் ஒரு அரபு நாடு என்பதால் ஏற்பட்ட ஒன்றல்ல, மாறாக அவர்கள் ஈராக்கை விட ஈரானுக்கே அதிகம் அஞ்சுகிறார்கள். சதாம் ஹுசைன் இத்தகைய பிளவுகளை மேலும் ஓரளவுக்கு கூர்மையாக்குவதில் வெற்றி பெற்றுள்ளார். இது அமெரிக்காவுக்கு சந்தோஷம் ஊட்டும் ஒரு செயல் அல்ல.

***இந்தத் தாக்குதல் நடந்த காலப்பகுதி அமெரிக்கத் தேர்தலுடன் எவ்வாறு தொடர்பு பட்டது?***

அநேக ஆய்வாளர்கள் அதனை ஒரு தேர்தல் ஏற்பாடு என்றே கூறுகிறார்கள். ஆனால் நான் அதை நம்பவில்லை.

தேர்தல் இல்லாவிட்டாலும் அவர்கள் அதனையே செய்திருப்பார்கள் என நான் கருதுகிறேன். இது முன்கூட்டியே எதிர்வு கூறக்கூடிய அமெரிக்க கொள்கையின் ஒரு அம்சமாகும். கிளின்ரனின் ஈராக் மீதான முதலாவது ஏவுகணைத்தாக்குதல், அவர் பதவிக்கு வந்து ஒரு சில மாதங்களின் பின்பு நடந்தது. இது அமெரிக்கா தனது பலத்தைக் காட்டுவதற்காக மேற்கொண்ட ஒரு அர்த்தமற்ற தாக்குதல் ஆகும்.

***ஈராக்கில் விமானப் பறப்பற்ற (No Fly Zone) வலயத்தை நீடிப்பதற்கான அமெரிக்காவின் பிரகடனத்தின் சட்டபூர்வத் தன்மை என்ன? உண்மையில் அமெரிக்காவின் முழு நடவடிக்கைகளினதும் சட்டபூர்வத் தன்மை தான் என்ன?***

ஐக்கிய நாடுகள் பிரகடனங்களிலோ அல்லது சர்வதேசச் சட்டத்திலோ இத்தகைய செயல்கள் எதற்கும் எதுவித இடமும் அளிக்கப்படவில்லை. அதன் காரணமாகவே ஐ.நா சபையில் பிரிட்டனைத்தவிர அமெரிக்காவுக்கு வேறுயாரதும் ஆதரவு கிடைக்கவில்லை. ஈராக் மீதான ஐ.நா பிரகடனங்கள் சர்வதேச சட்டங்களுக்கு கீழ் செல்லுபடியானவை என்றபோதும், இது போன்ற சம்பவங்களை அப்பிரகடனங்கள் உள்ளடக்கவில்லை என்பதனை எல்லோரும் அங்கீகரிக்கின்றனர்.

இதன் சட்டபூர்வத்தன்மை பற்றிக் கூறுவதானால், அமெரிக்காவின் இந்த நடவடிக்கையானது ஐ.நா. பிரகடனத்தை மீறுகின்ற ஒரு செயலாகும். இப்பிரகடனங்கள் மிகுந்த நெருக்கடியான நிலைமைகளுக்கன்றி, அச்சுறுத்தல் அல்லது சர்வதேச விவகாரங்களில் பலப்பிரயோகம் செய்வதனை சட்டவிரோதமானவை என்று கூறுகின்றன. இவ்விடயத்தில் இப்பிரகடனம் குறிப்பிடும் எந்த நிலைமைகளும் ஏற்பட்டு விடவில்லை. இப்படிச்சொல்வது எவ்விதத்திலும் சதாம் ஹுசைன் செய்த ஈவிரக்கமற்ற வன்முறைகளை நியாயப்படுத்துவதாகாது.

பல சிக்கலான விடயங்கள் இங்கு சம்பந்தப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக பர்சானியோ (Barzani) அல்லது வேறு ஏதாவது ஒரு குழுவோ இரண்டில் எது துருக்கிக்குக் கடத்தல் மூலமாகப் பணம் சம்பாதிப்பதை கட்டுப்படுத்தப்போகிறது என்ற பாரிய விடயம் தீர்க்கப்பட வேண்டியுள்ளது. ஈராக்கினூடாகத் துருக்கிக்குச் சட்டவிரோதமான எண்ணெய்க் கப்பல்கள் செல்வதன் மூலம் கிடைக்கும் வாணிபத் தரகுக்காக உள்மோதல்கள் நிலவுகின்றன. எல்லைப்புற நிலையங்களை தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பவர்கள் யாரோ அவர்களுக்கே கடத்தல் மூலமாக பெருமளவு வருமானம் கிடைக்கும். உதாரணத்துக்கு பர்சானி (Barzani) அவருக்கும் அவரது கட்சிக்குமாக வெளிப்படையாகவே பெருந்தொகைப் பணத்தை முதலிட்டுள்ளார். துருக்கிக்கு ஊடாகவே எண்ணெய்ப்போக்குவரத்து நடக்கவேண்டுமெனத்துருக்கி விரும்புவதால் கடத்தல் நடவடிக்கைகளுக்கு மிக ஆதரவாகவே துருக்கி உள்ளது. அமெரிக்கா அதன் ஆதரவு நாடுகள் இவ்விடயத்தில் ஈடுபட்டுள்ளதால், இதனை வேறு விதமாகப் பார்க்கிறது.

துருக்கி, ஈராக்கினுள் இப்போது சிலபகுதிகளை ஆக்கிரமித்துள்ளதுடன், வட ஈராக்கினுள் ஒரு இஸ்ரேலிய பாணியிலான பாதுகாப்பு வலயத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது. இது திட்டவட்டமாகவே சர்வதேசச் சட்டத்துக்கு முரணான ஒரு மீறலாகும். ஐ.நா பிரகடனத்தின் மேலோட்டமான ஆதரவைக்கூட இது கொண்டிருக்கவில்லை. ஆனால் அமெரிக்க நலன்களுக்குச் சாதகமாகவே இவை இருப்பதால் இது சரியானதாக இருக்கிறது.

இச்சம்பவத்தில் சர்வதேசச் சட்டத்தைப் பற்றிப் பேசுவதில் எதுவித அர்த்தமுமில்லை. உண்மையிலேயே மடலீன் அல்பிறைற் (Madeleine Albright) எனப்படும் கிளின்ரனின் ஐக்கிய நாடுகளுக்கான தூதர், ஒரு வருடத்துக்கு முன் ஐ.நா பாதுகாப்புச் சபையில் ஈராக்குக்கு எதிராக விதிக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாக பேசுகையில் தமது நிலைப்பாட்டைத் தெளிவாக விளங்கப்படுத்தினார். ''முடியுமானால் நாம் கூட்டாகச் சேர்ந்தும் அல்லது அவசியமாயின் தனித்து நாம் மட்டுமாயினும்'' என்று அவர் கூறினார். அதாவது, நாம் தனியாகவே செயற்பட வேண்டுமானால் நாம் அவ்வாறே செய்வோம். எவரும் எதையும் கூறுவதை நாம் கேட்கமாட்டோம். நாம் கோஷ்டி மோதல்காரர்கள். நாமே உலகத்தை இயக்குபவர்கள்.

***அண்மைய சவால்களின் பின்னணியில் ஈராக்கின் எண்ணெய்க்குப் பதிலாக வழங்கும் உணவு மருந்துகள் செயற்திட்டத்தினை ஐ.நா. விட்டுவிடுவதனை நியாயப்படுத்தக் கூடிய காரணங்கள் ஏதாவது உள்ளனவா?***

ஈராக்குக்கு எதிரான தடை சதாம் ஹுசைனைப் பாதிக்கவில்லை. ஆனால் அது ஈராக்கிய மக்களைச் சூறையாடுவதாகவே உள்ளது. லட்சக்கணக்கான மக்கள் இறந்துள்ளனர்.

சதாம் ஹுசைனைப் பலவீனப்படுத்தும் நடவடிக்கையை எடுப்பதையும், உண்மையில் அவரைப் பதவியிலிருந்து நீக்குவதையும் நியாயப்படுத்தலாம் என நான் நினைக்கிறேன். அவர் ஒரு கொலைகாரரும் கொடும் சர்வாதிகாரியுமாவார். அமெரிக்காவும், பிரித்தானியாவும் அவரை அப்பிராந்தியத்தின் மிகப்பிடித்த நண்பராகக் கருதி ஆதரவளித்த போதும் அவர் அப்படித்தான் இருந்தார். (அது 1990 வரை) மறுபுறத்தில் அவர்களது இப்போதைய நடவடிக்கை அதனுடன் எதுவித சம்பந்தமும் அற்றது; அவர்களின் நடவடிக்கைகள் சதாம் ஹுசைனின் நிலையை உள்ளூர அநேகமாகப் பலப்படுத்தும்.

இந்தத் தடைவிதிப்புகட்கு நியாயமான நியாயப்படுத்தலெதனையும் காண என்னால் முடியவில்லை.

***ஈராக்கின் எதிர்கால அரசியலுக்கும், ஈராக்கிய மக்களுக்கும் எத்தகைய எதிர்காலம் உண்டு என்று கருதுகிறீர்கள்?***

அவை மிகவும் இருள் சூழ்ந்தவையாகவே தெரிகின்றன. சதாம் ஹுசைனுக்கு உருப்படியான உள்ளூர் எதிர்ப்பு எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை. கருத்து வேறுபாடுகள் கொண்ட உள்ளக நண்பர் புரிந்து கொள்கின்றனர்.

இதுதான் அவர்களது உத்தியோகபூர்வ கொள்கை. அனைவரும் அதனைப் களையெல்லாம் அவர் அடக்கி விட்டதாகத் தெரிகிறது. சதாம் ஹுசைன் பதவியில் இருக்கும் வரை சர்வதேச நாடுகளுடன் ஈராக்கினை மீள ஒருங்கிணைப்பதற்கு சர்வதேச சூழல் அனுமதிக்கப்போவதில்லை. ஈராக்கிய மக்கள் அதே சித்திரவதைகளை எதிர்நோக்கவேண்டியிருக்குமென நான் அஞ்சுகிறேன்.

*நன்றி: புறொண்ட்லைன் 04101996*

*தமிழில்: சி.செ.ராஜா*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழ்த் தேசியவாதம் ஒரு ஆய்வு - 5

## "தமிழர்கள் வேண்டுவது தங்கள் நாட்டைத் தாங்களே ஆளக் கூடிய அரசு" - ம.பொ.சி


தமிழ்த் தேசியத்தை வரையறை செய்து வடிவம் கொடுக்க எடுக்கப்பட்ட இன்னொரு முயற்சி 'சிலம்புச் செல்வர்' ம.பொ.சிவஞானத்தினுடையதாகும். தமிழ்த் தேசியவாதத்தை ஒரு 'இரட்டை வழி நாட்டுணர்வு' (Dual Nationalism) என்பதன் வெளிப்பாடாகவே சித்திரித்து நிலைநாட்ட எடுக்கப்பட்ட ஒரு முயற்சி இவருடையது எனலாம். திராவிட இயக்கம் தன் தேசியக் கருத்து நிலையை 'இட்டுக்கட்ட' பயன்படுத்திய இனம், மொழி, நாடு தொடர்பான சில மயக்கங்களுக்கு எதிர்நிலையில் இவர் திட்ட வட்டமான தமிழ்த் தேசியக் கருத்துக்களை முன்வைத்தார். திராவிடர், திராவிட நாடு, திராவிட மொழிகள் எனப் பெரியாரும் அவர் வழிவந்தவர்களும் முழங்கிக் கொண்டிருந்த காலத்தில் ம.பொ.சி. தமிழ் இனம், தமிழர் சுயநிர்ணய உரிமை, தமிழ்நாடு என்னும் விடயங்களைக் கருத்துக்களாகவும் அரசியல் ரீதியாகவும் வலியுறுத்தி வந்தார். ஆனால் இவற்றை இந்தியக் கூட்டாட்சி (Confederation) ஒன்றிற்கு முரணற்ற கருத்து நிலையாகவே, அந்தக் கூட்டாட்சியின் அத்திவாரங்களில் ஒன்றாகவே அவர் கண்டுள்ளார். எனினும், அவர் பரப்பிய, வற்புறுத்திய தமிழ்த் தேசியக் கருத்து நிலையானது, நேரிடையானது, திட்டவட்டமானது. இந்த வகையில் இலங்கைத் தமிழரிடையே தமிழ்த் தேசியம் பற்றிய பார்வை வடிவம் பெற ம.பொ.சியின் தமிழ்த் தேசியக் கருத்து நிலையும் ஆரம்ப காலங்களில் (1940 -1950) கணிசமான செல்வாக்குச் செலுத்தியது எனலாம்.

ம.பொ.சி. அடிப்படையில் இந்திய சுதந்திரப் போராட்டத்தில் ஈடுபட்ட ஒரு காங்கிரஸ்காரர். காங்கிரசினுள் காணப்பட்ட வட இந்திய அரசியல், கலாசார ஆதிக்கத்தினால் சங்கடப்பட்ட தமிழகப் பிராமணர் அல்லாதாருள் அவரும் ஒருவர். இந்தச் சிக்கல்களின் காரணமாக ஒரு பக்கத்தில் பெரியார் காங்கிரசில் இருந்து வெளியேறி தீவிர காங்கிரஸ், பிராமண - வடநாட்டு எதிர்ப்பாளராக மாறினார். மறுபக்கத்தில் வி.க, ம.பொ.சி. போன்றோர் காங்கிரசினுள் இருந்தவாறே தமிழரின் நலன்களை வலியுறுத்தி வந்தனர். இந்த வகையில் 1946இல் ம.பொ.சி தன் கருத்துக்களைப் பரப்பவும் அரசியற் கோரிக்கைகளை விளக்கவும் 'தமிழ் முரசு' என்னும் மாத இதழை ஆரம்பித்தார். அப்பத்திரிகையின் முதல் இதழில் 'தமிழகத்தில் தமிழரசு' என்னும் கட்டுரையில் தனது பிரதான கருத்துக்களை வெளியிட்டார். அதன் சில முக்கிய பகுதிகள் வருமாறு:-

''வருங்கால சுதந்திர இந்தியாவில் சுதந்திரத் தமிழரசு அமைத்தே தீர வேண்டும். தமிழ் வளர, தமிழர் வாழ, தமிழ் நாடு செழிக்கத் தமிழரசு வேண்டும். அந்த அரசியலை வகுக்கும் சுயநிர்ணய உரிமை தமிழருக்கு உண்டு. இந்தச் சுயநிர்ணய உரிமையானது இந்தியாவிலுள்ள எல்லாத் தேசிய இனங்களுக்கும் உண்டு என்பதே எனது கொள்கை.

வயது வந்த வாக்காளர்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் கூடி தமிழகத்தில் சுதந்திர (சுயாட்சி) தமிழரசை அமைப்பர். அந்தப் புதிய தமிழரசு தனியரசுத் தத்துவத்தையே அடிப்படையாகக் கொண்டு அமைக்கப்படும் என்றாலும் கடந்த கால சுதந்திரப் போராட்டத்தில் இந்திய தேசிய இனங்கள் அடைந்துள்ள ஒற்றுமை உணர்ச்சி, விஞ்ஞான வளர்ச்சி, சர்வதேசநிலை ஆகியவை காரணமாக தமிழரசு தானே தன் விருப்பத்தின் மீது ஏனைய இன அரசுகள் அடங்கிய இந்திய சமஷ்டியில் இணைய வேண்டும்'' (மே.1946) இங்ஙனம் கூறும் ம.பொ.சிவஞானக் கிராமணியார் (இவர் நாடார் சமூகத்தைச் சேர்ந்தவர்) திராவிடர் கழகத்தின் திராவிட நாடு கோரிக்கையையும் மனதிற் கொண்டு மேலும் ''தமிழரசானது தனது கலாசாரத்துடன் நெருங்கிய தொடர்புள்ள ஆந்திர, கேரள, கன்னட இன அரசுகளுடன் கூட்டுறவு கொண்டு ஒரு துணை சமஷ்டியை நிறுவிக் கொள்ளும் உரிமையையும் உடையதாயிருத்தல் வேண்டும்.'' என ஒரு கருத்தையும் வெளியிடுகிறார்.

1946 ஒரு முக்கியமான வருடம். 1945இல் உலகப்போர் முடிவடைகிறது. போரின் பின்



இந்திய உபகண்டத்தை தம்பிடியிலிருந்து பிரிட்டிஷார் விடுவித்ததற்கான திட்டவட்டமான அறிகுறிகள் தோன்றத் தொடங்கியிருந்தன.

1946இல் இந்திய உபகண்டத்திற்கான சுயாட்சித் திட்டமொன்றை பிரிட்டிஷ் மந்திரி சபை முன்வைத்தது. இது ஒரு வகைக்கூட்டாட்சியாகக் காணப்பட்டது. பாதுகாப்பு, போக்குவரத்து, அயல்நாட்டுறவு ஆகிய மூன்று அதிகாரங்களுமே மத்திய அரசுக்குரியவை என்றும் ஏனையவை மாநிலங்களுக்கே இருக்க வேண்டுமெனவும் இத்திட்டம் கூறிற்று. இக்கால கட்டத்தில் தமிழகத்தில் பரவலாக முனைப்புப் பெற்றிருந்தது தொழிலாளர் இயக்கம். இதன் காரணமாக ம.பொ.சி. போன்ற பல அரசியற் தலைவர்களிடையே மார்க்சியத்தின் தாக்கமும் கணிசமாக இருந்தது . இந்தியத் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை பற்றி சர்வதேச கம்யூனிஸ்ட் இயக்கத்தில் இருந்த எம்.என். ராய் போன்றவர்கள் கூறி இருந்தனர். அது மட்டுமல்லாது இக்கால கட்டத்தில் பல கூட்டாட்சித் திட்டங்களும் பலரால் முன்வைக்கப்பட்டு அவை பற்றி இந்திய அரசியல் அரங்கில் பல வாதப் பிரதிவாதங்களும் நடைபெற்ற வண்ணமிருந்தன. இவற்றின் விரிவை அந்நாளில் காங்கிரசின் முக்கிய தலைவர்களில் ஒருவராக இருந்த இராஜேந்திர பிரசாத் (பின்னர் ஜனாதிபதி) எழுதிய Divided India எனும் நூலில் காணலாம். இதில் மிக விரிவாக தேசிய இனம் எனில் என்ன? சுய நிர்ணய உரிமை எத்தகையது என்பன விரிவாக ஆராயப்படுகின்றன. இந்தியக் கூட்டாட்சி பற்றியும், தனியரசுகளாக உபகண்டத்தைப் பிரிப்பது சம்பந்தமாக அக்காலத்தில் பலர் முன்வைத்திருந்த திட்டங்களை ராஜேந்திர பிரசாத் விமர்சிக்கையில் தேசிய இனங்கள் பற்றி ஸ்டாலின் கூறியதையும், அன்றைய சோவியத் கூட்டாட்சியில் தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை எவ்வாறு அமைகிறது என்பதையும் விரிவாக ஆராய்கிறார்.

காங்கிரசினுள் சுயநிர்ணய உரிமை, தேசிய இனங்கள் பற்றி அக்கால கட்டத்தில் தீவிரம் பெற்றிருந்த கருத்தாடல்கள் அதன் தமிழக உறுப்பினர்கள் மத்தியிலும் செல்வாக்குச் செலுத்தின என்பதில் ஐயமில்லை. இத்துடன் ம.பொ.சி. இளம் நண்பரான கொ.மொ. ஜனார்த்தனத்தையும் குறிப்பிட வேண்டும்.

இவர் பச்சையப்பா கல்லூரியில் மாணவராக இருந்த காலத்திலிருந்து ஏகாதிபத்தியம் பற்றியும் காலனிய நாடுகளில் அதற்கு எதிரான தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை என்பன பற்றி மாக்சிஸ்டுகளும் ஏனைய பலரும் அக்காலத்தில் கூறியவற்றையும் ஆழமாகக் கற்றவர். இவர் ம.பொ.சியின் தமிழரசுக்கழகம் உருவாகுவதில் கணிசமாகப் பங்காற்றியவர். பிற்காலத்தில் மனங்கசந்து ம.பொ.சி.யின் அரசியலிலிருந்து ஒதுங்கி விட்டார். (இவர் பற்றிய தகவலைத் தந்தவர் பெ.சு.மணி) இந்தச் சூழ்நிலையில் தான் முதல் முதலாகத் தமிழ்த் தேசியம், தமிழர் சுயநிர்ணய உரிமை என்பன திட்ட வட்டமான கருத்துக்களாக ம.பொ.சியினால் முன்வைக்கப்படுகின்றன. திராவிட இயக்கம் சுயநிர்ணய உரிமை என்ற விடயத்தைப்பற்றி என்றும் பெரிதாக அலட்டிக் கொண்டது கிடையாது. இதற்கு அது கொண்டிருந்த பிரிட்டிஷ் ஏகாதிபத்தியச் சார்பு நிலைப்பாடே காரணமாகும். தனித்திராவிட நாடு 'பிரிட்டிஷாரின் மேற்பார்வையின் கீழ் இருக்கவேண்டும் என்பதே திராவிடர் கழகத்தின் அன்றைய அரசியற் கோரிக்கை. இங்கு காலனியாதிக்கத்தில் ஒடுக்கப்பட்ட ஒரு தேசிய இனம், அதன் சுயநிர்ணய உரிமை என்ற கருத்துக்களுக்கே இடமிருக்கவில்லை. இதனாலேயே 'திராவிட தேசியக் கருத்து நிலை' சுயநிர்ணய உரிமைக் கோட்பாட்டை அதன் பிரிக்க முடியாத கருத்தியல் - அரசியல் அங்கமாகக் கொண்டிருக்கவில்லை. நான் ஏலவே கூறியது போல 1946இல் பிரிட்டிஷார் கொண்டு வந்த இந்திய சுயாட்சித் திட்டம், காங்கிரசினுள் பல வாதப் பிரதிவாதங்களைக் கிளப்பின. இதில் தமிழ் மக்கள் சார்பில் காங்கிரஸ் தலைவர்களுக்கு தான் பின்வரும் ஆலோசனையை அன்று முன்வைத்ததாகக் கூறுகிறார் ம.பொ.சி.

''இந்திய சமுதாயத்தை மதவழியில் இந்து - இஸ்லாமிய- கிறிஸ்தவ தாழ்த்தப்பட்ட வகுப்புக்களைக் கொண்டதாக அல்லாமல் மொழிவழி பல்வேறு தேசிய இனங்கள் அடங்கிய ஒற்றுமையுள்ள ஒரு கூட்டுக் குடும்பமாகக் கொள்ள வேண்டும். மாகாணங்களை மொழிவழியே பிரித்து மாகாணந்தோறும் தனித்தனி அரசியல் நிர்ணய சபைகளை அமைக்க வேண்டும். அந்தச் சபைகள் அந்தந்த மாகாணங்களில் பூரண சுதந்திரமுள்ள அரசாங்கங் களை அமைக்க உரிமை பெற்றவையாக இருக்க வேண்டும்.

''மத்திய யூனியன் அதிகாரங்கள், மாகாணங்கள் தாமமாக விட்டுக்கொடுத்தவையாக இருக்கவேண்டுமேயொழிய கட்டாயப்படுத்திப் பறித்துக்கொண்டவையாக இருக்கக் கூடாது.

'மத அடிப்படையில் மாகாணங்களின் தொகுதி அமைப்பதற்குப் பதிலாக கலாசாரக் கூட்டுறவின் பேரில் தொகுதி சேர்ந்து கொள்ள மாகாணங்களுக்கு உரிமை இருக்க வேண்டும். எப்போது, எந்த மாகாணத்தோடு சேர்ந்து கொள்ள வேண்டுமென்பதை மாகாண சட்டமன்றங்களின் விருப்பத்துக்கே விட்டுவிட வேண்டும். இத்தகு திருத்தத்துடன் கூடிய திட்டந்தான் தமிழருக்கு மட்டுமன்றி, இந்தியாவிலுள்ள எல்லாத் தேசிய இனங்களுக்கும் பூரண சுதந்திரத்தை அளிப்பதாய் இருப்பதுடன் இந்தியாவின் இயற்கை அமைப்புக்கும், தேசிய இனங்களின் நீண்டகால வரலாற்றுக்கும் பொருந்தும் படியாகவும் இருக்கும். இதைவிட்டு தமிழ் இனத்தை மதக்கோடரி கொண்டு பிளக்கும் ஏகாதிபத்தியத் திட்டத்தையோ மதத்தின் பெயரால் மக்களைச் சுரண்டும் முதலாளித்துவ முறையையோ தமிழர்கள் ஒருநாளும் ஏற்கமாட்டார்கள்.

''தமிழர் வேண்டுவது தங்கள் வருங்கால வாழ்வைத் தாங்களே நிர்ணயிக்கக் கூடிய சுயநிர்ணயம். தங்கள் நாட்டைத் தாங்களே ஆளக் கூடிய சுய அரசு''

இது மட்டுமல்லாது ம.பொ.சி. 'தமிழருக்குச் சுயநிர்ணயம்' என்னும் தனிக்கட்டுரையொன்றையே தமது 'தமிழ் முரசு' பத்திரிகையில் வரைந்தார். அதில்

''பிறப்பால், பேசும் மொழியால், வாழ்க்கை நெறியால் நான் ஒரு தமிழன். தமிழகம் என் தாய் வீடு. ஆகவே பிரிட்டிஷ் திட்டத்தைப் பார்க்குந் தோறும் அதன் ஒவ்வொரு அம்சத்தையும் படிக்குந்தோறும் தமிழன் என்ற எண்ணத்தோடேயே பார்க்கிறேன்; படிக்கிறேன். அத்திட்டம் இந்தியாவின் விடுதலைச் சாஸனம் என்றனர் அதன் கர்த்தாக்கள். அப்படியானால் அதில் தமிழகத்தின் பூரண விடுதலைக்கும் தடையில்லாது உரிமை தரப்பட்டிருக்கிறதாவென்றே பார்க்கிறேன்.

''இந்திய மக்களின் சுயநிர்ணய உரிமையை தங்கள் திட்டம் ஒப்புக்கொண்டு விட்டது என்கின்றனர் பிரிட்டிஷ் தூதுக் கோஷ்டியினர். இது உண்மையானால், அத்திட்டத்தில் தமிழருக்கும் சுயநிர்ணயம் உண்டா என்று தடவிப்பார்க்கிறேன்.

''இவ்வாறு தமிழன் என்ற இன உணர்ச்சியோடு பிரிட்டிஷ் திட்டத்தையும் அதன் மீது பிரிட்டிஷ் மந்திரிகள் தந்த விரிவுரைகளையும் பன்முறை படித்து ஆராய்ந்தபின் எனக்கு ஏற்பட்ட எண்ணங்களையே இக்கட்டுரையில் வெளியிடுகின்றேன்''

''பிரிட்டிஷ் திட்டத்தை ஆராயு முன்னர் இந்தியாவின் இயற்கை அமைப்பு, இந்திய சமுதாயத்தின் இனப்பிரிவுகள், அவற்றின் உரிமைகள் ஆகியவற்றைச் சிறிதளவு ஆராய்வது அவசியமாகும்.

''இந்தியா பல்வேறு நாடுகளைக் கொண்ட ஒரு உபகண்டமாகத் திகழ்கின்றது. நடுநிலையில் இந்தியாவின் சரித்திரத்தை ஆராய்ந்தோர் அனைவரும் இந்த முடிவுக்கே வந்திருக்கின்றனர்.

''சீதோஷ்ண நிலை, மண்வளம், பொருளுற்பத்தி, மக்களின் பழக்க வழக்கங்கள், அவர்கள் பேசும் மொழிகள் முதலிய யாவும் இந்தியாவிலுள்ள பல்வேறு நாடுகளிலும் வெவ்வேறு விதமாக இருக்கின்றன.

''இந்தியாவிலுள்ள பல்வேறு நாடுகளின் சரித்திரந்தான் இந்தியாவின் சரித்திரம்; இந்நாடுகளில் வாழும் வெவ்வேறு இனங்களின் நாகரிகந்தான் இந்தியாவின் நாகரிகம். ஆகவே இந்தியாவின் வருங்கால அரசியல் திட்டத்தை வகுக்கும் யாரும் மேற்சொன்ன நாடுகளின் அமைப்பைச் சீர்குலைக்காது, அதில் வாழும் இனங்களின் பண்பாட்டைப் பாழாக்காது பார்த்துக் கொள்ள வேண்டும். இல்லையேல், சுதந்திர இந்தியா அமைதியாக வாழ முடியாது என்பது திண்ணம்''.

வரும்......

டி.சிவராம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



*ஐக்கிய தேசியக் கட்சியின் ஐம்பதாவது ஆண்டு நிறைவை யொட்டி இக்கட்டுரை வெளியாகிறது*

ஐக்கிய தேசியக் கட்சி தனது ஐம்பதாவது ஆண்டு பூர்த்தியை இவ்வருடம் கொண்டாடுகிறது. சுதந்திர இலங்கையின் ஆட்சிப்பொறுப்பை ஏற்றுக் கொள்வதற்கு தமக்குள்ள தகுதியை உத்தரவாதப்படுத்தி இலங்கையின் முதலாவது பாராளுமன்றத்தின் ஆளும் கட்சியாக ஐ.தே.கட்சியை ஆக்கிக்கொண்டதோடு அதன் முதலாவது பிரதம மந்திரியாகவும் தன்னை ஆக்கிக் கொண்டார் டி.எஸ்.சேனநாயக்கா.

மன்னார், வவுனியா தொகுதிகளையும் பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் செய்த உறுப்பினர்களான சி. சிற்றம்பலம், சி. சுந்தரலிங்கம் ஆகியோரை அமைச்சரவையில் சேர்த்துக்கொண்டதோடு இலங்கைத் தமிழர்களின் அரசியல் கட்சிகளான அகில இலங்கைத் தமிழ் காங்கிரசின் உறவை வலுப்படுத்துவதிலும் வெற்றிகண்டார். இதன் மூலம் இன ஐக்கியத்தைப் பேணுவதில் தமக்குள்ள கடமைப்பாட்டை வெளிப்படையாகவே பிரகடனப்படுத்திக் கொண்டார் இவர்.

**ஆனால் டி.எஸ். சேனாநாயககாவின் இந்த முகமூடி நீண்ட நாட்கள் நிலைத்திருக்கவில்லை. 1948ம் ஆண்டு சுதந்திரம் கிடைத்து சில மாதங்கள் செல்வதற்கு முன்பாக இலங்கைப் பிரசாவுரிமைச்சட்டத்தை பாராளுமன்றத்தில் நிறைவேற்றி மலையகத் தமிழ் மக்களின் பிறப்புரிமையான பிரஜாவுரிமையை பறித்தெடுத்ததன் மூலம் இவரது இனவாத வேட்கையை வெளிப்படுத்திக் கொண்டார். இத்தகைய ஒரு மிலேச்சத்தனமானதும், ஜனநாயக விரோதமான செயலை பாராளுமன்ற ஜனநாயக விதிமுறைகளின் மூலம் நிறைவேற்றிய டி.எஸ். சேனநாயக்கவின் தலைமையிலான ஐ.தே.கட்சியின் செயலானது சோல்பரியாப்பு, சிறுபான்மையினரின்** பாகுபாடுகளுககு எதிராக வழங்கிய 29(2)ம்சரத்தின் உத்தரவாதத்தை எதுவித பிரயோசனமும் அற்றதாகியதோடு பிரித்தானியர் அறிமுகம் செய்து வைத்த ஒற்றையாட்சித் தனமையிலான பெரும்பான்மை ஜனநாயயமானது (MAJORITARION DEMOCRACY) பெரும்பான்மை இனத்தின் ஜனநாயகமாக செயற்படுத்தப் பட முடியும் என்பதையும் நிரூபித்து விட்டது. இந்நடைமுறையே இன்று இலங்கை ஒரு போர்க்களமாவதற்கு ஆரம்ப வழியை காட்டிக்கொடுத்தல் என்றால் தவறாகாது.

இது தொடர்பாக ஐ.தே.கட்சியினர் மற்றுமொரு சாதனையாக 1949ம் ஆண்டின் தேர்தல் கூட்டத்திற்கான திருத்தம் அமைந்தது. பிரஜாவுரிமை உள்ளவர்களுக்கு மட்டுமே வாக்குரிமை என்னும் இச்சட்டம் மலையகத் தமிழர்களின் அடிப்படை அரசியல் உரிமையான வாக்குரிமையை பறிப்பதை நோக்கமாகக் கொண்டிருந்தது என்பதை எவரும் மறுக்க முடியாது. இச்சட்டத்தை ஆதரித்து பாராளுமன்றத்தில் வாக்களித்த ஜீ.ஜீ. பொன்னம்பலத்தின் தலைமையிலான தமிழ் காங்கிரஸ் உறுப்பினர்களின் செயற்பாடானது அவர்கள் தொடர்பான மேற்கூறிய கூற்றை மெய்ப்பிப்பதாக அமைகின்றது.

1948 - 1956ம் ஆண்டிற்கிடைப்பட்ட ஐ.தே.கட்சியானது ஆங்கிலம் படித்திருந்தவர்களின் ஆதிக்கத்திற்குட்பட்டிருந்ததோடு மலையக மக்கள் தவிர்ந்த ஏனைய விடயங்களில் மிகவும் மிதவாதப் போக்கையே கடைப்பிடித்து வந்தது. மேலைத்தேய ஜனநாயகப் பாணியையும், காலனித்துவக் கலாசாரங்களுக்குக் கட்டுப்படான வகையில் ஆங்கிலத்திற்கு முன்னுரிமையும் வழங்கும் விதத்திலான அதன் ஆட்சிக்காலமானது தேசிய ரீதியில் பல முரண்பாடுகளுக்கு வித்திட்டது.

பிரித்தானிய காலனித்துவ ஆட்சியின் ஆரம்பம் முதல் ஆங்கிலம் கற்க வைப்பதற்கான காரணமாகீவும், பெருந்தோட்டப் பொருளாதாரத்தின் வளர்ச்சி வணிக முதலாளித்துவத்தின் வளர்ச்சி போன்றவற்றின் காரணமாகவும், பொருளாதார ரீதியாகவும், சமூகரீதியாகவும் தேசிய நீரோட்டத்திலிருந்து ஒதுக்கப்பட்டு வந்த கிராமிய மக்களின் பிரச்சினை ஒரு பாரிய பிரச்சினையாக உருவெடுத்தது. இலங்கை சுதந்திரமடைந்ததைத் தொடர்ந்து மிகத்துரிதமாக மேலெழுந்த இம்மக்களின் சமூகப், பொருளாதார எதிர்பார்ப்புக்களைப் பூர்த்திசெய்யக்கூடிய வகையிலான ஆக்கபூர்மான மாற்றத்தை ஏற்படுத்த ஐ.தே.கட்சி தவறிவிட்டது. கிழக்கிலங்கையில் மேற்கொள்ளப்பட்ட குடியேற்றத் திட்டங்களைத் தவிர வேறு எவ்வகையிலும் இம்மக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்யக்கூடிய தகுதியை ஐ.தே.கட்சி கொண்டிருக்கவில்லை.

எனவே இவற்றின் விளைவாக விரக்திக்குட்பட்ட கிராமிய மக்களின் எதிர்ப்புணர்வுகளை இனவாத ரீதியில் அணிதிரட்ட சிங்கள, பௌத்த சக்திகள் முன்வந்தன. கிராமிய மக்களின் சமூகப் பொருளாதாரப் பிரச்சினைகளுக்கான சமூகப்பொருளாதார காரணிகளை கண்டறிய முற்படாமல், அவற்றின் தீர்விற்கான சமூக, பொருளாதார வழிவகைகளை மேற்கொள்ளாமல் தமிழர்களுக்கெதிரான இனவாத அடிப்படையில் இந்நாட்டை ஒரு சிங்கள, பௌத்த நாடாக மாற்றுவதற்கு இம்மக்களின் எதிர்ப்புணர்வுவகைகளைப் பயன்படுத்தி அணிதிரட்டுவதில் பல பேரினவாத அமைப்புகள் ஈடுபட்டன. இவ்வகையாக கிராமம் கிராமமாகச் சென்று அணிதிரட்டி மக்கள் சக்திகளைப் பயன்படுத்தி அரசியல் மட்டத்தில் தமது குறிக்கோள்களை அடைவதற்காகப் பேரம் பேச இச்சக்திகள் முயன்றன. எவ்வகையிலும் ஆட்சி அதிகாரத்தை கைப்பற்றிவிடவேண்டும் என்னும் நிலைப்பாட்டில் இருந்த எஸ்.டபிள்யூ. ஆர்.டி. பண்டாரநாயக்காவுக்கு இது ஒரு பெரும் வாய்ப்பாக மாறியது. எனவே இச்சக்திகளின் சிங்கள பௌத்த மயக் கோரிக்கைகளுக்கு தனது முழு ஆதரவையும் உத்தரவாதப்படுத்தியதோடு அதன் ஆரம்ப நடவடிக்கையாக 1956ம் ஆண்டுத் தேர்தலில் பிரதான வாக்குறுதியாக சிங்கள மொழியை மட்டுமே ஆட்சிமொழி ஆக்குவதற்கான வாக்குறுதியை முன்வைத்தனர். பண்டாரநாயக்கா. இதுகாலவரையில் ஒரு தீவிர இனவாத நிலைப்பாட்டை நோக்கிச் செயற்படுவதைத் தவிர்த்து வந்த ஐ.தே. கட்சியும் இதே கோரிக்கையை இத்தேர்தலில் முன்வைத்தது. ஐ.தே.கட்சியினுள் இருந்த இனவாதியான ஜே.ஆர். ஜயவாதனவின் இனவாத எதிர்பார்ப்பைக் கட்சியின் மூலம் முன்னெடுத்துச்செல்லும் வாய்ப்பும் அவருக்கு கிடைத்தது.

1940களில் தேசிய சட்டசபையில் சிங்களம் மட்டுமே அரச மொழியாக்கப் பட்டவேண்டும் என்னும் கோரிக்கையை முன்வைத்தவர் ஜே.ஆர். ஜயவர்த்தன என்பதுவும் இங்கு குறிப்பிடப்படல் வேண்டும்.

1956ம் ஆண்டு ஏற்பட்ட இந்த நிலைமையானது ஒருபுறம் தேசிய அரசியலை மிதவாதப் போக்கிலிருந்து இனவாதமயப்படுத்துவதற்கான செயற்பாட்டின் ஆரம்பமாகவும் பிரதான அரசியற் கட்சிகளுக்கிடையில் தமிழர் எதிர்ப்புணர்வையும், சிங்கள பௌத்த பேரினவாதப் போக்கை முன்னெடுப்பதைப்பிரதான போட்டியாகவும் கொண்ட அரசியல் நடைமுறையின் ஆரம்பமாகவும் கருதப்படல் வேண்டும்.

இலங்கைத் தமிழர்களின் அரசியல் எதிர்பார்ப்புக்களைப் பூர்த்தி செய்வதை நோக்கமாகக்கொண்டு 1957ம் ஆண்டு தமிழரசுக்கட்சியுடன் அரசு செய்து கொண்ட பண்டாரநாயக்கா - செல்வநாயகம் ஒப்பந்தத்தைச் செயற்படுத்த விடாது தடுப்பதற்கான எதிர்ப்பணிக்குத் தலைமை தாங்கிய ஐ.தே.கட்சியின் ஜே.ஆர். ஜயவர்த்தன இந்நாட்டை ஒரு போர்க்களமாக்கியதில் பண்டாரநாயக்கா தம்பதிகளுடன் சமபங்கை வகிக்கும் கௌரவத்தை தட்டிக்கொள்ள முயன்ற தன் ஆரம்ப நிகழ்வாகக் கொள்ளலாம்.

### 1965 - 1970

1965ம் ஆண்டு ஐ.தே.கட்சி ஆட்சிக்கு வரத் தமிழரசுக்கட்சி டட்லி - செல்வநாயகம் ஒப்பந்தத்தை நிபந்தனையாக வைத்து ஒத்துழைப்பு வழங்கியது. டட்லி சேனநாயக்கவின் தளர்ந்த தலைமைத்துவம், சாதுவான சுபாவமும் இக்கால கட்டத்தில் தீவிர இன வாத முரண்பாடு ஏற்பட வழிவகுக்கவில்லை. எனினும் அவ்வொப்பந்தத்தை நடைமுறைப்படுத்தக்கூடிய துணிவும் அவ்வரசுக்கு இருக்கவில்லை. ஸ்ரீ.ல.சு.கட்சி உட்பட சிங்கள பௌத்த இனவாத சக்திகளின் எதிர்ப்பை முறியடிப்பதற்குத் தேவையான நடைமுறையை மேற்கொள்வதைத் தவிர்த்துப்பேரினவாத சக்திகளுக்குப் பணிந்து போன ஐ.தே.கட்சியின் நிலைமையானது இனவாதப் போக்குகள் மேலும் வளர வழி வகுத்தது.

1964ம் ஆண்டு செய்து கொள்ளப்பட்ட சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தத்தை நடைமுறைப்படுத்தும் சட்டம் 1967ம் ஆண்டு ஐ.தே.கட்சியினால் நிறைவேற்றி வைக்கப்பட்டு மலையகத் தமிழர் நாடுகடத்தப்படுவது சட்ட ரீதியாக உத்தரவாதப்படுத்தப்பட்டது. இச்சட்டத்தை ஆதரித்து இலங்கைத் தொழிலாளர் காங்கிரசும், தமிழரசுக் கட்சி ஆகியவற்றின் பாராளுமன்றப் பிரதிநிதிகள் பாராளுமன்றத்தில் வாக்களித்ததன் மூலம் இந்த அப்பாவி மக்களின் நாடுகடத்தலுக்கு உடந்தையாக செயற்பட்டுள்ளனர்.

1977ம் ஆண்டுவரை ஐ.தே.கட்சியானது பாரியளவில் எவ்விதத்தாக்கத்தையும் அரசியலில் ஏற்படுத்தியது என்று கூற முடியாது. 1970 - 1977க்கிடைப்பட்ட காலகட்டத்தில் முக்கூட்டு முன்னணிக்கு எதிரான எதிர்ப்பரசியலை நடத்தியதன் மூலமும் அவ்வரசின் தவறுகளை தமக்கு சாதகமாகப் பயன்படுத்தியதன் மூலமும் அரசியல் வரலாற்றில் மாபெரும் வெற்றியை 1977ம் ஆண்டு தேர்தலில் அடைந்தது ஐ.தே.கட்சி. 1994ம் ஆண்டுவரை நீடித்த அக்கட்சியின் ஆட்சியே இலங்கையின் அரசியலில் பல தாக்கங்களுக்கு வழிவகுத்தது.

### தார்மீக ஆட்சி

சிறிமா பண்டாரநாயக்காவின் 1970-1977 ஆண்டின் ஜனநாயக விரோத அடக்குமுறை ஆட்சியை எதிர்த்து ஒரு ஜனநாயக கடமைப்பாடுள்ள தார்மீக (தர்மிஷ்ட) ஆட்சியை ஏற்படுத்துவது என்ற வாக்குறுதியின் அடிப்படையில் தான் ஐ.தே.கட்சி 1977ல் இவ்வெற்றியைத் தட்டிக்கொண்டது. 1977ம் ஆண்டின் தேர்தல் வாக்குறுதிகளில் முக்கியமானவையாக மூன்றைக் குறிப்பிடலாம்.

1. ஜனநாயக மரபுகளை மதித்து நடக்கக்கூடிய தார்மீக ஆட்சியை ஏற்படுத்துவது.
2. இனவாத முரண்பாட்டை ஜனநாயக வழிவகைகளில் அரசியல் ரீதியகத் தீர்ப்பது.
3. திறந்த சந்தைப் பொருளாதாரத்தை அபிவிருத்திச்செய்வது.

### இன உறவு

1977 -94ம் ஆண்டிற்கிடைப்பட்ட 17 வருட காலகட்டத்தில் ஐ.தே.கட்சியின் ஆட்சியில் மிகவும் முக்கியமாகக் கருதப்படவேண்டிய அரசியல் விடயமாக இனவாத முரண்பாட்டையே கொள்ளலாம். 1977ம் ஆண்டின் தேர்தலுக்கான ஐ.தே.கட்சியின் விஞ்ஞாபனத்தில் ''தமிழ் பேசும் மக்கள் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியிருக்கிறது என்பதை ஐ.தே. கட்சி ஒப்புக்கொள்கின்றது. தமது பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்படாதநிலையில் தனிநாட்டை கோரும் இயக்கத்திற்கு ஆதரவளிக்க அவர்கள் நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார்கள். முழுத் தேசத்தினதும் பொருளாதார அபிவிருத்திக்குத் தேவைப்படும் தேசிய ஒருமைப்பாட்டையும், ஒற்றுமையையும் கருதி இந்தப் பிரச்சினைகள் காலதாமதமின்றித் தீர்த்துவைக்கப்பட வேண்டும் என்பதை கட்சி உணருகிறது. கட்சி பதவிக்கு வந்ததும் பின்வரும் துறைகளில் தமிழ்ப் பேசும் மக்களுக்கு இருந்து வரும் குறைகளைத் தீர்ப்பதற்கு இயன்ற எல்லா நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்.

1. கல்வி.
2. குடியேற்றத்திட்டங்கள்.
3. தமிழ் மொழியைப் பயன்படுத்துதல்
4. பொதுக் கூட்டுத்தாபனங்களிலும், அவையொத்த நிறுவனங்களிலும் வேலை வாய்ப்புக்கள்.

இப்பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு சர்வகட்சி மாகாநாட்டைக் கூட்டி அதன் முடிவுகளை நடைமுறைப்படுத்துவோம். அதே விஞ்ஞாபனத்தில் அரசயாப்பு என்ற பகுதியில் ''சிங்களம் பேசாத மக்களின் பிரச்சினைகளை ஆராய்வதற்கு கூட்டப்படவிருக்கின்ற சர்வகட்சி மாநாடு பற்றிய பிரேரணை புதிதாக உருவாக்கப்பட விருக்கும் அரச யாப்பில் உள்ளடக்கப்படும்'' என்ற வாக்குறுதி அளிக்கப்பட்டது. அதே தேர்தலில் தமிழர் விடுதலைக் கூட்டணி தனிநாட்டுக் கோரிக்கைக்கான மக்களின் ஆணையைக் கோரிப் போட்டியிட்டது என்பதை மனங்கொள்ளல் வேண்டும்.

தமிழ் ஈழக்கோரிக்கையை தடைசெய்வதற்கோ, தனிநாட்டை உருவாக்குவதற்கோ, தமிழரிடையே இயங்கும் எந்தவொரு இயக்கத்தையும் அடக்குவதற்கோ ஐ.தே.கட்சி மக்களின் ஆதரவைக் கோரவில்லை என்பதும் குறிப்பிடப்படல் வேண்டும். தமிழ் மக்களின் சமூக, பொருளாதார, அரசியற் பிரச்சினைகள் தீர்க்கப்படாமையே தனித்தமிழ் நாட்டை உருவாக்கும் முயற்சிக்கு அவர்கள் ஆதரவு வழங்குவதற்கு அவர்களை நிர்ப்பந்தித்தது என்பதுவே ஐ.தே.கட்சியின் நிலைப்பாடாக இருந்தது. இவ்வாக்குறுதியானது முக்கூட்டு முன்னணி அரசின் இனவாத கொடுமைக்கு பாலை வார்த்த செய்தியாக அமைந்தது. ஐ.தே. கட்சியின் தமிழ்த் தலைவராகத் திகழ்ந்த தொண்டமான் அவர்களின் முயற்சியினால் தான் ஐ.தே.கட்சி இவ்வகையான நிலைப்பாட்டை எடுத்தது என அவரும் தப்பட்டம் அடித்துக்கொண்டமையும் இங்கு குறிப்பிடப்படல் வேண்டும்.

எனினும் ஆறுக்கு ஐந்து பங்கு பெரும்பான்மை ஆசனங்களுடன் பதவிக்கு வந்த ஐ.தே.கட்சியானது இப்பிரச்சினையைத் தீர்க்க எதுவித நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை. 1978ம் ஆண்டின்யாப்பு வரைவு வெளியிடப்பட்டபோது தேர்தல் வாக்குறுதியானது சர்வகட்சி மகாநாடு பற்றிய பிரேரணையோ அல்லது தமிழ் மக்களின் சமத்துவம் பற்றிய உத்தரவாதமோ உள்ளடக்கப்பட வில்லை. மாறாக சிங்கள, பௌத்த மேலாதிக்கத்தை உத்தரவாதப்படுத்துகின்ற மற்றுமொரு அரசியல் யாப்பானது தமிழ் மக்களின் பங்குபற்றுதலின்றி நிறைவேற்றப்பட்ட வரலாற்றை ஐ.தே.கட்சி படைத்தது.

### மாவட்ட அபிவிருத்திச் சபை

சர்வகட்சி மகாநாட்டைக் கூட்டுவதற்காக வாக்குறுதியளித்த ஐ.தே.கட்சி அரசியற் கட்சிகளின் தெரிவுக்குழுவொன்றை ஒய்வு பெற்ற பிரதம நீதியரசர் விக்டர் தென்னகோனின் தலைமையில் நியமித்தது. இத்தெரிவுக்குழுவை இடதுசாரிக் கட்சிகள் உட்பட எதிர்க்கட்சிகள் பகிஷ்கரித்தன. த.வி.கூட்டணி இதில் பங்குபற்றியது. இதன் பிரதிநிதியாக கலாநிதி நீலன்திருச்செல்வமும், ஜே.ஆர். ஜயவர்தன அவர்களின் அரசியல் ஆலோசகராக இருந்தவரும் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் அவர்களின் மருமகனான பேராசிரியர் ஏ.ஜே.வில்ஸனும் இக்குழுவின் உறுப்பினர்களாவர். இக்குழுவின் இறுதிச்சிபாரிசுகள் இவ்விரு தமிழர்களாலும் நிராகரிக்கப்பட்டவையாக அமைந்தது. இதன் தலைவர் ஜே.ஆர். ஜயவர்தன அவர்களுக்கு எதுதேவையோ அதை சிபாரிசாக முன்வைக்க முயன்றதால் இது ஒரு நேர்மையற்ற முயற்சியாக முடிவுற்றது. எனினும் இதன் சிபாரிசு மூலம் ஏற்படுத்தப்பட்ட மாவட்ட அவிபிருத்திச்சபைகளுக்கான தேர்தலில் த.வி.கூட்டணி போட்டியிட்டதோடு அந்நடை முறையிலும் பங்குபற்றியது. ஆனால் வெறும் நிர்வாகப் பன்முகப்படுத்துதலை மட்டும் அடிப்படையாகக் கொண்ட இச்சபைகள் எவ்வித பிரயோசனமும் அற்றவிதத்தில் செயலிழந்தது.

### யுத்தப் பிரகடனம்

தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக 1977இல் ஐ.தே.கட்சி அளித்த வாக்குறுதிகள் பலவழிகளிலும் தமிழ் மக்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்தியதோடு, ஏழாண்டு கால (70-77) சிறிமா பண்டாரநாயக்காவின் இனவாத அடக்குமுறை ஆட்சியின் கொடூரங்களிலிருந்து விடுதலை பெறக் கூடிய வாய்ப்புக் கிடைக்கும் என்னும்



நம்பிக்கையும் வலுப்பெற்றிருந்தது. இவ்வெதிர்பார்ப்பானது ஜே.ஆர். ஜயவர்த்தன அவர்கள் தமக்குத் தேவையான அரசியல் யாப்பை ஏற்படுத்திக் கொண்டதுடன் அவரின் சுயரூபத்தை வெளிக்காட்டியதுடன் வலுவிழக்க ஆரம்பித்தது. இச்செயலானது ஜே.ஆர். மீது நம்பிக்கை வைத்திருந்த த.வி. கூட்டணியினருக்கு ஒரு இக்கட்டான நிலைமையைத் தோற்றுவித்தது. மறுபுறத்தில் தனித்தமிழ்நாட்டுப் போராட்டத்தில் இறங்கியிருந்த தீவிரவாத இளைஞர் இயக்கங்களுக்குத் தமது போராட்டத்தை முன்னெடுப்பதற்குத் தேவையான அரசியல் சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுத்தது.

நிலைமைகள் இவ்வாறிருக்க தமிழர்களின் எதிர்ப்பு நடவடிக்கைகள் வளர ஆரம்பித்தன. ஐ.தே.கட்சி அளித்த வாக்குறுதியை நம்பியவர்களுக்கு நம்பிக்கைத் துரோகம் இழைத்த ஒரு மாபெரும் நிகழ்வாக 1979ம் ஆண்டு ஜூலை மாதம் ஜே.ஆர் அரசின் போர்ப் பிரகடனம் அமைந்தது. அவசரகால நிலைமையைப் பிரகடனம் செய்து தனது மருமகனான பிரிகேடியர் வீரத்துங்கவை வடமாகாண இராணுவப் பொறுப்பாளராக நியமனம் ஹிட்லர் பாணியில் இருந்தும் குறிப்பாக லிருந்தும் எல்லாவ அச்சுறுத்தல்களை கட்டளையிட்டார். திகதிக்கு முன் இ செய்யப்படல் வே கட்டளையிடப்பட் இச்சம்பவமானது

1. சிங்கள பௌத் இராணுவ பலத்தின் வதையும்;
2. அதற்கெதிராக த மெலெழுந்த போரா கொலைகளின் தொழிப்பதையும்;
3. அரசியற் பிர மக்களின் பிரச் நடைமுறைகளி ரீதியில் தீர்ப்பத

பொறுப்பு முழுமை துப்பாக்கிகளுக்கு ஒப்படைக்கப்பட தெளிவாக விளக் இந்தப் படுகொ னெடுப்பதற்குத் ரங்களை இராணு காகப் பயங்கர பாராளுமன்றத்தி இவ்வனைத்து அப்போதைய அ கே.டபிள்யூ. தே துரை, சௌமிய ஆகிய தமிழர் ஆதரித்துச் செயற் பதவிகளை தக்க என்பதையும் வேண்டும்.

இந்நடைமுறை பாட்டை முழுமை படுத்துவதற்கு வ உரிமைப் C

www.tamilarangam.net



த ஜே.ஆர்.
முழுவதிலும்
மாவட்டத்தி
பயங்கரவாத
ற்றுக'' எனக்
டிசம்பர் 31ம்
மை பூர்த்தி
ம் எனவும்

லாதிக்கத்தை
நிலைநாட்டு

கள்மத்தியில்
ளை இனப்படு
இல்லா

முன்னெடுப்பதற்கான ஒரே வழியாக ஆய்தப்போராட்டத்தை மட்டுமே தமிழ் மக்களுக்கு உரிமையாக்கியது.

### இனப்படுகொலை:

ஐ.தே.கட்சியின் ஒரு விஷேட தந்திரோபாயமாக அமைந்தது இனக்கலவரங்களை ஊக்குவிக்கும் செயலாகும். இக்கட்சி பதவிக்கு வந்து சில மாதங்களில் 1977 ஆவணிப் படுகொலை நடைபெற்றது. அதன் பிறகு 1981ம் ஆண்டும், 1983ம் ஆண்டு தென்னிலங்கையில் தமிழர்களுக்கெதிரான படுகொலைகள் நடைபெற்றன. தமது கட்சிக்கெதிராக தென்னிலங்கையில் விரக்தியுற்றுள்ள சிங்கள இளைஞர்கள் கிளர்ந்தெழத்

# ஐ.தே.க 50



ச.பாலகிருஷ்ணன்

பான தமிழ்
அரசியல்
ஜனநாயக
திலாக அப்
ாணுவத்தின்
ாக்களுக்கும்
பயும் மிகத்

த்தை முன்
ான அதிகா
ழங்குவதற்
டச் சட்டம்
ற்றப்பட்டது.
றகளையும்
யில்இருந்த
செ. இராஜ
ாண்டமான்
ழுமையாக
அமைச்சர்
கொண்டனர்
றிப்பிடல்

ன முரண்
ணுவமயப்
தோடு தமது
டத்தை

தயாராகின்றார்கள் என்பதை உணர்ந்த ஐ.தே.கட்சியினர் அவர்களின் அவதானத்தைத் திசைதிருப்பும் நோக்கமாக 1983ம் ஆண்டின் இனப் படுகொலை நடாத்தச் செயற்பட்டுள்ளனர். தமிழர்களுக்கெதிரான கலவரம் ஒன்றைத் தூண்டிவிடுவது தொடர்பாக ஐ.தே. கட்சியின் தலைவர்கள்கட்சியின்தலைமையகத்தில் ஒன்றுகூடி திட்டமிட்டு செயற்படுத்தினர் என்பது நிரூபிக்கப்பட்ட விடயமாகும். இம்மூன்று இனப் படுகொலைகளின் போதும் ஆட்சித் தலைமை பொறுப்பை ஏற்றிருந்த ஜே.ஆர். ஜயவர்த்தன சட்டத்தையும், ஒழுங்கையும் உறுதிப் படுத்தும் நடவடிக்கைகளை சில தினங்களுக்குப்பின்போட்டு விட்டு அரச பயங்கரவாதத்தின் கைக்கூலிகளாக செயற்படும் இராணுவ, பொலிஸ் துறையினரும், இனவாதக் குண்டர்களும் தமக்குத் தேவையான வகையில் தமிழ் மக்களின் சொத்துக்களைக் கொள்ளையடிப்பது, தீவைத்துக் கொழுத்துவது, பெண்களை பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்துவது, தமிழர்களைக் கொலை செய்வது போன்ற செயற்பாடுகளுக்கு சாதகமான சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுத்திருந்தார்.

1983ம் ஆண்டு தமிழர்களுக்கெதிராக நடாத்தப்பட்ட தாக்குதலானது இன முரண்பாட்டை சர்வதேசமயப்படுத்துவதற்கும், ஆயுதப்போராட்டம் மூலம் தனிநாட்டுக்கோரிக்கையை வென்றெடுப்பதுதான் தமிழர்களுக்கு இருக்கும் ஒரே தீர்வு என்னும் மனநிலையை சர்வதேச ரீதியாக ஏற்படுத்துவதற்கும் வழி வகுத்தது.

### இராணுவ மயப்படுத்துதல்

1979ம் ஆண்டு ஜே.ஆர்.ஜயவர்த்தனவினால் பிரகடனம் செய்து ஆரம்பித்து வைக்கப்பட்ட தமிழர்களுக்கெதிரானபடுகொலைநடைமுறையானது 1983ம் ஆண்டின் படுகொலையைத் தொடர்ந்து மாபெரும் யுத்தமாக உருவெடுக்கும் வகையில் அரசு செயற்பட்டது. இப்படுகொலையுத்தத்திற்கு ஒரு அமைச்சையும் ஏற்படுத்தி அதற்குத் தேசிய பாதுகாப்பு அமைச்சு எனப் பெயரிட்டு இப்பொறுப்பு லலித் அத்துலத்முதலி அவர்களிடம் ஒப்படைக்கப் பட்டது. இதன் விளைவாக ஒருபுறத்தில் இராணுவம் விஸ்தரிக்கப்பட்டதோடு மறுபுறம் சிங்களமயப்படுத்தப்பட்டது. இவற்றை ஒரு சவாலாக ஏற்றுக்கொண்ட தமிழ் சமூகம் அவர்கள் மத்தியில் செயற்பட்ட ஆயுதப்போராட்டம் குழுக்களுக்குத் தேவையான உதவிகளையும், ஒத்துழைப்பையும் வழங்கியது. ஜே.ஆர்.ஜயவர்த்தனவின் அரசின் இந்திய எதிர்ப்பு நடவடிக்கையின் காரணமாக சீற்றம்கொண்ட இந்திய அரசு இலங்கை அரசை மண்டியிட வைப்பதற்காக இப்பிரச்சினையைப் பயன்படுத்த முன்வந்தது. தமிழ் இளைஞர்களின் போராளிக் குழுக்களுக்கு ஆயுதங்கள், பயிற்சித் தளங்கள் போன்றவற்றை வழங்கி இந்த இராணுவ முனைப்புகளை வளர்த்தெடுக்க உதவியது. யுத்தப் பிரகடனத்தின்மூலம் தனது பேரினவாதப் போக்கை மிகத் தெளிவாக வெளிக்காட்டிய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜயவர்தன அவர்களின் ''தமிழ் இளைஞர்கள் ஆயுதங்களைக் கீழே வைத்துச் சரணடையும் வரை அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த மாட்டேன்'' என்ற நிலைப்பாடானது யுத்தத்தை மேலும் வளர்த்தெடுப்பதற்கு வழிவகுத்தது.

வடகிழக்கு எல்லைக் கிராமங்களில் வாழ்ந்து வந்த தமிழ் மக்களை விரட்டியடித்து விட்டு அப்பிரதேசங்களில் திட்டமிட்ட வகையில் சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்தியமை, இக்கிராம இளைஞர்களுக்கு ஆயுதங்கள் வழங்கி அப்பிரதேசங்களில் ஆயுதமுரண்பாட்டை வளர்த்தமை, கொழும்பிலிருந்து காடையர்களை அணிதிரட்டி கிழக்கு மாகாணத்திற்கு அழைத்துச்சென்று அங்கு திட்டமிட்டவகையில் தமிழ் - முஸ்லிம் கலவரங்களை ஏற்படுத்த முயன்றமை போன்ற பல்வேறு வகையிலும் இம்முரண்பாட்டை வளர்த்தெடுப்பதில் கவனம் செலுத்திய ஐ.தே.க அரசாங்கம் இப்பிரச்சினையின் தீர்விற்கு இந்த 17 வருட காலத்தில் ஆக்கபூர்வமான எதையும் செய்யவில்லை. இவ்வரசின் இச்செயல்களையெல்லாம் மூடி மறைக்கும் அளவிற்கு ஒரு சில தமிழ்ப் போராளி அமைப்புகள் செயற்பட்டன. அவர்களின் இனவாத ரீதியான நடவடிக்கைகளும் பொறுப்பற்ற தாக்குதல்களும் அரசின் அராஜகச் செயற்பாடுகளை நியாயப்படுத்திக் கொள்ளத் தேவையான சூழ்நிலையை ஏற்படுத்திக் கொடுத்தது.

1987ம் ஆண்டு ஐ.தே.க. அரசு இப்பிரச்சினையின் தீர்விற்கு இந்தியாவிடம் சரணடைந்தது. இலங்கை -இந்திய உடன்படிக்கையை முறையாக நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான நேர்மையும், கடமைப்பாடும், சிங்கள, பௌத்த ஆதிக்கத்தை அரசியலில் முறியடிப்பதற்கான தயார் நிலையின்மையும் இம்முயற்சியையும் தோல்வியுறச் செய்தது.

அதன்பின் ஆரம்பமான போராட்டத்தில் இராணுவமும், விடுதலைப் புலிகளும் மிகவும் மிலேச்சத்தனமான வகையில் பொது மக்களைக் இலக்காகக் கொண்ட நடவடிக்கைகளை அதிகரித்தனர். வட பகுதிக்கான பொருளாதாரத் தடைகளை விதித்ததன் மூலம் அப்பாவி மக்களைப் பழிவாங்குவதில் பிரேமதாச அரசு ஜே.ஆர் ஜயவர்தனவை மிஞ்சியது. எல்லாத்தமிழர்களும் புலிகள் என்னும் மனநிலையை வேரூன்றவைக்கப்பல வழிகளிலும் செயற்பட்டுவந்தது.

### கலாசாரப் படுகொலை

ஆயுதப்போராளிகளை ஒழிப்பதை நோக்கமாகக்கொண்டதாகக் கூறப்படுகின்ற இந்த யுத்தமுனையில் தமிழ் மக்களின் கலாசார கருவூலங்களை இல்லாதொழிப்பதையும் உள்நோக்கமாகவே கொண்டதாக அமைந்துள்ளது. 1981ம் ஆண்டு யாழ் நூலகம் எரிக்கப்பட்டது முதல் பாடசாலைகள், கோவில்கள் உட்பட பல்வேறு அழிவுகளுக்கும் இராணுவத்தினர் காரணமாக இருந்துள்ளனர்.

அவ்வப்போது மேற்கொள்ளப்படும் இக்கலாசாரப்படுகொலை தொடர்பான பொறுப்பைத் தனிநபர்களின் மீது போட்டுவிட்டு தப்பித்துக்கொள்ள அரசுகள் முயலுவதும் ஒரு வழமையான போக்காகும். முழுமையாக இனவாதமயப் படுத்தப்பட்ட இராணுவத்தை அதற்குத் தேவையான வகையில் செயற்படுவதற்கு படுவதற்கு அனுமதி வழங்கி ஒத்துழைப்பை வழங்கும் அரசுகள் இப்பொறுப்புகளிடமிருந்து தப்பிவிட முடியாது.

### அடக்குமுறையும் அதிகாரத் துஷ்பிரயோகமும்

ஐ.தே.க. தயாரித்த 1978ம் ஆண்டின் குடியரசு யாப்பு ஏனைய யாப்புகளை விட மனித உரிமைகள் பற்றிய உத்தரவாதத்தை முன்வைத்தது. ஆனால் அவ்வுரிமைகளை நடைமுறையில் பாதுகாத்துக்கொள்வதற்குத்தேவையான நிறுவனரீதியான ஏற்பாடுகள் எவையும் ஏற்படுத்தப்படவில்லை. இக்கட்சியின் 17வருட ஆட்சியில் 15 வருடங்களும் அவசரகால விதிமுறைகள், பயங்கரவாத தடைச்சட்டம் போன்ற அடக்குமுறைச் சட்டங்கள் மூலம் ஆளப்பட்டு வந்துள்ளன. இச்சட்டங்களானது அடிப்படை மனித உரிமைகளை மீறிச்செயற்படுவதற்கு அரச அடக்குமுறையாளர்களுக்கு சட்டரீதியான பாதுகாப்பை வழங்குபவையாகும்.

நாட்டில் நெருக்கடிகள் ஏற்பட்டால் அவற்றை சமாளிப்பதற்கு போதிய அதிகாரங்களைப்பயன்படுத்துவதற்கும் அதற்காகத் தற்காலிகமாக மக்கள் அனுபவித்துவரும் சுதந்திரங்களைக் கட்டுப்படுத்துவதுமே அவசரகால விதிமுறைகளின்நோக்கமாகும்.

ஆனால் ஐ.தே.கட்சி ஆட்சியைப் பொறுத்தவரையில் அவசரகால அடக்குமுறைச்சட்டங்கள் சாதாரண விவகாரங்களுக்கும் பயன்படுத்தும் நிலைமையை ஏற்படுத்தியது. 1980ம் ஆண்டு 300ரூபாய் சம்பள உயர்வைக் கோரி வேலைநிறுத்தம் செய்த தொழிலாளர்களை வேலையிலிருந்து நீக்கிவிடல், மக்களின் உரிமைப்போராட்டங்களை முறியடிக்க அரச சார்பற்ற நிறுவனங்களின் செயற்பாடுகளை விசாரணை செய்யும் ஆணைக்குழுவை நியமித்தல், பாடசாலை அபிவிருத்திச் சபைகள் ஏற்படுத்தல் போன்ற சாதாரண சட்டங்களின் அடிப்படையில் அணுகவேண்டிய விடயங்களையெல்லாம் பலாத்கார வழிமுறைகளில் அணுகுவதற்கு இந்த அவசரகாலச் சட்டத்தை தொடர்ந்தும் பயன்படுத்தி வந்துள்ளது ஐ.தே.கட்சி அரசு.

1977 வரை ஆட்சிசெய்த சிறிமா பண்டாரநாயக்காவின் அரசு அவசரகாலச் சட்டத்தை பயன்படுத்திய விதத்தின் கரானமாகச் சலிப்புற்ற மக்கள் அவர்களைப்படுதோல்வியடையச்செய்தார்கள் என்பது ஒரு முக்கிய விடயமாகும். இதில் மிகவும் வேடிக்கையான விடயம் என்னவென்றால், 1977ம் ஆண்டு இனப்படுகொலை நடைபெற்ற பொழுது அதைத்தடுத்து நிறுத்தத் தமது அதிகாரத்தைப் பயன்படுத்துவதைத் தவிர்த்து வந்த ஜே.ஆர். ஜயவர்தன, அவசரகாலச் சட்டத்தை பிரகடனப் படுத்தி இனப் படுகொலையை கட்டுப்படுத்தும்படி விடுக்கப்பட்ட கோரிக்கையை நிராகரித்து ''அவசரகால நிலைமையை பிரகடனம் செய்ய நாம் விரும்பவில்லை; அவ்வாறு செய்தல் மக்களின் சுதந்திரங்களை அறவே ஒழிப்பதாகும். குறிப்பாக கைது செய்தல், தடுத்து வைத்தல், ஆகியவற்றைப் பொறுத்தவரையிலும் அத்தோடு பாராளுமன்றத்தை தவிர்த்து வர்த்தமானி மூலம் சட்டங்களை இயற்றுவதற்கும் வழிகோலும்'' எனக்கூறினார். ஆனால் அவர் தலைமையிலான 11 வருட ஆட்சியில் ஒன்பது வருடங்கள் அவசரகாலச் சட்டத்தைப் பிரயோகித்த அடக்குமுறைய ஆட்சியாகவே இருந்தது. மனித உரிமைப் பாதுகாப்பு சிறுபான்மை இன உரிமைப் பாதுகாப்பு போன்ற விடயங்களில் மக்களின் மனம் உருகத் தலைவர்கள் பேசுவதும், அதே அரசில் ஒருசாரார் அதற்கு மாறாக செயற்படுவதும், டி.எஸ் சேனநாயக்கவின் ஆட்சியிலிருந்து இன்றைய சந்திரிகா ஆட்சிவரை காணக்கூடிய ஒரு விடயமாகும். அனுதாபங்களை வார்த்தைகளாலும் அடக்குமுறையைச் செயற்பாட்டாலும் வெளிப்படுத்துவது இலங்கை அரசியலில் ஒன்றும் புதிய விடயமல்ல. இன்றைய அரசும் சமாதானத்தையும், தமிழ் மக்களின் பிரச்சினை தீர்க்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் வெறும் வார்த்தைகளுக்குக்கட்டுப்படுத்தி விட்டு, யுத்தத்தை நடைமுறையில் நடத்திக் கொண்டிருப்பதுவே சிறந்த உதாரணமாகும்.

ஜே.ஆர். ஜயவர்தனவின் தார்மீக ஆட்சியில் இரண்டு தந்திரோபாயங்கள் பயன்படுத்தப்பட்டன. ஒன்று இன முரண்பாட்டைத் தூண்டிவிட்டு அதன் மூலம் அடக்குமுறைச்சட்டங்களை தனது ஆட்சியின் ஆயுதமாக்கிக்கொள்ளல்; இரண்டாவது அவ்வாயுதத்தைப் பயன்படுத்தித் தென்னிலங்கையில் அரசியல் ரீதியில் விடுவிக்கப்படுகின்ற சவால்களை முறியடிப்பது. இந்தத் தந்திரோபாயமானது இனமுரண்பாட்டை இந்நாட்டின் கேந்திரப் பிரச்சினையாக உருவெடுக்கவும், இலங்கையின் எல்லா அம்சங்களிலும் பலத்த தாக்கத்தை ஏற்படுத்துகின்ற பலமான பிரச்சினையாகவும் உருவாக வழிவகுத்தது.

இனமுரண்பாட்டைத் தீர்ப்பது என்பது ஆட்சியாளர்களுக்கு ஜனநாயக விரோத ஆட்சியை தொடர்வதற்கு முடியாமற் போகும் என்பதே இப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பதில் அவர்கள் காட்டும் தாமதத்திற்கான முதற் காரணமாகும் என்பவையாகும். அதிகாரத்துஷ்பிரயோகம், அடக்குமுறை, ஊழல் ஆகியவற்றை அடிப்படையாகக்கொண்ட ஒரு ஆட்சிக்கு சிறந்த எடுத்துக்காட்டாக ஐ.தே.கட்சியின் இந்தப் 17 வருட ஆட்சி அமைந்தது.

ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்வதற்காக முழுமையாகப் பலாத்கார வழிகளில் செயற்பட்டது ஐ.தே.கட்சி. 1981ம் ஆண்டு யாழ் மாவட்ட சபைகளுக்கானதேர்தலில் ஆரம்பமாகி அவ்வரசின் ஜே.ஆர். பிரேமதாச தலைமைகளில் நடத்தப்பட்ட தேர்தல்கள் மிகவும் ஊழல் மலிந்தவைமட்டுமல்ல, ஊழலில் ஈடுபடாவிட்டால் தேர்தலில் வெல்ல முடியாது என்ற நிலைமையைத் தோற்றுவித்தது.

ஐ.தே.கட்சியின் ஆட்சிக் காலத்தின் மொத்த விளைவுகளாகப் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1. பண்டாரநாயக்கா தம்பதிகளின் ஆட்சி தனித் தமிழ் ஈழக்கோரிக்கை ஏற்படுத்துவதற்குத் தேவையான அரசியல் அடிப்படையை ஏற்படுத்திக்கொடுத்தது. ஆனால் ஐ.தே.கட்சியின் ஆட்சி அக்கோரிக்கையை வென்றெடுப்பதற்கான ஆயுதப்போராட்டம் நடத்தப்படுவதற்கான இராணுவ அடிப்படையை ஏற்படுத்திக்கொடுத்தது.
2. பலாத்கார ஆட்சியின் விளைவாக வடகிழக்கு மற்றும் தென்னிலங்கையின் முரண்பாடுகளின் காரணமாக ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்டவர்களைக் கொலை செய்ததோடு முழு இலங்கையையும் யுத்தக்களமாக்கியது.
3. பொலிஸ், இராணுவம் உட்பட அரச நிறுவனங்களை இனவாதமயப்படுத்தியதோடு கட்சி அரசியல் மயப்படுத்தவும் செய்தது.
4. அரசியலை வன்முறைப்படுத்தியதோடு சமூகத்தை மிலேச்சத்தனமுள்ளதாக ஆக்கியமை.
5. தேர்தல்கள் உட்பட ஜனநாயக நடைமுறைகளில் மக்கள் நம்பிக்கையை முற்றாக இழக்கும் அளவிற்கு பலாத்கார வழிமுறைகளில் ஆட்சிசெய்தமை.
6. வன்முறைகளின் மூலமும், பலாத்கார வழிகளிலும் எதிரணி அரசியல் நடவடிக்கைகளை அடக்குவதற்கு முயன்றமை.

இறுதியாகக் கூறப்போனால் ஐ.தே. கட்சியின் ஜனநாயக விரோத ஆட்சியானது அக்கட்சிக்குள்ளும் உட்கட்சி ஜனநாயகத்திற்கான போராட்டத்தை ஏற்படுத்தியது. இதன் விளைவாக ஜனாதிபதி பிரேமதாசவுக்கு எதிராக ஒழுக்க வழுவுரையை (Impeachment) அக்கட்சியினரே பாராளுமன்றத்திற்குக் கொண்டு வந்ததிலிருந்து இந்நிலைமைகளை விளங்கிக் கொள்ளலாம்.

மேற்கூறியவற்றின்மூலம் அரசபலத்தைப் பிரயோகித்து ''ஒரு ஜனாதிபதியினால் ஒரு பெண்ணை ஆணாக்குவதையும், ஆணைப் பெண்ணாக்குவதையும் தவிர வேறு எதையும் சாதிக்க முடியும்'' என்று ஜே.ஆர்.ஜயவர்தன ஜனாதிபதியாக இருந்த காலத்தில் குறிப்பிட்டதைப்போல நினைத்தவற்றையெல்லாம் நினைத்த மாதிரி செயற்படுத்த முயன்றதன் விளைவுதான் இன்றைய நெருக்கடி என்பது தெளிவாகின்றது. இப்போது பதவியிலிருக்கின்ற அரசு முன்னைய அரசின் குறைகளைக் காரணம் காட்டிப் பதவிக்கு வந்து இப்போது அதே வழியிலேயே காலடி எடுத்து வைத்து அடக்குமுறையையும், வன்முறையையும் யுத்தத்தையும் தந்திரோபாயமாகக்கொண்டு செயற்பட ஆரம்பித்துள்ளது. இப்போக்கை முறியடிப்பதா அல்லது வெறும்பார்வையாளர்களாக இவர்களுக்கு வழிவிடுவதா? என்பதை ஐ.தே.கட்சியின் ஐம்பதாண்டு அரசியலின் ஊடாக நாம் முடிவு செய்தல் வேண்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# குழந்தைகளுக்கும் உங்களுக்குமிடையே. /5



மூலம்: டொக்டர் ஜெயிம் ஜீ ஜினொல்ட்
தமிழில்: அருண்

*வீட்டு வேலை (Home Work)*

முதலாம் வகுப்பில் இருந்து வீட்டு வேலை என்பது குழந்தையினதும் ஆசிரியரதும் பொறுப்புக்களே என்பதை வெளிப்படுத்தும்போக்கை பெற்றோர்கள் கட்டாயம் கொண்டிருக்க வேண்டும். பெற்றோர் வீட்டுவேலைகளைச் செய்யுமாறு குழந்தைகளை நச்சரிக்கக் கூடாது. குழந்தைகள் கேட்டுக் கொண்டால்ஒழிய பெற்றோர்கள் அவர்களது வீட்டுவேலைகளை மேற்பார்வை செய்வதோ, சரிபார்ப்பதோ அவசியமில்லை. (பெரும்பாலான ஆசிரியர்கள் இக்கருத்துடன் முரண்படுவார்கள்என்பது உண்மையே) பெற்றோர், குழந்தையின் வீட்டுவேலைகள் குறித்த பொறுப்புக்களை தாம் எடுத்துக் கொண்டால்குழந்தைகள் அதை ஏற்றுக்கொண்டு விடுகின்றன. பிறகு பெற்றோர்கள் இதிலிருந்து ஒருபோதும் விடுபடவே முடியாது. பெற்றோரைத் தண்டிக்கவும், குற்றம் சுமத்தவும் ஏன் மிரட்டவும் கூட இந்த வீட்டுவேலையை ஒரு ஆயுதமாகக் குழந்தைகள் பயன்படுத்தத் தொடங்கி விடுவார்கள். குழந்தைகளின் வீட்டு வேலைகளில் உள்ள சின்னச் சின்ன விடயங்கள் குறித்து பெருமளவு சிரத்தையை காட்டாதிருப்பது பெருமளவு பிரச்சினைகளைத் தவிர்த்துக் கொள்ளவும், குடும்ப வாழ்வில் சந்தோஷத்தை ஏற்படுத்திக் கொள்ளவும் வாய்ப்பளிக்கிறது. பெற்றோர்கள் பெரும் சிரத்தை காட்டுவதற்குப் பதிலாக எந்தவிதமான தயக்கமும் இல்லாமல் உறுதியாக இவ்வாறு அவர்களுக்கு கூறலாம். ''வீட்டுவேலை என்பது உங்களது பொறுப்புக்குட்பட்டவிடயம். வீட்டு வேலை உங்களுக்குத்தான் எங்களுக்கு அதில் என்ன வேலை இருக்கிறது''

வீட்டு வேலைகளுக்கு ஆரம்ப வகுப்புக்களில் அளவுக்கு மீறிய பெறுமதி கொடுப்பது அவசியமற்றது. பெரும்பாலான நல்ல பாடசாலைகள் குழந்தைகட்கு வீட்டு வேலைகளை வழங்குவதில்லை. இந்த மாணவர்களும் கூட ஆறு, ஏழு வயதுகளில் பெருமளவு வீட்டு வேலைகளுடன் மாரடிக்கும் குழந்தைகளைப் போல அதே அறிவும், திறமையும் உடையவர்களாக இருப்பதைக் காணலாம். வீட்டுவேலைகளின்முக்கியத்துவம் என்னவென்றால், அவர்கள் சுயமாக தம்பாட்டில் தமது வேலைகளைச் செய்வதற்கு அது பயிற்சி தருகிறது என்பதேயாகும். ஆயினும், இந்தப் பயிற்சியைப் பெற்றுக்கொள்வதற்கு வழங்கப்படும் வீட்டுவேலைகள் தரம் பிரிக்கப்பட்டு அவர்களது சக்திக்குட்பட்டதாக, பிறரது சிறிய உதவியுடன் செய்யப்படக்கூடிதாக இருக்க வேண்டும்.

## *இனி விளையாட்டோ ரி.வியோ கிடையாது!*

நேரடியாக உதவி செய்வது குழந்தை தன்னால் தன்பாட்டில் எதையுமே செய்யமுடியாது என்று நம்புவதற்கு மட்டுமே உதவும். ஆயினும், மறைமுகமான உதவிகள் பயனுள்ளவையே. உதாரணமாக குழந்தைக்கு ஒரு தனிப்பட்ட மேசை, வேறு தொந்தரவுகள் இல்லாமல் படிக்கும் வாய்ப்பு, தேவையான புத்தகங்கள் ஆகியவற்றை வழங்குவது ஒரு மறைமுக உதவியாகும்.

பருவகால நிலைகளைப் பொறுத்து ஒரு குழந்தை வீட்டு வேலையை செய்ய உகந்த நேரம் என்ன என்று புரிந்து கொள்வதில் அதற்கு நாம் உதவி செய்யலாம். வேனிற்கால மாலை நேரங்களில் வீட்டுவேலை செய்வதற்கு முதல் விளையாடவே குழந்தைகள் விரும்புவர். குளிர் காலங்களில் அல்லது மழை நாட்களில் வீட்டு வேலைகளை முதல் செய்து விட்டு ரி.வி.பார்த்தல் போன்றவற்றுக்கு பிள்ளைகள் போகலாம்.

சில குழந்தைகள், வீட்டு வேலைகளைச் செய்யும்போது யாராவது ஒரு பெரியவர் அருகில் இருப்பதை விரும்பக்கூடும். இவ்வேளைகளில் குசினியிலுள்ள ஒரு மேசையையோ சாப்பாட்டறையிலுள்ள மேசையையோ வீட்டு வேலைசெய்ய உபயோகிப்பதற்கு அனுமதிக்கலாம். ஆயினும் இவ்வாறான சந்தர்ப்பங்களில், எப்படி இருப்பது, எப்படி ஒழுங்காக நடந்துகொள்வது, அங்குள்ள தளபாடங்கள் குறித்து எப்படிக் கவனமாக இருப்பது என்பது குறித்து நாம் ஒரு சில அபிப்பிராயங்களைத் தெரிவிப்பது தேவைப்படலாம்.

சில குழந்தைகள் பென்சிலைச் சூப்பும் போது, தமது தலையைச் சொறியும்போது அல்லது கதிரையில் (இரண்டு காலில்) ஆடும் போது தமது வேலைகளைச் சிறப்பாகச் செய்பவர்களாக இருக்கிறார்கள். இவைகுறித்து எமது அபிப்பிராயங்களும், இவற்றைத் தடுக்க முயலும். எமது நடவடிக்கைகளும் அவர்களை விரக்தியுறச்செய்வதுடன் அவர்களது மூளை வேலையையும் குழப்பிவிடுகின்றன.

குழந்தைகளின் வீட்டு வேலைகள், இடையில் கேள்வி கேட்பதன் மூலமாகவோ பிழைகளை இடையில் சுட்டிக் காட்டுவதன் மூலமாகவோ குழப்பக் கூடாது. நாம் ஆதரவாகவும், உதவியாகவும், இருக்கவேண்டுமே ஒழிய அறிவுறுத்துபவர்களாகவும், திருத்த முனைபவர்களாகவும் இருக்கக் கூடாது.

இவ்வாறான அபிப்பிராயங்களைச் சொல்லவே கூடாது.

''உனக்கு ஒழுங்கான புத்தியிருந்தால் உனது வீட்டுவேலை ஞாபகம் இருந்திருக்குமே''

''ஆசிரியர் படிப்பிக்கும் போது கவனித்திருந்தால் இப்போது வீட்டுவேலை செய்வது ஒன்றும் கஷ்டமாக இராது''

எமது உதவி பகிர்ந்து கொள்ளப்படும் ஒன்றாகவும், ஆதரவுடன் செய்யப்படுவதாகவும் இருக்கவேண்டும். நாம் சொல்லிக் கொடுப்பதை விட அவர்கள் சொல்வதை அதிகம் கேட்கவேண்டும். நாம் பாதையை மட்டுமே காட்ட வேண்டும். குழந்தை தானே பாதையை தனது சொந்தப்பலத்துடன் நடந்து முடிக்க வேண்டும்.

பாடசாலையைப் பற்றியும் ஆசிரியரைப் பற்றியும் பெற்றோர் கொண்டிருக்கும் அபிப்பிராயம்; குழந்தையின் வீட்டு வேலைகள் பற்றிய அக்கறையில் செல்வாக்குச்செலுத்தும் பெற்றோர் ஆசிரியரை சிறுமைப்படுத்தியோ, கண்டித்தோ பேசும் பழக்கம் கொண்டவர்களாக இருந்தால் குழந்தைகள் தெளிவான முடிவுக்கு வந்துவிடுவார்கள்.

பெற்றோர், ஆசிரியரது வீட்டு வேலை தொடர்பான நிலைப்பாடு, கருத்து என்பவற்றைப் பொறுத்து அவரது கருத்துக்கு ஆதரவாக இருக்க வேண்டும். ஆசிரியர் கண்டிப்பானவராக இருந்தால், பெற்றோர் குழந்தைகள் மீது ஆதரவாக இருக்க அது வாய்ப்பளிக்கிறது.

''இந்த வருஷம் லேசான வருஷமில்லை என்ன? - நிறைய வேலை''

''இந்த வருஷம் உண்மையிலேயே கஷ்டமான வருஷம் தான்''

''ஆசிரியர் சரியான கண்டிப்பானவர் என்பது உண்மைதான்''

''அவர் நிறைய வேலைவாங்குகிறார் என்றுதான் கேள்விப்பட்டேன்''

''அவர் வீட்டுவேலைகளில் சரியான கண்டிப்பானவர் தானாம். இந்தமுறை நிறைய வேலை இருக்கும் எண்டு நான் நினைக்கிறேன்...'

ஒவ்வொரு நாளும் வீட்டுவேலைக்காக எரிந்து விழுவது தவிர்க்கப்படவேண்டிய ஒன்றாகும்.

''இஞ்ச பார் றெஜி, இப்பவிலை இருந்து இனி ஒவ்வொரு நாளும் பின்னேரம் நீ எழுத்துக்கூட்டல் பாடமாக்க வேண்டும். சனி ஞாயிறு நாட்களிலும்தான். இனி விளையாட்டோ ரி.வியோ ஒண்டும் பின்னேரங்களிலை கிடையாது....''

''இஞ்சபார்... உனக்கு வீட்டுவேலையை ஞாபகப்படுத்தி நான் களைத்துப் போனேன். நீ என்ன செய்கிறாய் எண்டு அப்பா ஒருக்கால் பார்க்கத்தான் போகிறார்... எங்கடை குடும்பத்திலை எங்களுக்கு முட்டாள்கள் தேவையில்லை...''

மிரட்டல்களும், நச்சரிப்புக்களும் மிகவும் சாதாரணமாக நடக்கின்றன. ஏனெனில், இதன்மூலமாக எதையாவது செய்துவிடலாம் என எல்லோரும் நம்புகிறார்கள். ஆனால் உண்மையில் அவை பயனற்றவையென்பதையும் விட மோசமானவை. அவை ஒரு அசௌகரியமான சூழலையே உருவாக்குகின்றன. அவை எரிச்சலூட்டப்பட்ட பெற்றோர்களையும், ஆத்திரமூட்டப்பட்ட குழந்தையையும்தான் உருவாக்குகின்றன.

(வரும்)

'96

ස්වාධීන සාහිත්‍ය උළෙල

சுதந்திர இலக்கிய விழா

*Independent Literary Festiva*

சுதந்திர இலக்கிய விழா 1996ல் புதிய எழுத்தாளர்களுக்கான ஆக்க இலக்கியப் போட்டியில் முதல் பரிசு பெற்ற கவிதை.

# பிட்டும் தேங்காய்ப்பூவும்

*வாரங்கள் மாதங்களாக
மாதங்கள் வருடங்களாக
வரலாற்றுப் பாதையில்
வாழ்க்கைப் பயணம்
உருண்டோடும்*

*உலக உருண்டையோ
நில்லாமல்
உற்சாகமாய்ச் சுற்றும்.*

*உறக்கமும் விழிப்பும்
இரவு பகலுடன்
என்றும் போலவே
இணைந்து செல்லும்.*

*நிலவும்
வந்தும் மறைந்தும்
நிரந்தர சேவை செய்யும்.*

*காலையில் கதிரவனும்
கணக்காய் உதிக்கும்.*

*கனகாம்பரமும்
அல்லியும் ஆம்பலும்
நீலோற்பலமும்
மல்லிகை பிறவும்
துல்லியமாய்
மலர்ந்து மணம் வீசும்.*

*நிச்சயமாய்
நேற்றைய நாள்போலவே
யாவும்
இன்றும் நடக்கும
இதுவே நாளையும் தொடரும்.*

*நேற்று...
காதருக்கு காலில் வலித்தால்
கந்தையாவின் கைகள்
தாங்கிச் செல்லும்.*

*பார்வதி மாமி
பால் பொங்கல் வைத்தால்
பாத்திமா வீட்டிற்கு
பாதி போகும்.
மரைக்காயரும் மணியத்தாரும்
வீதியால் கைவீசி
விரைவாய்ச் சென்றால்
யாராவது வீட்டில்
நல்லதோ....கெட்டதோ...
ஏதோ ஒன்று
நடந்து விட்டதாய்
நம்புவோம் நாங்கள்.*

*நோன்புக் கஞ்சியை
வீரும்பிச் சுவைத்திட
மாலைப் பொழுதில்
வீட்டுக்கு வந்து
உரிமையுடன்
உம்மாவிடம் கேட்டு வாங்கி
உறிஞ்சிக் குடிக்கும்
விஜயன்...விமலன்...
நட்பு மலர்கள்
தினமும் மணக்கும்.*

*பிள்ளையார் கோவிலில்
சிவராத்திரிக்கு
சின்னராசாவின் பக்கத்தில்
சித்தீக் இருந்து
மோதகம் உண்பான்....*

*ஐயர் வந்து
சிரித்தபடியே
அவித்த கடலையையும்
அள்ளிக் கொடுப்பார்.*

*இன்று யாவும்
என்னமாய் மாறின........
அந்த நாட்கள்
கனவாய்....கற்பனையாய்
எங்கோ ஒரு தூரத்தில்
ஒரு புள்ளியாய் மாறி
நினைவில் மறைந்தன.*

*ஆலிம் வீதியால்
அப்பாத்துரை வர
அஞ்சி மறுக்கின்றார்.*

*லிங்க நகருக்குள்
சாலிமுஹம்மது போய்
முன்போல்
கோழி முட்டைகளை
கூவி விற்க முடியாது.
பக்கத்துத் தெருவாயினும்
பகைமை வேலிகள்
உறவுப் பாதையில்
தடையாய் எழுந்தன.*

*சந்திர ராசாவும் சமதுநாநாவும்
சந்தியில் சந்தித்தால்
சந்தேகக் கண்கள் செந்தீ புறக்க
முறைப்புடன்
விரைந்திடும் அவசரம்.*

*மொழியால் இணைந்து
அன்பால் பிணைந்து
தொழிலால் கலந்த
இவர்களின்
உறவுப் பாலம்
உடைந்தது எப்படி...?*

*ஈரம் கசிந்த விழிகளில்
பொறாமை ஈட்டிகளை நாட்டி
போட்டியிட வைத்தது யார்...?*

*பிட்டும் தேங்காய்ப் பூவுமாய்
பிணைந்த
எம் தேசத்தின் புதல்வர்களை
பிரித்து வைத்து
பிரளயத்தை ஏற்படுத்திய
பிரம்மாக்கள் யார்...?*

*இதோ...
உலகம் என்றும் போல்
இன்றும் சுழன்றபடியே....
இரவும் பகலும்
இன்றுவரை அப்படியே...
இங்கோ
இவர்களின் வாழ்வில்
நேற்றைய இரவு
இன்னும் விடியவேயில்லை....
நம்பிக்கை ஒளியோ
கானல் நீராய்
கனவுகளுடன்
நாளையும் தொடர்கிறது.*

அபுசாலிஹ் மீரா முகைதீன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# 90களில் ஈழத்துக் கவிதைகளில் மாற்றம் ஏற்பட்டதா..?

## கவிதை ஒரு தனி இலக்கியமா?

— மு.பொ

சென்ற இதழின் தொடர்ச்சி...

### 3

நிலைமை இவ்வாறிருக்க இவர் ஏன் 90களில் தமிழ்க் கவிதைக்கு புதுப் பரிமாணம் ஏற்படுத்தியவராக சிலரால் ஏந்தப்படுகிறார். அதற்குக் காரணம் இவர்களுக்கு இன்றைய கவிதை பற்றிய பலபக்க வாசிப்பின்மை, பிறமொழிக் கவிதைகள் பற்றிய அறியாமை, கூடவே சிறந்த விமரிசனம் இன்மை, இவர்களுக்கு இந்த அஃறிணைப் பொருட்களை இலக்கியத்தில் பாவிப்பது நவீனத்துவக் காலமாகக் கொள்ளப்படும் 20ம் நூற்றாண்டின் ஆரம்ப காலத்தில் பிறமொழிகளில் நடந்து முடிந்த கதை தெரியாத ஒன்றாகும். 'மெற்ற மோபொஃசிஸ்' (Metamorphsis) என்றும் உலகப் பிரசித்தி பெற்ற காப்காவின் கதையில் ஒருவன் காலையில் விழித்தெழுந்தபோது தான் ஒரு கரப்பான் பூச்சியாக மாறியிருப்பதைக் காண்கிறான். ஏன் அவன் அவ்வாறு மாறினான்? அதனூடாக அவன் வைக்கும் சமூக அரசியல் பார்வை மிகுந்த ஆழமும் கவித்துவமும் அங்கதமும் நிறைந்ததாகும். இப்படிப் பலவற்றைக் காட்டலாம். இக்காலத்திற்கு சற்றுமுன் சாணத்தை உருட்டிக்கொண்டோடும் 'பீ' வண்டைப்பற்றியும் விட்மன் பாடியிருக்கிறான். ஏன் பாரதியாரே இக்காலத்தில் தான் உபநிஷதத்தின் அருட்டலால் காற்றையும் தீயையும் சூரியனையும் நட்சத்திரங்களையும் பற்றியும் ஆழமான கவித்துவச் செறிவோடு 'வசன' கவிதைகள் பாடியுள்ளார். இச்சந்தர்ப்பத்தில் சோலைக்கிளியின் 'அபிமானக் கவிஞனைத் தின்ற கரப்பான்' நினைவு வருகிறது. அது எவ்வளவு பலவீனமான கவிதை! இதிலும் அவருக்கே உரிய முறையில் அவருக்குப் பிரேமையான ''கண்களைக் கோழிமுட்டைபோல் பொரித்து'' என்னும் வார்த்தைகளில் 'புதுமை' காண்கிறார்! சோலைக்கிளி அஃறிணைப் பொருட்களைப்பற்றி எழுதக்கூடாது என்பதல்ல எமது வாதம். தாராளமாகப்பாடலாம். ஆனால், அளவறிந்து பாவிக்கும் விமர்சன, தரிசன நோக்குத்தேவை. சும்மா கட்டற்று பாவிப்பதுதான் புதுமையென நினைத்து ஒன்றையே போட்டு, ஒரே தன்மையான வார்த்தைகளையே திரும்பத் திரும்பப்போட்டு கிலுக்கட்டி போல் கிலுக்குவதல்ல. இதனால், மாபெரும் கவிஞனாக எழவல்ல தன்னுடைய ஆற்றலை சிறுமைப்படுத்தி கொச்சைப்படுத்தி சிதைத்துவிடுகிறார் என்பதே எமது ஆதங்கம். மேலும் இவர் இதையே தொடர்ந்து - இப்படி அஃறிணைப் பொருட்களையும் அவற்றின் இயக்கங்களையும் இடம்மாறிப் பாவித்து அல்லது வேறு வித 'திருகல்' வகையறாக்கள் செய்து 'பாம்பு மூத்திரம் விட்டது' என்றும் ''கோழி சாணி போட்டது'' என்றும் தொடருவாரேயானால், நாம் கவிதையைக் காணாது அதற்கு மாறாய் நமது சினிமாக்காரர்கள் பாடும் ''சேவல் வந்து முட்டைபோட்டது போக்கு நல்லால்லே, காளைமாடு கண்டுபோட்டது காலம் நல்லால்லே'' என்பதைப்போல் ''நமது கவிதையின் காலம் நல்லால்லே'' என்று தான் பாடவேண்டிய நிலைக்குத் தள்ளப்படுவோம்.

சோலைக்கிளியின் புதுப்பரிமாணங்களைக்காட்டும் கவிதைகளுக்கு உதாரணமாக ஸ்ரீகணேசன் ''நான் பாடப் பாடத்தான் வானம் நிலாச் செய்யும்'', ''என் பாட்டைக் குடித்து மழை முகிலும் கொழுத்து கொட்டும்'', ''மழைக்குள்ளே என் சினையிருக்கக் கண்டாயா?'' என்பவற்றைக்காட்டுகிறார்.

மேலே காட்டப்படும் சோலைக்கிளியின் கவிதைவரிகள் ''பாம்பு நரம்பு மனிதன்'', ''பனியில் மொழி எழுதி'', தொகுதிகளில் இருக்கும் அனேகமான கவிதைகளை விடத்தரமானவை என்பதை மறுப்பதற்கில்லை. ஆனால், அதற்காக இவை 90களில் தமிழ்க் கவிதைகளில் புதுப்பரிமாணத்தை ஏற்படுத்தியவை என்று கூறுவது வெறுமனே வலிந்து நிறுவ முயலும் கருத்தாகும். காரணம் இத்தகைய வரிகளை ஏலவே 80களில் எழுதத் தொடங்கிய சேரன், ஜெயபாலன், சு.வி, சிவசேகரம், சிவரமணி, விஜயேந்திரன், மைதிலி, ஜபார், ஔவை, மைத்திரேயி போன்ற கவிஞர்களிடமும் இவர்களுக்கு முந்தியவர்களிடமும் காணக்கூடியதாக இருப்பதே. ''முகில்களின் மேல் நெருப்புத்தன் சேதியை எழுதியாயிற்று'' என்று சேரன்கூறும்போதும் ''விடுதலைக் குருவி, நின் அலகிதழ் முனையில் எம் இருட் துயரெல்லாம் கிழியபடுகிறது'' என்று சு.வி. கூறும் போதும் நாம் காண்பவை சோலைக்கிளி இவற்றை மிஞ்சிப் போய்விடவில்லை என்பதையே. இவர்களுக்கும் முன்னர் 60களில் எழுதிய நீலாவணனின் 'ஓ! வண்டிக்காரா' கவிதையில் காணப்படும் ''பனியின் விழிநீர்த் துயரத் திரையில் பாதை மறையும் முன்னே, பிணியில் தேயும் நிலவின் நிழல்நம் பின்னால் தொடரு முன்னே'' என்னும் வரிகளில் காணப்படும் கவித்துவம் மிக்க படிமச் செறிவை வேறு எந்த ஈழத்துத் தமிழ்க் கவிதைகளிலும் காண்பது அரிது. வண்ணத்துப் பூச்சியையும், நிலாவையும் பனிமொழிகளையும், ஆறு நூல்கள் வரை சோலைக்கிளி எழுதியும் நீலாவணனின் ''பனியின் விழிநீர் துயரத்திரைக்கும்'', 'நிலவின் நிழலு'க்கும் ஒப்பான படிமச் செறிவை தந்துவிடவில்லை என்பது மிக முக்கியமான ஒன்றாகும்.

அவ்வளவு தூரம் போகத்தேவையில்லை. நான் 'திசை'யில் இருந்தபோது பிரசுரத்திற்கு வந்து 'திசை' நின்று போய்விட்டதால் பிரசுரிக்கப்படாது போன துர்ப்பாக்கிய கவிதை ஒன்றின் இறுதி வரிகளை இதோ இங்கே தருகிறேன். இக்கவிதையை எழுதியவர் கவிதை உலகில் அதிகம் பிரபலமில்லாத 'இமையவன்' என்பவராவார்.

*''ஒய்ந்துபோன நெஞ்சின் ஓர் ஆழத்தில்*
*ஒற்றை நரம்பு உயிர்ப்பினை யாழ்த்தது*
*வரண்டு சூம்பிய வாழ்க்கையும் ஆயிரம்*
*அர்த்தங் கண்டு விழிகள் இதழ்த்தன*
*இருண்டுபோன எல்லைகள் துலங்கிட*
*என்னிருப்பே விண்ணில் நிலவாய்ப்*
*பொழிந்தது!''*

கொட்டும் மழையில் 'என் சினையிருக்கக்' காண்பதும் 'என் இருப்பே விண்ணில் நிலவாய் பொழிவதும்' ஒரேவகையானவைதான். ஒரே வித கவித்துப் பாணிதான். மேலும் இக்கவிதையில் ''விழிகள் இதழ்த்தன', 'உயிர்ப்பினை யாழ்த்தது' போன்ற சொல்லாக்கங்கள் புதுவேர்ச் சொற்கள், ஆழம்மிக்க கவித்துவச்சுவை கொண்டவை. இவற்றைச் சோலைக்கிளியிடம் காணமுடியாது. ஆனால், அவர் அதிகமாக தன் கவித்துவத்தை இடம்மாறிப்பாவிக்கப்படும் பொருட்களாலேயே தக்க வைக்க முனைகிறார். உதாரணமாக ''ஒய் புல்லே... என் பெண்ணின் தொப்புளுக்குள் கூட குருத்து விட்டு நீ கொழுத்து நின்றால் கூட கோபிக்கேன்'' என்பது போன்றவை. ஆனால், இவ்வகையான போக்கு எந்நேரமும் தாக்குப்பிடிக்கப் போவதில்லை என்பதை ஏற்கெனவே விளக்கியுள்ளேன். இதோ 'இமையவனின்' இன்னொரு கவிதை ''அக்கினிக் குளிப்பு' அதன் தலைப்பு

*''அழுக்கிலிருந்து*
*ஒரு கணம் மனதை*
*எனக்குள் இழுத்தேன்*
*குளிப்பு நிகழ்ந்தது!*
*அக்கினிக் குளிப்பு!*
*அழுக்குடல் எரிந்தது*
*அதனுள் இருந்து*
*தெறித்துப் பிறந்த தென்*
*தீஞ்சுடர் மேனி!*
*அது புதுமொழி பேசிற்று*
*மழலைதான் ஆயினும்*
*ஒளிச்சுடர் அதனின்*
*உட்சரம் ஆயிற்று!*

இதில் வரும் 'தீஞ்சுடர்', 'ஒளிச்சுடர்', 'புதுமொழி', 'உட்சரம்' போன்றவை பல்வகை அர்த்தம் தருபவை. இன்று தமிழ் கவிதைக்கு தேவைப்படுவன தொன்மத்தில் காலூன்றிய புதுமொழி, ஒளிமிக்க உட்சரம் ஆகியவையே.

கவிதையின் உருவம் மட்டுமல்ல ஏனைய இலக்கிய உருவங்களான சிறுகதை, நாவல், நாடகம் பலவித உருவ உள்ளடக்க மாற்றங்களுக்குள்ளாகி வருகின்றன. இன்று வெளிவரும் தரமான கவிஞர்கள் எழுதும் கவிதைகள் கூடச் சலிப்புத்தரும் ஒரே வகை (Monotonous) ஒத்திசைப்பைத்தருவனவாகவே உள்ளன. அதாவது நான்கைந்து சொற்களைக்கொண்ட வரிகளை ஒன்றுக்குமேல் ஒன்றாக்கி படிக்கட்டு முறையில் கவிதை செய்யும் பாணி! இதை விட வேறு உருவ உள்ளடக்கங்களை நமது கவிதைகள் கொள்ளாவோ? இதோ இன்றைய மரபுக்குமாறான ஒரு கவிதை. ஒரு புலம் பெயர்ந்த நண்பர் ஒருவர் கடிதத்தோடு கடிதமாக இப்படி ஒரு கவிதையை எழுதி ''நீங்களெல்லாம் இப்படி கவிதைக்கென ஒரு தோரணை'யை போட்டுக்கொள்ளாமல் சொற்கள்மேல் 'வன்முறை'யைப் புகுத்தாமல் 'சும்மா' கவிதைகளை எழுதினால் என்ன? என்று கேட்டிருந்தார். அவர் அனுப்பிவைத்த கவிதை இதோ: பெயர் 'அணுவைப்பிளந்த அனுபவம்'

*''....விஞ்ஞானியின் நுணுக்கநோக்கில் மதர்த்து நின்ற அணுவின் யதார்த்தம்/ அவன்பாய்ச்சிய இலக்ரோன்கதிரொளித் துளைப்பின் தீவிரத்தில் / கோழிமுட்டை கோதெனப்பிளந்தது! அவன் நிமிர்ந்தான் புது உந்துதல்! / அங்கே பிளந்த அணுவுள் பால் வழி தெரியும், கூடவே/ நமது ஞாயிற்றுச் சுற்றும் கோள்களின் கும்மி எழுச்சி வேறு! / விஞ்ஞானிக்கு இன்னோர் பிரபஞ்சத் தரிசனம் சித்தித்தது''*

### 4

கவிதைபற்றிய இந்த நோக்கை விரித்தால் கட்டுரை, சிறுகதை, நாவல் போன்று கவிதை உருவம் மாறாதா? இந்தப் 'படிகட்டு' முறைதான் கவிதையா? என்ற கேள்விகள் எழலாம். ஜேம்ஸ் ஜொய்சின் 'யுலிசியஸ்' நாவலின் சில பகுதிகளைச் சிறந்த கவிதையாகப் பலர் கூறுவதுண்டு. சில கட்டுரைகளை அல்லது கதைகளை நாம் வாசிக்கும் போது, அவை இன்று வெளிவரும் கவிதைகளைவிட இன்பம் பயப்பவையாய் இருப்பதுண்டு. அப்படியானால், இன்னொரு கேள்வி தவிர்க்க முடியாததாகிறது. அதாவது கவிதை என்பது தனி இலக்கியமா அல்லது ஏனைய நாவல்சிறுகதை, நாடக இலக்கிய வகைகளுக்கு நமது உணர்வு இழையங்களிலிருந்து பாய்ச்சப்படும் இன்றியமையாத ஊட்டப்பொருளா?

இத்தகைய விசாரணைகளை தனக்குள் எழுப்பும் ஒருவன்தான் இனிவரும் கவிதைகள் பற்றித் தீர்மானிக்கக் கூடியவனாய் இருப்பான்.

ஆகவே, சோலைக்கிளியும் அவரது வட்டமும் 90களில் தமிழ்க் கவிதையில் தாம் புதுபரிமாணத்தைத் தந்ததாக நினைப்பது ஆழமற்ற விமர்சன நோக்கின்மையால் ஏற்பட்ட ஒரு மாயையே! 80களில் வெளிவந்த ''மரணத்துள் வாழ்வோம்'', ''சொல்லாத செய்திகள்'' போன்றவற்றை ஊன்றிப்படிப்பவர்களும் இந்த அவசர முடிவுக்கு வரமாட்டார்கள். மேலும் இச்சந்தர்ப்பத்தில் விரிவுரையாளர் யோகராசா, அண்மையில் நடந்த முற்போக்கு எழுத்தாளர் மாநாட்டில் கவிதை பற்றிய ஆய்வுக்கட்டுரையில், ''சோலைக்கிளி, வ.ஐ.ச. ஜெயபாலன், சு.வி., சேரன் போன்ற இன்றைய முன்னணிக் கவிஞர்கள் தம் கவிதை சொல்லும் முறையில் மாற்றத்தை ஏற்படுத்தாவிடில் காலங்கடந்தவர்களாகப் போய்விடலாம்.'' என்ற அர்த்தத்தில் கூறியவை மனங்கொள்ளத்தக்கது. இன்று ''இன்னும் தமிழை இனிதுபடுத்தவல்ல' (மஹாகவி) புதுக்கவிதைக்கு புதுரத்தம் பாய்ச்சி ஆற்றல் தரும் கவிஞர்கள் ஆங்காங்கே எழுந்து கொண்டிருக்கிறார்கள். இவர்களும் தமது கவிதை சொல்லும் முறையில் தேக்கத்தை ஏற்படுத்திக்கொள்ளாது பார்த்துக்கொள்ளல் அவசியம். இவர்களுக்கு உதாரணமாக அஸ்வகோஸ், மைதிலி, ஆகர்ஷியா, நட்சத்திரன் செவ்விந்தியன், றஷ்மி, ஷகீப், ஆத்மா, அன்சார் போன்றவர்களைக் குறிப்பிடலாம்.

மேலும் ஒன்று சொல்ல வேண்டும். தமிழ்க் கவிதைபற்றிய விமர்சனம் இன்னும் பூரணமாக பரந்த ஆய்வு முறையில் செய்யப்படவில்லை. வெறும் பட்டியல் தரும் விவகாரமாகவே இருந்து வந்துள்ளது. பூரணமான ஆய்வு மேற்கொள்ளப்படும் போது, நாம் கூறியவற்றின் உண்மை இன்னும் துலக்கமுறும்.

இறுதியாக இவ்விமர்சனத்தை சோலைக்கிளி பாணிக் கவிதையொன்றுடன் முடிப்பது பொருத்தமாக இருக்கும்.

*'இந்த விமர்சனத்தை படித்து*
*நட்சத்திரங்கள் துக்கித்து விண்ணிலிருந்து*
*எரிகற்களைக் கொட்டின.*
*பறவைகள் கழுத்துமயிர் கொட்டி*
*'குறாவி'ப்போய்த்திரிந்தன*
*வண்ணத்துப்பூச்சிகள் தம்மைக்*
*காதில் செருகும் கவிஞரைக்காணாது*
*அந்தரத்தில் படபடத்தன.*
*பல்லியும், எலியும் தம்மையறியாது*
*எச்சங்கழிய திருதிருவென முழித்தன*
*ஆனால், தான் வரும்போதே தன் விந்தை*
*இசையாகத் தெறிக்க விடும் காற்று மட்டும்*
*என்னருகே வந்து, ''நல்லகாலம்,*
*கேலிக்கிடமாய் போகாது*
*சோலைக்கிளியைக் காப்பாற்றிவிட்டீர்கள்!''*
*என்று குசுகுசுத்தது.*

---

## ஜெயமங்கள மாதா

அண்மையில் ரூபவாஹினி, வானொலி ஆகியவற்றின் தரம் தொடர்பாக உரையாட ஒழுங்கு செய்யப்பட்ட அமைச்சர் தர்மசிறி சேனநாயக்க தமிழ்க்கட்சி எம்பிக்கள் - வெகுஜன ஊடக அதிகாரிகள் சந்திப்பின்போது இடம் பெற்ற ஒரு சுவையான சம்பவம் இது.

வானொலியில் அதிகாலையில் ஒளிபரப்பு ஆரம்பமாக முதல் ஒலிபரப்பாகும் ஜயமங்கள மாதா (சிங்களம்) வுக்குப் பதிலாக நாதஸ்வர மங்கள இசை ஒலிபரப்பப்பட வேண்டும் என்று ஈ.பி.டி.பியினர் கோரிக்கை ஒன்றை வைத்தனர். ஆனால் முஸ்லிம் காங்கிரஸ் எம்.பி சுஹைர் இதனை எதிர்த்தார். முஸ்லிம்களுக்கும் தமிழ்ச்சேவை உரிமையானது - எனவே முஸ்லிம்களுக்கும் ஏற்ற பொதுவான இசையே ஒலிபரப்பப்பட வேண்டும் என்றார்.

தமிழ் எம்.பிக்களோ 1983 ஜூலைக்கு முன் நாதஸ்வரமே ஒலிபரப்பப்பட்டது. பின்னர் அது நிறுத்தப்பட்டது. எனவே நாதஸ்வரம்தான் ஒலிபரப்பப்பட வேண்டும் என்றனர்.

சுஹைர் விடவில்லை. 1983க்கு பின்னர் தான் தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் விழிப்புணர்ச்சி ஏற்பட்டது. எனவே நாங்கள் இந்த விடயத்தில் நல்ல தீர்மானம் எடுக்கவேண்டும் என்றார்.

பா.உ. பி.பி.தேவராஜ் ''முஸ்லிம் சேவைக்கு முன்னர் உங்களுக்கு விரும்பியதை ஒலிபரப்புங்கள் தமிழ்ச்சேவைக்கு முன்னர் நாதஸ்வரம்தான் வரவேண்டும்'' என்றார்.

தமிழ் எம்பிக்கள் அனைவரும் விடாப்பிடியாக நின்றனர்.

சுஹைர் ''முஸ்லிம் சேவை என்று ஒன்று இல்லை; முஸ்லிம் நிகழ்ச்சி என்றுதான் உண்டு'' என்று கூறியபடியே வானொலிப் பணிப்பாளர்களில் ஒருவரான மதியழகனிடம் கேட்டார். மதியழகனும் முஸ்லிம் நிகழ்ச்சி ஒன்றுதான் உள்ளது என்றார்.

சுஹைரோ முஸ்லிம்கள் தமிழ்ச்சேவையைக் கேட்பவர்கள் அவர்களுக்கும் பொதுவான இசையே தேவை என்றார்.

நாதஸ்வரத்தில் ஒலிக்கும் இசையின் அர்த்தம் என்ன என்று அருந்ததி ஸ்ரீரங்கநாதன் அவர்களைக் கேட்டார்.

அவர் சொன்னார்:

''கோயில்களில் பாடப்படும் பாடல்'' என்று!

தமிழ் எம். பி. இராஜரட்ணம் விடவில்லை. நாங்கள் (எம்.பிக்கள்) பெரும்பான்மையானோர் நாதஸ்வரத்தை ஏற்றுக்கொள்கிறோம். இவர் ஒருவர்தான் எதிர்க்கிறார். பெரும்பான்மை ஆதரவையே நடைமுறைப்படுத்த வேண்டும் என்றார்.

சுஹைர் ஒரு சட்டத்தரணி விடுவாரா? பெரும்பான்மை, சிறுபான்மை பிரச்சினை இல்லை. நான் எனது சமூகத்தையே பிரதிபலிக்கிறேன். இந்துக்களை மதிக்கிறேன். அப்படியாயின் பெரும்பான்மையானோர் விரும்பும் ஜயமங்கள மாதாவையே ஒலிபரப்பட்டுமேன் என்றார். இறுதியாக விடயம் முடிவுக்கு வந்தது. தமிழர் - முஸ்லிம்கள் எல்லோருக்கும் பொதுவான இசையில் பாடல் எழுதி காலையில் ஒலிபரப்புவது என்று.

சுவையான சம்பவம் இதுதான்:

இந்த விவாதம் நடந்துகொண்டிருந்த வேளையில் பி.பி.தேவராஜ் எம்பி அவர்கள் ''இந்தியாவில் பிரபல நாதஸ்வர வித்துவான்கள் பலர் முஸ்லிம்கள்தான்; ஷேக்சின்னமௌலானா போன்றவர்கள் நாதஸ்வர இசைக்கு பெரும் பணி செய்துள்ளனர். அதனால் நாதஸ்வரம் முஸ்லிம்களுக்கு எதிரானதல்ல' என்றார்.

அவ்வேளை சித்தார்த்தன் எம்.பி. சொன்னார் 'கொம்பிறிமைசிங்'காக அதிகாலையில் மங்கள இசையாக சின்னமௌலானாவின் நாதஸ்வர இசையை ஒலிபரப்பரலாமே!


கடந்த ஒரு வருடமாக தொலைக்காட்சி வானொலி நிகழ்ச்சிகளின் தரம் பற்றிய இந்தக் கூட்டம் இப்படித்தான் நடந்து வருகிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ரொறன்ரோ 2002



## சுரேஸ் சுப்பிரமணியம்

பூங்காவிலேயாவது நிம்மதியாக கொஞ்சம் இருக்கலாம் என்றால் அந்த பிச்சைக்காரத்தாடி என்னை நோக்கி வந்து கொண்டிருந்தது. வந்து காசு கேக்கப்போகுது ''காசு கொடுத்தால் பேசாமல் போய் விடும்'' என்று சில்லறையை எடுத்து தயாராக வைத்தேன்

தாடி மெதுவாகத் தள்ளாடியபடி வந்தது. பூங்காவில் வேறு ஒருத்தரும் இல்லை. நேரம் இரவு ஒரு மணிக்கு மேலாக இருக்கவேண்டும். பூங்காவைச் சுற்றி ரோடுகள். அந்தப்பக்கம் ஜெரார்ட், இந்தப்பக்கம் பார்லிமென்ட்....ரொரன்ரோ மாநகரம் முழுக்க அந்தப் பூங்காவைச் சுற்றிய ஒரு சிறை போல வியாபித்திருந்தது. மேலே கரு நீல வானம், நட்சத்திரங்களைச் சுற்றியுள்ள கிரகங்கள் பூமியைப்போல உயிரினங்கள் கொண்டிருக்கலாம், என்று எங்கேயோ வாசித்தது ஞாபகத்திற்கு வந்தது. சில நேரம் அங்கிருந்த உயிரினங்கள் சூரியனைப் பார்த்துக் கொண்டு... ''இன்னும் வெறி போகேலை'' என்று எனக்குள் சொல்லிக்கொண்டேன்.

தாடி ''பெஞ்ச்''சில் இருக்காமல், நிலத்தில இருந்தது. கையில் ஒரு போத்தல், பிச்சை எடுத்த முழுக் காசும் போத்தலில் தான். என்னைக் காணாதது போல ஜெரார்ட் ஸ்ட்ரீட்டையே பார்த்துக் கொண்டிருந்தான். தலைமயிரை சிலோனில் கடைசியாக வெட்டி இருக்க வேண்டும். இங்கே வந்து 15 வருஷம் ஆகியிருக்கும். 1987ல் வந்தவன் என்று அன்றைக்கு கதைத்துக் கொண்டாங்கள். தூரத்தில் இருந்த ''பெஞ்ச்''சில் இரண்டு வெள்ளைகள் தம்முடைய நாக்கைத் தம்முடைய வாயிலேயே நெடுக வைத்திருந்து அலுத்துப் போனதாலோ என்னவோ, அடுத்தவனுடைய வாய்க்குள் ஓட்டுவதில் மும்முரமாய் இருந்தார்கள்.

''தம்பி சிலோனா?'' திடுக்கிட்டுத் திரும்ப, தாடி பல்லைக் காட்டியது.

''ஓம்''

''எப்ப இங்கே வந்தனி?''

''மூன்று வருஷம் ஆகிட்டுது. வந்து - 1999ல் வந்தனான்.''

''இப்பதான் குளிர் பழகிட்டுதோ?''

குளிரில பழகிறதுக்கு என்ன இருக்குது. தாடிக்குக்கூட திமிர் முந்தியே வந்ததிலே. ஒன்றும் சொல்லாமல் இருந்தேன்.

''தம்பி எப்படி இருக்கிறான் சிலோனிலே?'''

''தம்பியோ, யார் தம்பி... எனக்குத் தம்பி இல்லை.'' என்றேன்.

''அட அவன் தான் எல்லோரும் தம்பி தம்பி என்பார்கள்'' யார் இது தம்பி? ஓ! முந்தி பெரியவரை ''தம்பி'' என்று தானே சொல்கிறது சனம். ''அவருக்குகென்ன எப்பவும் நல்லாய்த்தான் இருப்பார்''

''அங்கே சனம் நல்லாய் இருக்குதோ? நான் வரமுதல் தனிநாடு, தனிநாடு என்றிருந்தவையள, இப்ப என்ன மாதிரி? சந்தோஷமாய் இருக்கினமோ?''

''ஏதோ இருக்கினம்''

''சந்தோஷமாய் இருந்தா ஏன் தம்பி உன்னைப்போல சனம் இன்னும் அகதிகளாய் வந்து கொண்டிருக்குது? அப்ப ஈழம் வேண்டும், இப்ப ஜனநாயகம், நாளைக்கு சந்தோஷம்... எல்லாம் மனம் தம்பி''

தாடி பொக்கெட்டுக்குள் இருந்து ஐந்து ஆறு சிகரெட் துண்டுகளை - ரோட்டில் பொறுக்கின அடித்துண்டுகளை - எடுத்து கவனமாக ஒவ்வொரு துண்டையும் ஆராய்ந்து பார்த்த பிறகு, ஒரு துண்டை எடுத்து பற்ற வைத்தது.

எனக்கு ஒரே குழப்பம். சனம் இவனை பைத்தியம் என்கிறதுகள், இப்ப இவனோடு இருந்து கதைக்கிறதைப் பார்த்தால் என்னையும் விசர் எண்டுங்கள். போகலாம் என்றால், தாடி கதைக்காமல் போகிறேனென்று போத்தலால் அடித்தாலும் அடித்து விடுவான் என்று பயமாக இருந்தது.

''என்ன இருந்தாலும் சிலோன், சிலோன் தான் தம்பி... சின்னனாக இருக்கும் போது நாவல் மரத்திலே ஏறிக் குரங்கு மாதிரி சாப்பிடுகிறனான் தம்பி. இங்கே எங்கே அதெல்லாம்.... கங்கிரீட்டும் ஸ்டிலும் கார்பன் டை ஒக்ஸைட்டும்....

பு...........யில் வாழ்க்கை''

தாடி போத்தலை எடுத்து வாய்க்குள் ஓட்டி மிஞ்சியிருந்த ஒரு துளி சாராயத்தையும் நக்கியது. ''என்ன தம்பி யோசிக்கிறாய் போல இருக்குது யோசிக்காதே, எப்ப யோசிக்கிறியோ அப்பதான் பிரச்சினையே தொடங்குது. பேசாமல் பிறந்தேன், வளர்ந்தேன், செத்தேன் என்றிரு... ஒரு நாளும் யோசிக்காதே. இந்த ஏன் எதற்கு எப்படி என்றெல்லாம் கேக்காதே. சும்மா இரு. Just exist! '''தாடி போத்தலை கண்ணுக்குக் கிட்ட வைத்து, மேலே பார்த்தது. உள்ளே ஒன்றும் இல்லை.

''இப்பிடித்தான் 87இலே இங்கு வந்த நேரத்திலே யோசித்தேன். முதல் சிலோன் தான் உலகம் என்று இருந்தேன். இங்கே வந்தால் எவ்வளவோ முன்னேறிய நாட்டிலும் எவ்வளவோ பிரச்சினைகள். அங்கே முட்டாள்கள் மரத்தைத் தெய்வம், பாம்பைத் தெய்வம் என்று கும்பிடுவாங்கள். இங்கே எல்லாம் தமக்குத்தான் என்று அழிக்கிறாங்கள்.. அழித்திட்டாங்கள்! இப்ப பார் உலகம் முழுக்க எரிபொருள் திண்டாட்டம், அல்லல் படுது. இருக்கிற எரிபொருளும் பத்து - பதினைஞ்சு வருசத்தில் முடியப்போகுது. பிறகு என்ன செய்யப் போகிறாங்கள்? நியுக்கிளியர் பவர் புஸ்வாணமாய் போய் விட்டது.. யோசிக்காதே எண்டும் அரசாங்கம் சொல்லேலை ஆனால், யோசி என்றும் சொல்லேலை ... புத்திசாலிகள்.. புத்திசாலிகள்... புத்திசாலிப்பு............கள்''

''இந்த உலகத்திலே கனக்க புத்தசாலிகள் தம்பி, அதுதான் பிரச்சினை. அறிவாளிகள் அழிந்து கொண்டிருக்கிறார்கள். புத்திசாலிகள் வளர்ந்து கொண்டிருக்கிறார்கள். பகிடி என்ன? உனக்கு புத்தகம் எழுதுகிற அறிவு இருந்தால் காணாது, அதை விற்கிறதுக்கு புத்தி வேணும். எல்லாம் கூர்ப்பு விதி.''

''ஏன் இப்ப சிலோனையோ, இந்தியாவையோ பார், இதே பிரச்சினைதான் அங்கேயும். இரண்டாயிரத்துக்கு பிறகு இந்தியா சீனாவைக் கிட்டத்தட்ட முந்திவிட்டது சனத்தொகையிலே. இங்கே பெற்றோல் தேவை. அங்கே சமைக்க விறகு தேவை. கோடிக்கணக்கான மக்கள் விறகுக்கோ கமத்திற்கோ என்று காட்டை அழித்துப் போட்டு இப்ப என்ன செய்யினம்? எதியோப்பியா எண்பதுகளில் இருந்த மாதிரி ஆகிவிட்டது. இந்திய துணைக் கண்டமே கிட்டத்தட்ட ஒரு பாலை வனமாகி விட்டது. மழை ஒரு கிழமை பிந்தினால், பத்து இலட்சம் சாகுது. ஏன் தம்பி? ஒருத்தன் ''கிரீன்கவுஸ் விளைவு'' என்கிறான். இன்னொருத்தன் ''ஐஸ் ஏஜ்'' என்கிறான். எனக்கு இந்த சயன்ஸ் தெரியாது. ஆனால், என்ன நடக்குது என்று தெரியுது. எனக்குத் தெரிந்தது என்ன? இந்த ஜனநாய நாட்டின் தலைவர்களுக்கு தெரியவில்லையே. அரசியல்வாதிகளைச் சொல்லவில்லை., தம்பி மக்கள் தான் இங்கு தலைவர்கள்; அரசியல்வாதிகள் சும்மா தலையாட்டும் பொம்மைகள்! இப்ப பார், ஒரு நாட்டின் தலைவன் புதிதாக பதவிக்கு வருகிறான் என்று வை. அவன் சொல்கிறான். ''இந்த ஃபக்டறியை மூடு, அந்த ஃப்டரியை மூடு, சூழலைப்பாதிக்குது என்று. அவன் பதவியில் நிலைக்க மாட்டான் கனகாலத்திற்கு. அப்படி இருந்ததாலும். அடுத்த இலக்ஷனில் தோற்றுப் போய்விடுவான். ஏனென்றால் சனத்திற்கு வேலை வேண்டும். பணம் வேண்டும். சுகம் வேண்டும். ஒரு ஜனநாயக நாட்டிலே பதவியில் நிலைக்கிறதாய் இருந்தால் ஒன்று மக்களை ஏமாத்த வேண்டும். இல்லை என்றால் மக்களுக்கு வேண்டியவைகளை உன்னுடைய பொலிசி ஆக்கிவிட வேண்டும். ஜனநாயகம ஒரு மிருகம் தம்பி: மெதுவாக உன்னை சொகுசுபடுத்தித் தூங்க வைத்து பாதாளத்தில் தள்ளிவிடும்.''

''நீ கேக்கலாம் எல்லாம் சரி என்ன பரிகாரம் என்று. எனக்குத் தெரியாது தம்பி, இந்த உலகத்தில் இப்ப என்ன எண்ணாயிரம் மில்லியனோ சனத்தொகை? இவ்வளவு சனமும் இருந்து இரண்டு, மூன்று வேளை சாப்பாடு மட்டும் இருந்தாலே கனகாலம் தாங்காது. ஆனால், கார், வீடு, வேலை என்று அலைகிறாங்கள் தாய்..........கள். சரி கனடாவிலே இருக்கிற உன்னுடைய ஜெனரெசனை எடு. எல்லாம் டேய்க்கேரிலும் சைல்ட் கேரிலும் வளர்ந்ததுகள்... இதில அரைவாசி எங்கையாவது மிசினைப் போட்டு இடித்துக் கொண்டு இருப்பாங்கள் இப்ப... நிலைமை இன்னும் குழம்புமே தவிர சீராகப்போவதில்லை. எல்லாத்திற்கும் ஒரு முடிவுதான் தம்பி: முடிவுதான் தம்பி.'' தாடி எழும்பித் தள்ளாடியபடி ஜெராா்ட் வீதியை நோக்கிப் போனது... இருட்டில் மறைந்தது. நானும் எழுந்து என்னுடைய அப்பார்ட்மென்ட் நோக்கி நடக்க - என் கால் அதைத் தட்டியது. அது அவன் குடித்த சாராயப் போத்தல். ஒரு நினைவுச் சின்னமாய் இருக்கட்டும் என்று அறைக்கு எடுத்து வந்தேன். அது ஒரு ''டீச்சேர்ஸ்'' லேபல்.

ஸ்டீரியோவில் U 2என்ற ஒரு றொக் பாடிய பாட்டொன்று ஒலிபரப்பாகிக் கொண்டிருந்தது: I wanna run

I wanna see the sky

I wanna tear down these walls

I'm lonely inside

I wanna reach out touch the flame

whrer the streets have no name.....

அம்மா கேட்டிருந்த விஷயம் ஞாபகத்திற்கு வர, அம்மாவிற்குக் கடிதம் எழுதினேன்:

அன்புள்ள அம்மா, தங்கச்சிக்கு,

நீங்கள் கேட்டபடி சிவராமருடைய மகன் குடும்பத்தாரோடு முந்தநாள் கதைத்தேன். அவர்களுக்கு போட்டோ காட்டினனான். இன்று பின்னேரம், வீட்டை வந்து அவர்களுக்கு இஷ்டம் என்று சொன்னவையள். பெடியன் இங்கு ஒரு பெற்றோல் ஸ்டேஷனில் வேலை செய்கிறான். சுமாராக இருக்கிறான். ஒரு கெட்ட பழக்கமுமில்லை என்று கேள்வி. வருஷம் 20,000டொலர் அளவில் உழைக்கிறான். பார்ட்ரைமாகப் படிக்கிறானாம்... என்னுடைய கணக்கின்படி அவர்கள் கேட்ட காசு இன்னும் ஒன்றரை வருஷத்தில் சேமித்து விடுவேன். மீதி பின்.

இப்படிக்கு, அன்பு மகன்

மணி

பிகு. இத்துடன் பெடியனுடைய படம் அனுப்பியுள்ளேன். தங்கச்சிக்குக் காட்டவும்.

விடிந்தால் வேலை என்ற நினைவு வர, கட்டிலில் சாய்ந்தேன். அந்த இரவு நான் கனவு காணவில்லை.

---

'96

சுதந்திர இலக்கிய விழாவில் 1996ல் 3வது பரிசு பெற்ற கவிதை.

## தண்ணீச்-சோற்றுக்கடன்

காரணமில்லாமல் கைசொறிய
புழுதிவிழாமல் கண் சிவக்க,
பேனில்லாமல் தலையரிக்க
வெறும் வாயில் பல்லுக்கொறிக்க
வீடு,
வதைக்கூடமாய்த் தோற்றும்!
பிரசவம் கழிச்ச பூனையாய்
மல்லுக்கட்டி
முற்றத்துக்கு வெளிப்படுவது
தவிர வழியிருக்காது!

•

பேடுரெண்டு கோழிச்சண்டை போடும்
கருவாட்டுத்தலையில்
காகம் மெய்மறக்க...
நாய்கத்திப்பறிக்கவும்
அது எச்சம் பீச்சிப்பறக்க
கட்டெறும் பூர்ந்து கலையும்
அந்தக்கல்லு...

•

அந்தக்கல்லில், வேர்பிடித்துவெம்ப
காலம் தேயும்...
நத்தை முந்தும்

•

கடைக்காய் கட்டிவெச்ச
பேப்பரிலிருந்து
இன்று, சீனி சுத்திவந்த பேப்பர் வரை
அச்சரம் அச்சரமாய்
மேய்ந்து முடிச்சும்....!

•

பிஞ்சு பூவோடு துளாவிய மாங்கதிண்டு
புகை மணத்திற்சுட்ட
பலாக்கொட்டையும்
வெள் வாலாய் சப்பி முடியும்!

•

மணல் மண்ணில் கேலிச்சித்திரம் கீறி
'மாபள்' சுவரில் தூசுபடுவதற்கு
பக்கத்தூட்டு ஆச்சியின் உறுமல்.
கேட்கும்....
புளிச்சமுகாரி

•

ரோட்டளப்போர் ஒயில் பார்த்து,
இந்த நேரத்தில் இந்த பஸ் போகுமென்று
குழந்தையாய் தண்ணிப்பாடம் வேறு....

•

காலம் தேய நத்தைமுந்தும்...
அந்தி பிந்தம்....

•

ஒன்றுமில்லாமல் போனால்....
கொசுக்கூட்டமாவது ஒழுக்குபோகும்...!
எது மறந்தாலும்
நிமிஷத்துக்கு நிமிஷம்
தேங்காய்த்துரும்பாய் நரம்புலுப்பி
நுறையீரல் மூச்சுழக்கி
மூளை மின்னோற்றம் நடத்தி
ஞாபகம் செய்யும்.... என் சோகத்தை!
வேலையில்லலாத என் சோகத்தை!

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





# ஒரு பேரினவாதப் பெருந்தன்மை!

## இனப்பிரச்சினை பற்றிய சிங்கள தொலைக்காட்சி நாடகம்: -சில குறிப்புக்கள்







வி.ஆர்.என்

இனநல்லுறவைத்தளமாகக்கொண்டு மற்றுமொறு தொலைக்காட்சி நாடகம் வெளியாகியுள்ளது. 'மானவ வரன' என்ற இந்த தொலைக்காட்சி நாடகத்தை நிமல் தென்னக்கோன் நெறிப்படுத்தியுள்ளார். அண்மையில் இது பத்திரிகையாளர்களுக்குக் காண்பிக்கப்பட்டது. இனநல்லுறவு என்ற பதத்துடன் ஏற்கெனவே வெளிவந்த கொட்டிய வலிகய, நொமியன மினிசுன் போன்ற சில திரைப் படங்களும் சுரஅசுர என்ற தொலைக் காட்சி நாடகமும் வாசகர்களுக்கு ஞாபகம் இருக்கலாம்.

அவை பதித்த தளத்திலேயே இதுவும் இணைந்துகொண்டது. ஏற்கெனவே வந்தவற்றைப் பார்த்தவர்களுக்கு -குறிப்பாகத் தமிழ்ப் பார்வையாளர்களுக்கு -இன நல்லுறவு விடயத்தில் முன்னைய படங்களிலிருந்து இது விலகிப்போனதாகத் தெரியாது. தமிழர்களின் அடிப்படைப் பிரச்சினைகளை சிங்கள மக்களுக்குத் துணிவாக, தெளிவாக்கக் கூடிய சிறப்பு ஏதும் இதற்கு இல்லை.

சிங்கள மக்கள் இன நல்லுறவு என்றால் மனதில் என்ன என்ன அடிப்படையான சிந்தனைகளை வைத்திருக்கின்றரோ அந்தப் புலத்தினுள் நின்று கொண்டு அதற்கு வெளியே வராமல் அவர்களுக்குத் தெரிந்த யதார்த்தத்தை அப்படியே விம்பப்படுத்தியுள்ளது இந் நாடகம்.

சுருக்கமாகச் சொல்வதானால், இனப் பிரச்சினை இந்த நாட்டில் இன்னமும் ஏன் இருக்கிறது என்பதற்கு இந்தப்படமே ஒரு சான்று! பாதிக்கப்பட்டோரின் பிரச்சினைகளை யதார்த்தமாகக் கொணரும் கலைப் படைப்புகள் அவர்களிடத்திலிருந்தே வெளிவரவேண்டும் என்று இதற்காகத் தான் வலியுறுத்துகிறார்களோ.

சிங்கள மக்களுக்கு வரலாற்று ரீதியாக ஊட்டப்பட்ட சில விடயங்கள் உள்ளன. அவை:

1. தமிழர்கள் எல்லோரும் இந்தியாவிலிருந்து வந்தவர்கள் என்பது.
2. தமிழர்கள் கூலி வேலை செய்ய வந்தவர்கள் என்பது.
3. தமிழர்களிடம் தம்மைப்பற்றி போலிப் பெருமிதமும், இன உணர்வும் உள்ளன என்பது.
4. அடித்துத் துரத்தியதாலேயே, அதுவும் காடையராலும் குண்டர்களாலும் பாதிக்கப்பட்டதாலேயே நாடு கேட்டு ஆயுதம் தூக்கினர் என்பது.
5. வடக்கில் குண்டு விழுந்து கட்டிங்கள் உடைந்து அழகான யாழ் நகரம் அழிந்ததற்குக் காரணம் பயங்கரவாதிகளே என்பது.
6. பொருளாதாரத்தடை நீக்கப்பட்டதோடு தமிழர்களுக்கு எல்லாம் வழங்கப் பட்டுவிட்டது என்ற உணர்வு.

மேற்குறித்த அடிப்படைகளிலிருந்து இந்தத் தொலைக்காட்சி நாடகமும் விலக வில்லை. இதில் எமது தமிழ்க் கலைஞர்கள் சிலரும் பங்குபற்றியுள்ளனர்: அவர்கள் தான் என்ன செய்ய முடியும்? அரசியலில் மட்டுமன்றி கலைத்துறையிலும் சோரம் போக வேண்டிய நிலை! தமிழில் நல்ல கலைப்படைப்புகள் ஆக்கப்படுமானால், அதற்கு வேண்டிய சூழல்கள் ஏற்படுத்தப்படுமானால் இப்படியானவற்றில் இவர்கள் நடிப்பார்களா? பரமபிதாவே இவர்களையும் மன்னியும்!

கதையைப்பற்றி எழுத எதுவித அவசியமும் ஏற்படவில்லை. தமிழர்கள் சிங்கள மக்கள் மத்தியில் இன்னும் எப்படிச் சித்திரிக்கப்படுகிறார்கள் என்பதும், அதற்கு எமது பெருந்தமிழ்க்கலைஞர்கள் எப்படித் துணை போயிருக்கிறார்கள் என்பதும்தான் இந்தக் குறிப்பின் நோக்கமாகும்.

அகதியாக்கப்பட்ட நிலையில் (இந்த நாடகத்தின் காலப்பகுதி 1983) நடராஜசிவமும் குடும்பமும் போவது இந்தியாவுக்கு, யாழ்ப்பாணத்துக்கு அல்ல. ஆவரங்கால் தெல்லிப்பழை சாத்திரியை நடராஜசிவம் கலவர அடியில் மறந்துவிட்டாரோ என்னவோ? மகன் மேவின் மகேசன், அப்பா நாங்கள் யாழ்ப்பாணம் போய் என்ன செய்கிறது என்று கேட்கிறார்.

(வடகிழக்கு மாகாணங்கள் தமிழரின் தாயகம். தெற்கில் அடிபட்ட போது அங்கு தான் தமிழ் மக்கள் போனார்கள் என்ற உண்மை இங்கு திரிக்கப்படுகிறது) நடராஜசிவமும் மேவினும் இயக்குநரைக் கேட்டிருக்கலாம். கேட்டிருந்தால் இந்தியாவுக்கு அல்ல, வீட்டுக்கல்லவா போகவேண்டியிருந்திருக்கும். படத்தின் கதைப்படி 1983இல் பாதிக்கப்பட்ட யாழ்ப்பாணத்தவர்கள் யாழ்ப்பாணத்துக்குப் போகாமல் இந்தியாவுக்குப் போயிருந்தால் அவர்கள் யாழ்ப்பாணத்தவராக இருக்க முடியாது மனநோயாளிகளாகத் தான் இருக்க வேண்டும்.

தகப்பன் நடராஜசிவம் இங்கு ஒரு ரெயில்வேப் போட்டராகவே காட்டப்படுகிறார். வழமையான சிங்களத் திரைப்படங்கள், தொலைக்காட்சி நாடகங்களில் தமிழர்களைக் கூலிகளாகவும், முஸ்லிம்களை வட்டிக்கு காசு கொடுப்பவர்களாகவும் காட்டும் பாரம்பரியத்திலிருந்து இந்த இயக்குநரும் விலகவில்லை. திரையில் காட்டப்பட்ட 1978 -1988 காலப்பகுதியில் தென்னிலங்கையில் பல புகையிரத நிலையங்களில் வடகிழக்கின் தமிழர்கள் பலர் புகையிரத நிலைய அதிபர்களாகவே இருந்துள்ளனரே தவிர போட்டர்களாக இருக்கவில்லை என்பதும், இனக்கலரவத்தின் முக்கிய மையங்களில் புகையிரத நிலையங்களும் அடங்கும் என்பதும் வரலாற்று நிதர்சனமாகும். இங்கு புகையிரத நிலைய அதிபராக ஹென்றி ஜயசேனாவும், போர்ட்டராக நடராஜசிவமும் நடித்திருந்தனர். நடராஜசிவம் தனது பாத்திரத்துக்குரியதை விடவும் மிகவும் விசுவாசமாக கூனிக் கைக்கட்டிச்செய்திருந்தார். இதுவரையில் இவர் நடித்துள்ள பாத்திரங்களில் இந்தப் பாத்திரம் இவருக்கு மிகவும் பொருத்தமாக இருந்தது. ஆனாலும் இவ்வளவு கூனியிருக்கத் தேவையில்லை.

தமிழை ஒருக்கால் யாழ்ப்பாணத் தமிழிலும் (இலங்கை வானொலியின் யாழ்ப்பாணத் தமிழ்) பின்னர் இடையில் நல்ல சுத்தமான மொழிநடையிலும் ஏன் பேசினார் என்று தெரியவில்லை.

பிரச்சினையில் மாட்டிக்கொண்டுள்ள மகனிடம் 'மகனே ஏன் அப்படிச் செய்தாய்?' என்று அவர் கேட்டபோது கனவில் பிதற்றுகிறாரோ என்று பட்டது. எனது நண்பர் நகைச்சுவையாகச் சொன்னார். நடராஜசிவம் கதைத்த 'யாழ்ப்பாணத் தமிழ்'ப் பேச்சை விட வெற்றிலை போட்டுக்கொண்டு பேசிய தமிழ் நல்லாயிருந்தது என்று. அவரது சகாவான போட்டர் அசோக பீரிஸ் அவருக்கு வெற்றிலை மடித்துத் தொடர்ந்து கொடுத்தால் தானே!

அயல் வீட்டுச் சிங்களவர்களுடன் எவ்வளவோ அன்போடும் நட்போடும் பழகிய மேவின் மகேசனுக்கு தனது தந்தை சிலரால் தாக்கப்பட்டவுடன் 'சிங்களப் பறையோ' என்று சொல்ல எப்படி மனம் வந்தது. எமக்கும் புரியவில்லை. அவ்வேளை அசோக பீரிசும், மேவினும் ஒருவரை ஒருவர் பார்க்கும் குளோசைப் செருகல்கள் - தமிழர்கள் இனரீதியான உணர்வு உள்ளவர்கள் என்பதையும் சிங்களவர்கள் பொறுமையானவர்கள் என்பதையும் 'யதார்த்தமாகக் (?) காட்டியுள்ளது. ஏனெனில் தகப்பனுக்கு அடித்தவர்கள் குடிவெறியில் அடித்தார்களோ தவிர மேவின் மகேசனைப்போல் ஆத்திரத்தில் இனவெறியை உச்சரிக்கவில்லை. அத்துடன் தகப்பன் நடாவை அடிப்பவர்கள் பழைய கோபம் உள்ளவர்களே தவிர இனவெறியைக் கொண்டவர்கள் அல்ல என்பதே நெறியாளரின் யதார்த்தமாகும்!

மற்றொரு காட்சி - கலவரம் தொடங்கியவுடன் நடாவின் மனைவி நகைகளை பீரிசின் மனைவியிடம் கொடுக்கிறார். அவ்வேளை என்னருகில் இருந்த நண்பர் சொன்னார் ''இருந்து பாரும், இந்த நகைகளை எப்படியோ திருப்பிக்கொடுத்துவிடுவார்கள்; ஆனால் அவர்கள் நன்றி இல்லாமல் ஏதும் செய்துவிட்டுப் போவார்கள்'' என்று. அவருக்கு இப்படியான இனநல்லுறவுப் படங்களை எமது நாட்டிலும் பிறநாட்டிலும் பார்த்து நல்ல அனுபவம். அவர் சொன்மாதிரியே நடந்தது. கலவரம் முடிந்ததும் அகதிமுகாமில் இவர்களைத் தேடி பீரிஸ் குடும்பத்தினர் போகும் போது அவர்கள் அங்கு இல்லை. இந்தியாவுக்கு போய்விட்டனர். போகும்போது ஒருக்கால் சொல்லிப் போட்டுப் போயிருக்கலாம் அல்லவா? இங்குதான் இந்தியாவுக்குப் போன பிரச்சினை வருகிறது? யாழ்ப்பாணத்து நடராஜசிவம் குடும்பத்துக்கும் - இந்தியாவுக்கும் என்ன தொடர்பு? நடா குடும்பத்திடம் நகைப்பொதி கொடுக்கப்படுகிறது. (என் நண்பர் சொன்னது -83 இன்பின் திரும்பி வந்தவர்களுக்கு இப்படிப் பொதிகள் கொடுத்திருந்தால் தீர்வுப்பொதிப் பிரச்சினை வந்திருக்குமோ -அது நகைச்சுவை)

இறுதிக்காட்சியில் - இராணுவ வீரனாகி யாழ்ப்பாணம் வந்து போராளிகளால் கைது செய்யப்பட்ட பந்துலவை இயக்கத்தின் பிரிவுத்தலைவனான மேவின் சந்திக்கிறான். குடும்பத்தைப்பற்றி பந்துல விசாரிக்கிறான். குடும்பத்தை ஷெல், குண்டு வீச்சால் இழந்ததாகவும், சகோதரியும் இயக்கத்தில் சேர்ந்து இறந்ததாகவும் சொல்கிறான். கதிரையின் விளிம்புக்கு வர விளைகிறோம். தயாரிப்பாளர் துணிந்துவிட்டார், சவால்களை மிறீவிட்டார். தணிக்கையாளர்கள் விட்டுவிட்டார்கள். மேவின் இப்படியெல்லாம் கதைக்கிறாரே என்று நாம் நினைக்க விட்டாரா பந்துல. அவர் விட்டாலும் நெறியாளர் விடுவாரா? பந்துல, மேவினின் இழப்புகள், அரசியல் சித்தாந்தங்கள் யாவற்றையும் கேட்டுவிட்டு ஒரு குட்டிப்பிரசங்கமே செய்துவிடுகிறார். இங்கு பந்துல என்ற பாத்திரம் மட்டும் தான் அடையாளம், மற்றும்படி அது அநுருத்த ரத்வத்த தொலைக்காட்சியில் பேசுவது போலிருந்தது. ''ஏன் அடிபடுகிறீர்கள்? எம்முடன் இணைந்திருக்கலாம் தானே?'' இதுதான் அவரது உரையின் சாரம்!

மேவின் ஒன்றும் சொல்லவில்லை. அவரது (போராளிகளின்) இடத்திலிருந்தும் அவருக்குச் சொல்லமுடியவில்லை! (எழுதிக் கொடுத்திருந்தால் தானே)

சாதாரண காடையர்களால் அடித்து துரத்தினதாலேயே நாடு கேட்டுப்போராட்டம் நடத்துகின்றனர் என்று இங்கு காட்டப்படுகிறது. ஒரு காட்சியில் பஸ்ஸில் தமிழர்களை அடிக்கும் போது நாங்கள் ஒற்றுமையாக இருந்தால் இந்தியாவையும் பிடிக்கலாம் - என்பது நகைச்சுவையான இருந்தாலும் புரியக் கூடியவர்களுக்கு அதன் அர்த்தம் புரியும்! இயக்கம் கைது செய்த இராணுவ வீரரை அழைத்துச் செல்லும் போது பாழடைந்த மண்டபத்தினுள் கொண்டு செல்வது காட்டப்படுகிறது. இது வரை வந்த செய்திகளில் இயக்கங்கள் எதுவும் தமது இயக்க அல்லது சக போராளி இயக்க கைதிகளைத் தவிர எதிரிகளை மரியாதையுடன் நடத்தியதாகவே அறிந்துள்ளோம்.

தமிழரின் தாயகம் தமிழீழ தாயகம் என்று சுவரில் எழுதுவதில் எடுக்கப்பட்ட கவனமும் பயமும் முக்கிய விடயங்களில் கவனிக்கப்படவில்லை.

பல இடங்களில் தொழில் நுட்ப ரீதியான தொய்வு காணப்படுகிறது. மிகச்சிறந்த கலைஞரான அசோக பீரிஸ் இத்தகைய தொய்வுகளினால் ரசிகர்களிடமிருந்து பல இடங்களில் விவாகரத்துச் செய்யப் பட்டிருக்கிறார். மேவின் மகேசன் சொல்லிக்கொடுத்தவற்றை நன்கு செய்து காட்டியுள்ளார். மகேஸ்வரி ரத்தினம் எமது தமிழ்த் தொலைக்காட்சி நாடகங்களையும் வானொலி நாடகங்களையும் இடையிடையே நினைவுப்படுத்தினாலும், யாழ்ப்பாணத் தாயாக முயன்று அதில் வெற்றி பெற்றுள்ளார். ரஞ்சனி ராஜ்மோகனின் பாத்திரம் (ஜானகி) தமிழில் இப்படி முதிர்ச்சியான கலைஞர்களும் இருக்கிறார்கள் என்று எண்ணத்தோன்றியது.

ரயில்வே தள்ளுவண்டியில் நடராஜசிவமும் அசோக பீரிசும் இருந்து கதைக்கும் போது வரும் நீண்ட உரையாடல் - நடராஜசிவம் அசோகாவின் கதையை தலையாட்டி ஆமோதிப்பதும், சிரிப்பதும் வழமையான அவரது ஆயுபோவனையும் லொத்தர் நிகழ்ச்சியையும் எமக்கு நினைவூட்டின. நெறியாளர் பின்னசைவுச் சூழலை அங்கு ஏற்படுத்தியிருப்பின் நடராஜசிவம் தப்பியிருப்பார்.

நாம் முன்பு குறிப்பிட்டதைப்போல முன்னர் வந்த திரைப்படங்களிலிருந்து இதன் வகைமை பெரிதாகவில்லை என்பதற்கு இரண்டு உதாரணங்களைச் சுருக்கமாகச் சொல்லாம். கொட்டிய வலிகயவில் இராணுவ வீரரைக்காப்பாற்றும் போராளியையும் இராணுவ வீரரையும் போராளிகள் சுடுகின்றனர். இங்கு அவர்கள் சுடுவதற்கு முன்னர் இருவரும் சயனைட்கடித்து மரணிக்கின்றனர். முன்பு வந்தவற்றைப் போலவே வழமைக்கு மாறாத நாதஸ்வர இசை, கானடா இராகம், என்பன தமிழ்ச்சின்னமாக வருகின்றன. மேற்கத்தைய திரைப்படங்களிலிருந்து நாம் கற்றுக் கொள்ளக்கூடியது இதுவே.

இந்த நாடகத்தைப் பார்க்கும் தமிழர்களோ, அல்லது சிங்களவர்களோ யுத்தம் வேண்டாம் என்று சொல்வார்களா? அல்லது இதில் காட்டப்படும் போர்ப் பிராந்தியத்திலுள்ள வீரர்களின் கஷ்டங்களை உணர்வார்களா? தமிழர்கள் யுத்தத்தின் அவலத்தை உணர்வார்களா? சிங்களவர்கள் யுத்தத்தின் பாதிப்பை உணர்வார்களா? இன்னும் இராணுவத்திற்கு பிள்ளைகள் சேர்வார்களா? சரியான யதார்த்தங்கள் வெளிக்கொணரப்படாத வகையிலும் நமது கலைஞர்கள் இப்படியானவற்றிலும் இதற்கு மேலாகவும் நடித்துக்கொண்டே இருப்பர், சொன்னவற்றிகும் மேலாகவும் கூனிக்குறுகிச் செய்வர்.

ஏனெனில் நம் நாட்டில் தமிழ்த் தொலைக்காட்சி நாடகத்துறை வளர்ச்சி கண்டதாக இல்லை. தேசிய தொலைக்காட்சி நிறுவனமோ இறக்குமதித் தமிழ் நாடகங்களையே ஒளிபரப்புகின்றது. உள்ளூர்க் கலைஞர்கள் என்ன செய்வார்கள்? அவர்களது சோரம் போதல்கள் தவிர்க்க முடியாதனவே!

இறுதியாக ஒன்று.


இந்த நாடகத்தை மக்கள் வங்கி அனுசரனை செய்யவுள்ளதாக அறிகின்றோம். வருடத்தில் ஒரு தமிழ் நிகழ்ச்சியை அனுசரணை செய்ய முடியாத மக்கள் வங்கிக்கு இன நல்லுறவில் அப்படி என்ன அக்கறை?

நாடகம் ''யதார்த்தமானது'' என்பதோ?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






# பட்டணம் போய்ச் சேரலியோ!?

-லெனின்மதிவாணம்-

சென்ற இதழின் தொடர்ச்சி...

தமிழக நாட்டார் பாடல்

ஒட்ட வருதா பாருங்கடி ஒட்ட
ஒசந்து வருதா பாருங்கடி
ஒட்ட மேல குந்தி நம்ப மொதலாளி வராங்க
ஒசந்த சம்பளம் கேளுங்கடி

மலையக நாட்டார் பாடல்

குதிரே வாரதைப் பாருங்கடி
குதிரே குனிஞ்சு வாறதைப் பாருங்கடி
குதிரே மேலே நம்மையா கங்காணி
கும்பிட்டு சம்பளம் கேளுங்கடி

தமிழகத்தில் பண்ணையார் அல்லது முதலாளி வருகின்ற போது தங்களுக்கான உரிமையுடன் அதிக சம்பளம் கோருவதைக்காணலாம். ஆனால், மலையகத்தில் கங்காணி வருகின்ற போது நம்முடைய ஊதியத்தினைகூட கும்பிட்டு இரந்து கேட்கின்ற துயரகரமான கூலி அடிமை முறைக்கு தள்ளப்பட்டுள்ளதைக் காணமுடிகின்றது. இதனை நூலாசிரியர் ''தோட்டப் புறங்களில் தொழிலாளர்களின் சம்பளம் பெரிய கங்காணிமார்களிடம் கொடுக்கப் படும் வழக்கமே இருந்தது. துரையிடம் இருந்து வாங்குகின்ற சில சமயங்களிலும் கூட அப்படி வாங்கிய பணத்தை 'கங்காணி ஐயா' விடம் உடனேயே சேர்ப்பித்துவிட்டு தங்களுக்கு அத்தியாவசியமான வேளைகளில் கேட்டு வாங்கும் வழக்கமே இருந்தது. அப்படிக் கேட்கும் போது கூட கும்பிட்டுக் கேட்கும் வழக்கமேயிருந்தது என்பதை இந்தப் பாடல் தெட்டென வெளிப்படுத்துகின்றது'' (பக் - 56) என்று கூறியிருப்பது அபத்தமானது.

தமிழகத்தில் இருந்து இங்கு வரும் போதும், இடைக்காலங்களிலும், தொழிலாளர்கள் கங்காணியிடமிருந்து கடன் பெற்றனர். அவ்வாறு பெற்ற கடன் தொகைகளுக்கு எல்லையற்ற வட்டி ஏறிக் கொண்டே இருக்கும். எனவே கடனைப் பெற்ற தொழிலாளி தனது சக்திக்கும், உழைப்பு ஊதியத்திற்கும் மிஞ்சிய ஒரு தொகையை செலுத்த வேண்டி நிர்பந்திக்கப்பட்டான். எனவே இத்தகைய பொருளாதார ரீதியான ஆதிக்கம் தொழிலாளர்களை கொத்தடிமைகளாகவும் கங்காணியின் பிடியிலிருந்து விடுபட முடியாதவர்களாகவும் வைத்திருந்தது. தோட்டங்களில் தொழிலாளர்கள் கங்காணியின்பதிவாக இருந்ததுடன் கங்காணி வேறு இடங்களுக்கு மாறிச் செல்கின்ற போது உடன் அழைத்துச் செல்லப்படக் கூடியவர்களாக இருந்தனர். இத்தகைய வாழ்நிலையின் பின்னணியில் தொழிலாளர்கள் தமக்குக் கிடைக்கின்ற எந்த ஊதியத்தினையும் கங்காணியிடம் கொடுப்பதும், அவ்வாறு கொடுத்த பணத்தை மீண்டும் பெறும் பொழுது கும்பிட்டு வாங்கும் நிலைமையும் காணப்பட்டது. இத்தகைய வரலாற்று உண்மையை நூலாசிரியர் காணத் தவறிவிட்டார்.

நூலாசிரியர் 'சூழலில் பிறக்கும் பாடல்கள்' என்ற தலைப்பின் கீழான கட்டுரையிலும் மலையகத்தின் கலை கலாசார பண்பாட்டு பாரம்பரியங்களை பாதுகாத்து வந்தவர்கள் பெரிய கங்காணிமார்களும் அவர்களின்சந்ததியினராகவந்த வியாபாரிகளுமே என்ற கருத்தையே வெளிப்படுத்துகின்றார். இக்கூற்று சமூகவியல் அடிப்படையில் நோக்குகின்ற போது உயர்ந்தோர் குழாத்தினரே கலை இலக்கியம், முதலிய பண்பாட்டுக் கூறுகளை வளர்த்து வருகின்றனர் என்ற சிறுபான்மையினர் பண்பாட்டு (Minority Culture) வாதத்தின் குரலாகும்

மேற்குறிப்பிட்ட வகையின் அடிப்படையில் கங்காணித்துவ ஒடுக்குமுறைகள் அனைத்தையும் மூடிமறைத்து அதற்கு வக்காலத்து வாங்க முனைகின்ற போக்கே சாரல்நாடனில் மேலோங்கியுள்ளது. கங்காணிமார்கள் துரைமார்கள் போன்றோரின் ஒடுக்குமுறைகள் பற்றிய பாடல்களைத் தனது ஆய்வில் எடுத்தாண்டிருப்பினும் இப்பாடல்களுக்கு மனம் போன போக்கில் விளக்கமளித்திருப்பதையும் அவதானிக்க முடிகின்றது. பெருந்தோட்ட தமிழ் தொழிலாளர்களிடையே சாதிய முறைமை ஒரு முக்கிய காரணியாக அமைந்துள்ளது. தென்னிந்தியக் கிராமங்களில் கிராம சமூக அமைப்பில் காணப்பட்ட சாதிய அம்சத்தின் தொடர்ச்சியையும்புதிய வாழ்நிலைக்கேற்ப அது பல மாற்றங்களைஅடைந்ததையும் காணக் கிடைக்கின்றது. மலையகத்தில் இச்சாதிய அமைப்பு முறையானது கூலி அடிமை முறையின் முன்னே ஒரு சமூக அந்தஸ்தினை நிலைநாட்டும் கருவியாக செயற்படமுடியாமல் போய்விட்டது. இந்த வகையில் தோட்ட வாழ்க்கை முறையைப் பொறுத்த அளவில் பொருளாதாரத் துறையில் அதன் செல்வாக்கு முனைப்புப் பெறாமல் போய்விட்டது. ஆனால் திருமணம், சடங்கு, வழிபாடுஆகியவற்றில் பாரிய தாக்கம் செலுத்துவதாக அமைந்தது. பெருந்தோட்டங்களில் குடியேறிய தொழிலாளர்கள்கூட ஆரம்பகாலங்களில் சாதிய அமைப்பின்படி தனித்தனி லயன்களில் குடியமர்த்தப்பட்டனர். சில தோட்டங்களில் தற்பொழுதும் இந்நிலை தொடர்ந்துள்ளது. அரசியலிலும் கூட சாதிய அடிப்படையிலான சங்கங்கள் தோன்றியிருப்பதை நோக்கலாம். இத்தகைய சாதிய அம்சங்களை மலையக நாட்டார் பாடலிலும் காணலாம்.

கண்டி கண்டி எங்காதீங்க
கண்டி பேச்சு பேசாதீங்க
சாதி கெட்ட கண்டியிலே
சக்கிலியன் கங்காணி

என்ற பாடலுக்கு, ''எனவே தென்னிந்தியாவில் கலப்பு மணத்தைப் பற்றிய பாடலாக இது கொள்ளப்பட்டாலும் மலையகத் தோட்டப்புறங்களில் இந்தப் பாடல் மனங்கள் கலப்பதற்கு ஏதுவாக இருக்கின்றதென்றெண்ணுவதே பொருந்தும்'' என விளக்கமளித்துள்ளார் சாரல்நாடன். மலையகத்தில் தாழ்த்தப்பட்ட ஒருவர் கங்காணியாக வந்ததை (கங்காணிகளில் பெரும்பான்மையோர் உயர் சாதியினராகக் காணப்பட்டாலும் தாழ்ந்தவர்களும் கங்காணியாக இருந்துள்ளனர்.) கண்டு கொதித்தெழுந்த உயர்சாதி பெண் ஒருத்தியின் உள்ளக் குமுறலாகவே இப்பாடலைக் கொள்ள முடியும். இது மலையக கலாசார பண்பாட்டு பாரம்பரியத்தில் சாதியத்தின் தாக்கத்தையும் இறுக்கத் தன்மையையும் காட்டுகின்றது. இப்பாடலை, ''மனங்கள் கலப்பதற்கு ஏதுவாக அமைந்துள்ளது'' என நூலாசிரியர் குறிப்பிடுவதன் மூலம் சாதிய அம்சத்தின் தாக்கத்தினை மூடி மறைக்கின்றார்.

மலையக மக்கள் என்போர் எங்கிருந்தோ வந்து ஏற்கெனவே இங்குகிருந்த பொருளாதாரத்தைச் சூறையாடியவர்கள் அல்லர். தமது இரத்தத்தையும் உயிரையும் தாரைவார்த்து இந்த மண்ணை வளம்படுத்தியவர்கள் என்பதைப் பின் வரும் பாடல் காட்டுகின்றது.

கூனி அடிச்ச மலை
கோப்பிக்கன்னு போட்ட மலை
அண்ணனைத் தோத்த மலை
அந்தா தெரியுதடி

காலனித்துவ ஆதிக்கமும், மறுபுறமாக சமூக உருவாக்கமும் இந்த மக்கள் வளர்ந்து வருகிற தேசிய சிறுபான்மை என்ற உணர்வை ஏற்படுத்தியது. இது வெறுமனே குறுங்குழுவாதமாக அல்லது குறிப்பிட்ட தேசிய சிறுபான்மை இனத்தின் எழுச்சியை, வளர்ச்சியைக் காட்டுகின்றது. ஆயினும் ஆரம்ப காலங்களில் இந்த மக்களிடையே மலையகத் தேசிய உணர்வு அற்று இருந்ததையும் நாட்டார் பாடல்களில் காணலாம்.

அடி அளந்து வீடு கட்டும் நம்ம
ஆண்டமனை அங்கிருக்க
பஞ்சம் பொழைப்பதற்கு
பாற்கடலை தாண்டி வந்தோம்
பஞ்சம் பொழைச்சி நம்ப
பட்டணம் போய் சேரலியே
கப்பல்கடந்து
கடல் தாண்டி இங்க வந்தோம்
காலம் செழிச்சு நம்ப
காணி போய் சேரலியே

என்ற தாலாட்டுப் பாடல் இதை உணர்த்தும். பிற்பட்ட காலங்களில் மலையக தோட்டப் புறங்களில் உருவாகிய நாட்டார் பாடல்களைத் தேடி சேகரிதணதிருப்பின் அதன் மூலம் அம்மக்களின் தேசிய உணர்வின் படிமுறை வளர்ச்சியினைக் காணக்கூடியதாக இருந்திருக்கும்.

'வாழ்வளித்த வாய் மொழிப் பாடல்கள்' என்ற தலைப்பின் கீழ் மலையகத்தில் காணப்படுகின்ற கூத்துப்பாடல்கள், கதைப்பாடல்கள் என்பனபற்றி நுனிப்புல் மேய்ந்த தன்மையில் விளக்குகின்றார். நாட்டுப்புற கதைப்பாடல்கள் என்றால் என்ன? அவற்றுக்கும் நாட்டார் பாடல்களுக்கும் இடையிலான வித்தியாசம் என்ன? இந்த மக்களுக்கும் அக்கதைப்பாடல்களுக்கும் இடையிலான உறவுகள் என்ன? என்பதைக் காட்டத் தவறிவிடுகின்றார்.

நாட்டார்கதைப்பாடல்களை சமூகவியல் அடிப்படையில் நோக்குகின்ற போது சமூக மேலாதிக்க சக்திகளுக்கும் அவற்றின் எதிர்ப்பு சக்திகளுக்கும் இடையிலான மோதலை பிரதிபலித்து நிற்கும். அடிப்படையில் இது உற்பத்தி உறவில் ஏற்பட்ட முரண்பாடே என்பது கவனத்தில் கொள்ளத்தக்கது. உதாரணமாக மலையகத்தில் வழங்கிவரும் 'நல்லதங்காள்' கதையை நோக்குவோமாயின் ''பெண்களுக்கு பிறந்தகத்தின் சொத்துரிமை இல்லாததால் வரும் அவதிகளை இக்கதை விவரிக்கின்றது. உரிமையற்றவளாக அடிமையிலும் இழிவானவளாக, தான் பிறந்த வீட்டில், தானும் உழைத்து உருவாக்கிய நலன்களில் பங்கில்லாதவளாக உழலும் தமிழ் நாட்டுப்பெண்களின் பிரதிநிதி நல்லதங்காள். இச்சமூக அமைப்பு முறையில் பலியானவள் நல்லதங்காள்'' (நா. வானமாமலை - 'தமிழர் வரலாறும் பண்பாடும் பக் - 133) இத்தகையான அடிப்படையான மோதலை காணத்தவறிவிடுவது ஆய்வு நூல் ஒன்றிற்குரிய பண்பு ஆகாது. தவிரவும் சங்கர் பொன்னன் கதை என அவர் பிழையாக குறிப்பிட்டுள்ளார். உண்மையில் அது பொன்னர் சங்கர் கதை என்றே வழங்கப்பட்டு வருகின்றது.

கவிஞர் சி.வி. வேலுப்பிள்ளை அவர்களின் தொகுப்பின் பின் நம்பகரமான, வரவேற்கக் கூடிய நாட்டார்பாடல் தொகுப்புக்கள் வெளிவராமை மலையக நாட்டார் இயல் ஆய்வுகளை ஆரோக்கியமான திசையில் இட்டுச் செல்ல ஒரு தடைக்காரணியாக அமைகின்றது. இதுவரை இத்துறை சார்ந்து ஆய்வு செய்தவர்களும் தொகுக்கப்படாத நிறைய நாட்டார் பாடல்களை தொகுப்பதில் வரவேற்கக்கூடிய கவனம் செலுத்தவில்லை. தவிரவும், இன்று வரை எம்மத்தியில் வழங்கி வருகின்ற நாட்டார் பாடல்கள் பெரும்பாலானவை சினிமாத் தாக்கத்திற்கு உட்பட்டுள்ளது. மேலும் மத்திய தர வர்க்கமொன்றின் எழுச்சியும் பல்வேறு வகையில் இப்பாடல்களின் தோற்றத்தில் தாக்கம் செலுத்தியுள்ளது. இதைவிடவும் இப்பாடல்களை முறையாகத் தொகுத்து ஆய்வு செய்வதன் மூலம் இம்மக்கள் கூட்டத்தினரின் தொடர்ச்சியான வரலாற்றினையும் அதன்வழி இவர்களது சிந்தனைகள் உற்பத்தி முறை, கலை, இலக்கியம், பண்பாட்டுப் பாரம்பரியம், போராட்டங்கள் போன்றவற்றின் படிமுறையான வளர்ச்சியையும் மாற்றங்களையும் அவதானிக்க முடியும்.

இவ்விடத்தில் முனைப்பான விடயம் பற்றியும் ஆய்வு செய்தல் அவசியம். மலையகத்தைச் சார்ந்துள்ள நகரங்களைச் சார்ந்து வாழ்கின்ற நகர்த்தொழிலாளர்களிடையேயும், தொழிலாள வர்க்க உணர்வு அல்லது உதிரிவர்க்க உளப்பாங்கு இருப்பதனால் இவர்களிடையேயும் நாட்டார்பாடல்கள் தோன்ற முடியும். இது தொடர்பாக இதுவரை கட்டுரையாளர்கள் சிரத்தை காட்டவில்லை. எனவே இதனையும் ஆய்வு செய்வதன் மூலம் மலையக வாய்மொழிப் பாடல்கள் தொடர்பான ஆய்வை ஆழ அகலப்படுத்திக்கொள்ளலாம்.

மலையக நாட்டார் பாடல்கள் தொடர்பான ஆய்வு இந்த மக்களின் வர்க்கப் போராட்டத்தினை முன்னெடுப்பதற்காக அம்மக்களின் ஆத்மார்த்த கருத்துக்கள், நம்பிக்கைகள், விருப்புக்கள், மகிழ்ச்சி, துன்பம், போராட்டம், உறுதிப்பாடு என்பனவற்றினை ஆய்வு செய்வதற்கு அவசியமாகின்றது. காலம் தோறும் மக்கள் சமுதாயத்தில் தோன்றுகின்ற முற்போக்கு உணர்வுகள் இவற்றில் விரவிக்கிடப்பதைக் காணலாம். எனவே இம்மக்கள் நலன்சார்ந்து எழுச்சி பெறுகின்ற இலக்கிய உற்பத்தி அனைத்தும் இத்தகைய நாட்டார் பாடல்களில் பின்னணியில் இருந்து எழுச்சி பெறுவதனைக் காணலாம். மக்ஸிம் கோர்க்கியின் படைப்புக்கள் யாவும்இந்த ஆளுமையின்பின்னணியில் தோற்றம் பெற்றவையே. இவ்விடத்தில் பிறிதொரு விடயம் பற்றி நோக்குதலும் அவசியமாகும். வரலாறறில் ஆளும் வர்க்கம் தம்முடைய பிற்போக்குக் கருத்துக்களைக் கூறுவதற்கு நாட்டார் பாடலின் உள்ளடக்கத்தை மாற்றி விடுகின்றன. இவைபற்றிய விமர்சன ஆய்வும் அவசியம். எனவே மலையக நாட்டார் பாடல் தொடர்பான ஆய்வும் சமூகவியல் நோக்கிலும் இயங்கியல் நோக்கிலும் வெளிவர வேண்டியது அவசியமாகும்.

இன்றைய நாட்டுப்புற இலக்கிய ஆய்விலும்பல்வேறு நோக்குகள்உண்டு. இலக்கிய நோக்கு, மொழியியல் நோக்கு, ஒப்பியல் நோக்கு, அமைப்பியல் நோக்கு, சமூகவியல் நோக்கு என்பவை குறிப்பிடத்தக்கன. ஒரு பொருளையும் நிகழ்வையும் அவை தோன்றிய சமூக பின்புலத்தில் வைத்து நோக்குவதோடு அவற்றை வரலாற்று அடிப்படையில் திறனாய்வு செய்யும் போக்கு சமூகவியல் ஆய்வின் பாற்படும். இத்தகைய ஆய்வு முறையில் எந்த நோக்கினையும் சாரல்நாடன் தன்னுடைய ஆய்விற்கு கைக்கொள்ளவில்லை. மாறாக சிற்சில நாட்டார் பாடல்களுக்கு மனம் போன போக்கில் கதையளந்து கதாப்பிரசங்கம் செய்துள்ளார். எனவே மலையக நாட்டார் பாடல் ஆய்வு என்பது வெறுமனே குறுங்குழுவாதமாகவன்று இன்றைய ஒடுக்குமுறைகள் அனைத்திற்கும் துணைநிற்கும் நிலப்பிரபுத்துவம், முதலாளித்துவம், ஏகாதிபத்தியம் ஆகியவற்றிற்கு எதிரான போராட்டமாக அமைய வேண்டும். மலையகத்தில் நாட்டார் பாடல் தொடர்பான இத்தகைய ஆய்வுகள் இனித்தான் வெளிவரவேண்டும்.

---

**வெள்ளிப்பாதசரம்**
இந்த நூற்றாண்டின் ஈழத்துச்சிறுகதைகள்
முதலாவது தொகுதி

**ஒருகூடைக்கொழுந்து**
இந்த நூற்றாண்டின் ஈழத்துச்சிறுகதைகள்
இரண்டாவது தொகுதி

**விற்பனை உரிமை:**
**காந்தளகம்**
**4, முதல் மாடி,**
**ரகிசா கட்டிடம்**
**834, அண்ணாசாலை**
**சென்னை 600002.**

இவ்விரண்டு நூல்களின் தொகுப்பாசிரியர்களான யோ. சுந்தரலட்சுமி, செ. யோகநாதன் ஆகியோர் முன்னுரையில் இத் தொகுப்பு முயற்சியில் முதல் 3 தொகுதிகளும் 1930களுக்கும், 1990களுக்கும் இடையில் ஈழத்தவர்களால் எழுதப்பட்ட சிறுகதைகளைக் கொண்டிருக்குமெனவும் நாலாவது தொகுதி புலம்பெயர்ந்த எழுத்துக்களையும், ஐந்தாவது தொகுதி ஈழத்தின் சிறந்த குறுநாவல்களையும் கொண்டிருக்குமெனவும் குறிப்பிடுகின்றனர். மேலும் ''தமிழ்ச்சிறுகதைத் தொகுப்பு நூல்களுக்கு ஒரு முன்னுதாரணமான நூலாக எமது தொகுப்பை வெளிக்கொணர வேண்டுமென்ற பேராசை எங்கள் மத்தியிலே நிறைந்திருந்தது'' என்றும் தொகுப்பாசிரியர்கள் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளனர்.

இவ்வாறான ஒரு நூலை எழுத்தாளர்களின் கால அடிப்படையில் தொகுப்பதே சிறந்தது. ஆனால் இந்நூல்கள் எழுத்தாளர்களின் கால அடிப்படையில் ஒழுங்கு முறையாகத் தொகுக்கப்படவில்லை. ஈழத்துச் சிறுகதை முன்னோடிகளான மூவரும் முதல் தொகுதியில் சேர்க்கப் பட்டிருக்க வேண்டும். ஆனால் சம்பந்தன் இரண்டாவது தொகுதியிலேயே வருகிறார். இவ்வாறாக பல உதாரணங்கள் காட்டலாம். தொகுப்பாளர்கள் இதில் கவனஞ் செலுத்தியிருக்க வேண்டும். தவிரவும், கதைத்தேர்விலும் இன்னும் கவனம் செலுத்தியிருக்கலாம். ஏனெனில், இத்தொகுப்பிலுள்ள படைப்பாளிகளின் இதைவிடச் சிறந்த படைப்புக்களை நான் வாசித்திருக்கிறேன். வெகுஜனப் பத்திரிகைகளில் ஜனரஞ்சகமாக எழுதுபவர்களினதும் வெகுஜன ஊடகம் மற்றும் சினிமாத்துறைகளில் இருக்கும் எழுத்தாளர்களினதும் சிறுகதைகள் தொகுக்கப்பட்டுள்ளன. உ+ம் யோகா பாலச்சந்திரன், அன்னலட்சுமி ராஜதுரை, ஜோர்ச் சந்திரசேகரன், பாலுமகேந்திரா. மாலன் அல்லது அசோகமித்திரன் தொகுத்த தமிழ்ச் சிறுகதைத் தொகுப்பில் பட்டுக்கோட்டை பிரபாகரின் சிறுகதை இடம்பெறுவதற்கு ஒப்பானது இது.

எல்லாவற்றையும் விடப் பிரதானமானது என்னவெனில், இத்தொகுப்புக்களில் ஈழத்தின் பல சிறந்த எழுத்தாளர்களைக் காணமுடியவில்லை. வேணுமென்றே புறக்கணிக்கப்பட்டுள்ளனரோ என்று எண்ணத் தோன்றும் வகையில் தொகுப்பு அமைந்துள்ளது. ஒரு பக்கத்தில் மு. தளையசிங்கம், மு. பொன்னம்பலம், நந்தினி சேவியர், சண்முகம் சிவலிங்கம், எம்.ஏ. நுஃமான், குப்பிளான், ஐ.சண்முகன், மு.புஷ்பராஜன், எம்.எல்.எம். ஹனிபா முதலியவர்கள் இல்லை. எண்பதுகளில் வந்த உன்னதமானவர்களில் ஒருவரான உமா வரதராஜன் இல்லை. எம்.எல்.எம். மன்சூர், சிறீதரன், அ.ரவி, எஸ் கே.விக்னேஸ்வரன் ஆகியோர் இல்லை. சேரனும் ஜெயபாலனும் பல நல்ல சிறுகதைகள் எழுதியுள்ளனர். அவர்கள் இல்லை. தேசிய கலை இலக்கியப் பேரவையால் வெளியிடப்பட்ட பழைய தாயகம் இதழ்களில் கவிஞரான சி. சிவசேகரம் சிறீதரன் என்ற பெயரில் சில நல்ல சிறுகதைகள் எழுதியுள்ளார். மலையகத்திலிருந்து கேகாலை கைலைநாதன் நல்ல கதைகள் எழுதியிருக்கிறார். தமிழகத்திலிருக்கும் தேவகாந்தன், லண்டனில் இருக்கும் ராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம் இவர்கள் ஒருவருமே இல்லை. இதைவிட நான் கவனத்திலெடுக்கத் தவறிய நல்ல சிறுகதையாசிரியர்களும் இருக்கலாம்.

இந்நிலையில் இவ்விரு தொகுப்புக்களையும் எவ்வாறு இந்த நூற்றாண்டின் ஈழத்துச்சிறுகதைகள் என்று நாம் அறிமுகம் செய்ய முடியும்?

-நட்சத்திரன் செவ்விந்தியன்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





## பேச்சு எப்போது பயனளிக்கும்?

தங்களது பத்திரிகை யதார்த்தமாகவும் சமகால நிகழ்வுகளை சமபார்வையுடன் விளக்குவதாகவும் உள்ளது. தொடரும் இதழ்களும்இதே பாங்கில்அமையட்டும். நடுநிலைமையென்றசட்டியினுள்இருந்து தினம் 'முரசு' கொட்டும் சந்தர்ப்பவாதப் பத்திரிகைகள் தமிழ் மக்களுக்கெதிரான கட்சிவாதத்துடன் பத்தி எழுதுவதைப் போன்றல்லாது 'சரிநிகர்' சரிநிகரைத் தொடர்ந்து தமிழர்களுக்கு விளக்க வேண்டும்.

'சரிநிகர்' பெரும் இடையூறுகளுக்கு மத்தியில் வெளிவருவதாக அறிந்தேன். காலத்துக்குக்காலம் எமக்குள் இருந்தே சில மனோவியாதிக்காரர்கள் தங்களை ராஜாவாகப் பாவனை செய்து கொண்டு குடிகளை அடிமை கொள்ளவெனப்புறப் பட்டுள்ளனர். குடிகளை அடிமைகொள்ள ராம அவதாரம் வேண்டாமே.

திருமலையில் கடந்த வருடம் நடந்த இலக்கியத் தமிழ்த்தின விழாவைப்போலவே பிரதேச தமிழிலக்கிய விழாவும் நடந்துள்ளதாக அறியும் போது மிகவும் வேதனையாகவுள்ளது. இலக்கிய ஆர்வமற்றவர்களால் தமது துரைத்தனத் தைக்காட்டிக்கரகோஷம் பெறும்படியான விழாக்களே நடத்தப்படுகின்றது.

திருமலையில் இலக்கிய வேட்கை கொண்டோர் வளரமுடியாமைக்கு இதுபோன்ற வெற்று விழாக்களே நந்திகளாக அமர்ந்திருக்கின்றன. அது மட்டுமல்லாது வெளிவரும் இலக்கிய ஏடுகள்தனித்து இயங்கக்கூடிய பொருள் ஆதாரமற்றவை. இதனால் உதவிகள் செய்வதற்கு முன்வருவோரும் தமது சிந்தனைகளை இலக்கிய ஏடுகளில் திணிக்க முயல்வதும் அல்லாதபோது பாராமுகமாக நடப்பதும் திருமலை இலக்கிய வட்டங்களின் கடந்தகால அல்லற்பாடுகளாகவுள்ளது. கலைஞர்களை ஊக்குவிப்பதுதான் இல்லை. தமிழிலக்கியங்களையாவது மலினப் படுத்தாது விட்டுவைத்தால்போதுமானது. பணிவையே பண்பாகக்கொண்டு கல்வியறிவில் பின்தங்கியுள்ள காந்திநகர் தமிழ் மக்களைப் போன்றவர்களைத் தான் சூரியமூர்த்தி போன்றோர்களால் தமது அடாவடித்தனங்களுக்கு உட்படுத்தி அவர்களின் வேதனையில் மகிழ்வடைய முடியும். இவர்கள் பிறரது சூட்டில் குளிர் காய்பவர்கள் என்பதை பலநேரங்களில் மறந்துவிடுகின்றனர்.

இவற்றுக்கெல்லாம் நீதியின் முன்பு கைக்கட்டி நிற்கும் நாள் தொலைவிலில்லை.

திருக்கோணசர் தீர்த்தோற்சவமன்று 18 வயது சிங்கள இராணுவச் சிறுவனால் எட்டி வயிற்றில் உதைக்கப்பட்டு கீழே விழுந்து கதறிவிட்டு, அன்றே பத்திரிகைகளுக்கு அப்படியெதுவும் நடக்கவில்லையென்று செய்தி கொடுத்த சூரியமூர்த்தி என்ற தமிழருக்காக நாம் இங்கு பெரும் வேதனையில்இருந்தோம். காரணம் ஒரு நாட்டில் நகரபிதாவாக இருக்கும் தமிழருக்கே இப்படி நடக்கின்றது என்ற வியப்பு.

ஆனால், சூரியமூர்த்தியோ எம்மினத்தவராயும், எவ்வகையிலும் வளர்ச்சியுறாமல் இருக்கும் எம்சமூக மக்களுக்கெதிராகச் செய்யும் துரோகங்களை நிறுத்தி சற்று சிந்திக்க வேண்டும். இப்போதெல்லாம் நாம் வரலாற்றை அறியவேண்டியதில்லை. சமகால நிகழ்வுகளே வரலாறாகி நிற்கின்றது. தினை விதைத்தவனே தினை அறுக்கமுடியும். வினை விதைக்கும் சூரியமூர்த்தி போன்றோர் அறுவடை நாட்களில் தினையை எதிர்பார்க்க முடியாது. இதை மனங்கொள்ள வேண்டியவர்களில் நகரபிதாவும் ஒருவர்.

இரவீந்திரன் அவர்களின் விமர்சனக் கட்டுரை மிகவும் வரவேற்கக்கூடியது! எமது மண்ணின் நிகழ்வுகளைக் குறித்து (சுவிஸில் இருந்போதும்) மிகவும் தெளிவான பார்வையுடன் விமர்சனம் எழுதியுள்ளார். இது போன்ற நல்ல எழுத்தாளர்களை சரிநிகர் வளர்க்கட்டும்.

சரிநிகர் வாசகர் ஒருவர் பங்காளதேசம் பெண்களை விற்பதில்லையெனவும் இதழ் 101 வெளியான அவ்வாசகத்தை நீக்கும்படியும் வேண்டியிருந்தார். இஃது அவரது அறியாமையேயன்றி வேறில்லை. இங்கு பங்காளதேசத்துப் பெண்கள் பணிப்பெண்களாக மட்டுமன்றி, விபச்சாரத்திற்காகவும் இறக்குமதி செய்யப் படுகின்றனர்.

13,14 வயது சிறுமியர் கூட இங்கு வந்துள்ளனர். இதேபோன்று காத்தான் குடி, கிண்ணியா போன்ற ஊர்களிலிருந்தும் 13, 14 வயது சிறுமியர் வந்த வண்ணமுள்ளனர். இவர்கள் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்படுகின்றனர். இவற்றையெல்லாம்அறியாத வாசகர்கள் தங்கள் மனப்போக்கினையெல்லாம் விமர்சனமாகவோ விசனம் தெரிவித்தோ எழுதுவது தவிர்க்கப்படவேண்டும். இலங்கை, வங்காளப் பெண்கள் விபச்சாரத்தில் ஈடுபடுத்தப்படுத்தப் பட்டுள்ளனர் என்பதுதான் உண்மை நிலை. இது அவர்கள் விரும்பியோ விரும்பாமலோ நடந்து கொண்டு தான் இருக்கின்றது. இங்கு ஓர் இடத்தின் (ஊர்) பெயரைச் சொன்னால் அனைவருக்கும் உடன் புரிந்துவிடும்; அங்கு என்ன நடக்கிறது என்பது. இலங்கைத் தூதரகத்திலேயே பணம் கொடுத்து பெண்களை வேண்டிச் செல்கின்றனர். அது மட்டுமல்லாது வீடுகளில் பணிபுரியும் பெண்கள் அவ்வீடுகளில் கொடுமைகளைத் தாங்முடியாது தூதராலயத்திற்கு வந்தால் அங்குள்ளவர்கள் (தூதராலயத்தில்) எங்கிருந்தாவது பணம் தேடிக் கொண்டு வாருங்கள் நாட்டிற்கு அனுப்பி வைக்கின்றோம் என்கின்ற போது இப் பெண்கள் என்ன செய்ய முடியும்? இப்படியாக இன்னும் பல.

சிவராம் அவர்கள் எழுதும் ஆய்வுரைக் கட்டுரை நாமறியாத புதிய செய்தியாகவுள்ளது. தொடரும் இதழ்களில் புதிய விடயங்களையும் எதிர்பார்க்கின்றேன்.

ஜெயபாலன் அவர்களின் கற்பனை சுகமாக இருக்கின்றது. உலகநடப்புகளை புரிந்துகொள்ளாது வரலாறும் புதிய வரலாறும் படைக்கமுடியாது என்பது யதார்த்தம். அனைவரும் பேச்சுவார்த்தை மூலமே சமாதானம் என்கின்றனர். எந்நாட்டில் பேச்சாலே சமாதானம் பிறந்தது? யாரும் எந்த நாட்டையும் காட்டமுடியாது. வார்த்தைஜாலங்கள். போர் ஓயும் தறுவாயில் பேசுகின்றனர். அங்கே சமாதானம்வருகிறது. போர்ஓயும் போது வெற்றி, தோல்வி தீர்மானிக்கப் பட்டு விடுவதால் பேச்சுபலனளிக்கின்றது. வெற்றிக்குப்பின் பேச்சுவார்த்தை என்பதுதான் எம்நாட்டில் சாத்தியமாகக்கூடும். அஃது எல்லைப் பாதுகாப்புப் பற்றியும் ஏற்றுமதி - இறக்குமதிபற்றியதாகவும் அமையும்.

***மோகன்***
*குவைத்*

## இஸ்லாமிய அடிப்படைவாதம் என்றொன்றில்லை!

சரிநிகர் 105வது இதழில் ''முஸ்லிம்களுக்கான அரசியல் இயக்கம்'' கட்டுரை பார்த்தேன். கட்டுரையாளர் முஸ்லிம்களின் எதிர்கால அரசியல் நடைமுறை பற்றி ஓரளவு ஆராய்ந்திருந்தார். அக்கட்டுரையில் ''இலங்கையில் இஸ்லாமிய ஆட்சியை தோற்றுவிப்பதற்கு சமகாலத்தில் முயல்வது நிலைமைகளைச் சீரழிக்கும்'' எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. இது அக்கட்டுரையை மேலோட்டமாகவோ, ஆழமாகவோ நோக்கும்பிறசமூகத்தவரை தவறான சிந்தனைக்கு இட்டுச் செல்லும் என்பது எனது கருத்தாகும். அதுமாத்திரமல்ல ''இஸ்லாமிய அடிப்படை வாதக் கோஷங்களை தவிர்த்து முஸ்லிம் தேசிய வாதத்தினை முன்னெடுக்கவேண்டும்'' எனக் கட்டுரையாளர் குறிப்பிட்டதிலிருந்து அவரும் ஸியோனிஸ நாடுகளினால் (அமெரிக்க - இஸ்ரேல்) திட்டமிடப்பட்டு இஸ்லாமிய மார்க்கத்தினுள் புகுத்தப்பட்ட ''இஸ்லாமிய அடிப்படை வாதம்'' (Fundamentalism) என்ற வசனத்தை ஏற்றுக்கொண்டு விட்டாரோ என எண்ணத் தோன்றுகிறது. புனித இஸ்லாத்தில் அடிப்படைவாதம், முஸ்லிம் தேசிய வாதம் என்றெல்லாம் ஒன்றுமேயில்லையே! 1417 ஆண்டுகளுக்கு முன் அல் குர்ஆன், அல்-ஹதீஸ் எதைக்கூறியதோ அதுதான் இன்றுமுள்ள இஸ்லாமிய மார்க்கத்தின் கோஷமுமாகுமாகும். எனவே மார்க்கத்தின் பிரிவினைக்கு ஸியோனிஸ வாதிகள் (Zionisms) எடுத்து நடைமுறைப்படுத்தும் ''இஸ்லாமிய அடிப்படைவாதம்'' என்ற கருத்துக்களை அக்கட்டுரையிலிருந்து மாத்திரமல்ல கட்டுரையாளரும் முழுமையாக நீக்கிக் கொள்ள (தவிர்த்துக்கொள்ள) வேண்டும். இவ்வாறான வாக்கியங்கள் கட்டுரையைப் பார்க்கும் வாசகர்களை கட்டுரையின் நோக்கத்திலிருந்து வேறு சிந்தனைக்கு அழைத்துச் சென்று விடும்.

***எம்.எஸ்.எம்.பாயிஸ்***
*காத்தான்குடி -06*

## ஒருங்கிணைப்புக் குழு:எரிகிற நெருப்பில்....

அரசியல் தீர்வை எதிர்பார்த்து இலவு காத்துக்கொண்டிருக்கும் சிறுபான்மை மக்களை அரசாங்கம் காலத்துக்குக்காலம் சீண்டிப்பார்ப்பது ஒரு பொழுதுபோக்காகவே மாறிவிட்டது.

இன்று வரும், நாளை வரும், அது தீர்வுப் பொதியாக வரும். சிறுபான்மை மக்களுக்கு தங்களின் இறைமையைப்பாதுகாத்துக்கொள்ளும் பொக்கிசமாக வரும், துப்பாக்கி கலாசாரமற்ற இத்தீவில் இழந்த உரிமைகளையெல்லாம் பெற்று தன்மானத்துடனும் சுய கௌரவத்துடனும் வாழலாம் என்ற கனவுகளெல்லாம் படிப்படியாக மறைந்து அரசியல் ஸ்திரமற்ற சூனிய வலயத்தை நோக்கி நாடே நகர்ந்து கொண்டிருக்கும் இந்த நேரத்தில் எரிகிற நெருப்பில் எண்ணெய் ஊற்றுவது போல ஜனாதிபதியால் நியமிக்கப்பட்ட ஒருங்கிணைப்புக்குழு விவகாரம் சிறுபான்மை மக்களின் கண்டனக்கணைக்குள் அகப் பட்டுக்கொண்டிருக்கிறது.

பொதுமக்களின் அன்றாடத் தேவைகளைக்கவனிப்பதற்காகவே இவ்வொருங்கிணைப் குழு நியமிக்கப்பட்டிருப்பதாக அ தரப்பில் காரணம் கூறப்பட்டிருக்கிறது. சில தமிழ்க்கட்சிகளாலும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசாலும் இடைக்கால நிர்வாக சபையொன்று நிறுவவேண்டுமென்ற கோரிக்கை புறக்கணிக்கப்பட்டு ஒருங்கிணைப்புக்குழு ஒன்றை ஏற்படுத்த முனைந்தது சிறுபான்மையினரிடத்தில் பலவிதமான சந்தேகங்களைத் தோற்றுவித்திருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. வடக்கு கிழக்கு மாகாணத்திற்கான இவ்வொருங்கிணைப்புக்குழு அவசியம் தேவைதானா? இல்லையா? என்ற விவாதத்திற்கு முதல் இவ்விடயம் பற்றி தமிழ் அரசியல் கட்சிகளுடன் எந்தவித ஆலோசனையும் நடத்தாமல் தன்னிச்சையாக செயற்பட்டிருப்பது தற்போதைய நிலைமையில் சிறுபான்மையினரை கொச்சைப்படுத்தும் ஒரு விடயமாகவே கருதலாம். இன்னும் சொல்லப் போனால் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின்போது முஸ்லிம்கள் புறக்கணிக்கப் பட்டது போன்றே இங்கு தமிழ் மக்களின் நிலை.

இன்னும் விளக்கமாகச் சொல்லப்போனால் தமிழ்க்கட்சிகள் எவ்வித உடன்பாடும் இல்லாமல் ஒருங்கிணைப்புக்குழுவை நிறுவியது கிணறு வெட்ட பூதம் வந்த கதையாகவே உள்ளது. அதுமாத்திரமன்றி இவ்வொருங்கிணைப்புக்குழுவுக்கு ஒரு முஸ்லிம் இனத்தவரை தலைவராக்கியது விமர்சனத்திற்குரிய விடயம் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

பெரும்பாலான தமிழ் குழுக்கள் ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த காலகட்டத்தில் முஸ்லிம் மக்கள் துன்புறுத்தப் பட்டிருந்ததும், சில அப்பாவித்தமிழர்கூட ஒரு சில முஸ்லிம் இனவாதிகளால் பாதிக்கப்பட்டிருந்ததும் கறைபடிந்த வரலாறாக எம்மனங்களில் புகைந்து கொண்டிருப்பதை யாரும் மறுக்கமுடியாது. இருந்தாலும் தற்போதைய சூழ்நிலையில் தமிழ் - முஸ்லிம் இரு இனங்களும் ஒற்றுமையுடன் வாழ்வதையெண்ணி பெருமைப்பட வேண்டியிருக்கிறது. இதுபோல பிணைப்புள்ள ஒரு சமூகமாக இரு இனத்தவர்களும் வாழ வேண்டும்என்பதே நல்லசிந்தனையுள்ள ஒவ்வொரு மனிதனினதும் அவாவாகும்.

இன்றைய காலகட்டத்தில் வடக்கு - கிழக்கு பிரச்சினை தொடர்பான ஒவ்வொரு அணுகுமுறைகளும் கயிற்றின் மேல் நடப்பது போன்ற ஒரு கஷ்டமான விடயம் என்பதை அரசு உணர முன்வர வேண்டும். தொடர்ந்தும் சிறுபான்மையினரை கொச்சைப்படுத்தும் வியடங்களில் அரசு செயற்பட முயற்சிக்குமானால் தற்போது அரசியல் நீரோட்டத்திற்கு வந்த தமிழ்க் கட்சிகளின் நிலைப்பாடு கேள்விக்குறியாகவே இருக்கும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

***ஏ.எம்.ஏ. நிஸாம்***
*சம்மாந்துறை*

## எவ்வாறு ஏற்றுக்கொள்வது?

அண்மையில் துறைமுக, கப்பற்துறை அமைச்சில் இடம் பெற்ற நேர்முகப்பரீட்சைக்கு மட்டக்களப்பு, கண்டி, திருகோணமலை போன்ற மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் தோற்றி நேர்முகப்பரீட்சையில் சித்தியடைந்தும் கூட நியமனப்பட்டியலிலிருந்து அவர்களது பெயர்கள் நீக்கப்பட்டு தனது மாவட்டத்தைச் சேர்ந்தவர்களுக்கு மாத்திரம் 21.08.1996 அன்று மகாபொல கேட்போர் கூடத்தில் இலிகிதர், பாதுகாப்பு உத்தியோகஸ்தர், சாரதி போன்ற நியமனங்களுக்காக கடிதங்களை வழங்கியமையால் முஸ்லிம் காங்கிரஸ் தலைமைத்துவம் ஏனைய மாவட்ட முஸ்லிம்களிடம் தன்னை தனது குறுகிய மனப்பான்மையை இனங்காட்டி இருக்கிறது.

முஸ்லிம் காங்கிரசின் தோற்றத்திற்கும் இதன் வளர்ச்சிக்கும் மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்களின் உயிரும், உதிரமும் உரமாக்கப்பட்டுள்ளது. அம்பாறை மாவட்டத்தில் ஏற்படும் இனமுறுகல் நிலையின் பிரதிபலிப்பு மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்களை நேரடியாகவே பாதித்துள்ளது. 1983, 1985, 1988 காலப்பகுதியில் கல்முனை, சம்மாந்துறை, பகுதிகளிலுள்ள முஸ்லிம் காடையர்களால் கட்டவிழ்த்துவிடப்பட்ட இனவன் செயல்தான் மட்டக்களப்பு மாவட்ட தமிழ்- முஸ்லிம் உறவைச்சீர்குலைத்தது. கறுவாச்சோலை முஸ்லிம்களின் உயிரைக் குடித்தது என்பதனையும் இன்றுவரையும் அவ்வுறவு உருக்குலைந்த நிலையிலேயே தொடர்வதையும், அமைச்சர் அஷ்ரஃப் அவர்கள் நன்கறிவார்.

பொருளாதார விவசாய ரீதியாக மிகவும் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு மாவட்ட முஸ்லிம்களுக்கு சேவை செய்வதற்குரிய வாய்ப்புகளும், வசதிகளும், அமைச்சர் அஷ்ரஃப்புக்கு இருந்தும் அதை வேண்டுமென்றே தட்டிகழித்துச் செல்வதும் மட்டக்களப்பு, திருகோணமலை முஸ்லிம்களின் முதுகில் ஏறிச்சென்று அமைச்சர் பதவியைப் பெற்ற அஷ்ரஃப் இன்று வெறுமனே அம்பாறை மாவட்டத்தவர்களுக்கு மாத்திரம் நியமனம் வழங்குவதும் ஏனைய [illegible]த்தவர்களுக்கு கண் துடை[illegible]டகம் ஆடுவதும் எந்த வகையில் நியாயம்?

முஸ்லிம் காங்கிரஸ் தலைவரின் பிறப்பிடம் அம்பாறை மாவட்டம் என்றாலும், முஸ்லிம் காங்கிரசின் பிறப்பிடம் மட்டக்களப்பு மாவட்டம் என்பதை முகம்மது அஷ்ரஃப் நன்கறிவார் அல்லவா? அப்படியிருந்தும் பிரதேச வாதத்தை துடைத்தெறிவோம் என்று 1989, 1994,ம் காலப்பகுதிகளில் மேடைக்கு மேடை முழங்கி வாக்குச் சேகரித்துவிட்டு இன்று பிரதேசவாதத்துடன் சிந்திப்பதையும், செயற்படுவதையும் முஸ்லிம் காங்கிரஸ் ஆதரவாளர்களால் எவ்வாறு ஏற்றுக்கொள்ள முடியும். இனியாவது தனது மாவட்டத்தைப் போன்று ஏனைய மாவட்டங்களான மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டத்தவர்களுக்கும் நியமனங்களை வழங்குவதிலும், அபிவிருத்திப் பணிகளை செய்வதிலும் முன்னுரிமை வழங்குவாரா? அல்லது புறக்கணிப்புத் தொடருமா?

***அபூஹக்***
*மட்டக்களப்பு*

### தவறு

சரிநிகர் இதழ் 99ல் பக்கம் 14ல் 'மூளைச் சலவையும், சுதந்திர சிந்தனையும்'' என்ற கட்டுரையில் 'கொள்கரியே தேறாவடிவமாக' என்பது தேராவடிவமாக (Not Defind) என்று வந்திருக்க வேண்டும்.

இதேபோல் சரிநிகர் 106இல் பக்கம் 4ல் வாய்ச்சொல்லில் வீரரடி என்ற செய்திக்குறிப்பை எழுதியவர் பெயர் வி.ரி. சகாதேவராஜா எனத் தவறுதலாக அச்சாகியுள்ளது. அதனை எழுதியவர் பெயரை நேசன் எனத் திருத்தி வாசிக்கவும்.

இதனால் வாசகர்களுக்கும், எழுத்தாளர்களுக்கும் ஏற்பட்ட அசௌகரியங்களுக்கு வருந்துகிறோம்.

*ஆ-ர்.*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA

# சந்திரிகாவின் அமைதிப் பரட்சி;

சமீபத்தில் இந்திய சஞ்சிகையான "புரெ ாண்ட் லைன்"க்கு ராம் மாணிக்கலிங்கம் மூலம் பேட்டியொன்றை வழங்கினார் ஜனாதிபதி சந்திரிகா அவர்கள். அப்பேட்டியில் அரைச் சர்வாதிகார ஆட்சியிலிருந்து ஒரு சொட்டு இரத்தம்கூட சிந்தாமல் அமைதிப் புரட்சியின் மூலம் இந்நாட்டை முழுமையான ஜனநாயகப் பரிமாற்றம் செய்வதில் தமது அரசு வெற்றி கண்டுள்ளதாக அவர் கூறியுள்ளார்.

இவர் கூறுகின்ற இந்த அமைதிப் புரட்சியைப் பற்றியோ, அல்லது பூரண ஜனநாயக ஆட்சி இப்போது நிலவுவது பற்றியோ, சரிநிகரினால் விளங்கிக்கொள்ள முடியாமல் இருக்கின்றது. சுமார் இருபது வருடங்களாக சிறிமா பண்டாரநாயக்கா, ஜே.ஆர். ஜயவர்தன, ஆர். பிரேமதாச ஆகியோரின் தலைமையின் கீழ் இந்நாட்டில் இல்லாதொழிக்கப்பட்ட ஜனநாயகமும், ஏற்படுத்தப்பட்ட சர்வாதிகார எதேச்சதிகார ஆட்சிமுறையும் ஜனாதிபதி பிரேமதாச அவர்கள் படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து தளர ஆரம்பித்தது. விஜேதுங்க அவர்கள் ஜனாதிபதியாகியவுடனேயே ஜனநாயக பரிமாற்றத்திற்கான சூழ்நிலைகள் தென்னிலங்கையில் தோன்ற ஆரம்பித்தன. பத்திரிகைச் சுதந்திரம் உட்பட மக்கள் சுதந்திரமாக நடமாடக்கூடிய நிலைமைகள் ஏற்பட்டன. இது நாட்டில் ஜனநாயகத்தையும், சமாதானத்தையும் வேண்டி நிற்கின்ற மக்கள் அணிதிரண்டு செயற்படுவதற்கும் பொதுஜன ஐக்கிய முன்னணி பொதுத்தேர்தலில் வெற்றி பெறுவதற்கும் வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்தது.

இந்த அபிவிருத்தியானது பூரணத்துவமான ஜனநாயக ஆட்சியை அமைதியான வழிமுறைகளின் மூலம் உத்தரவாதப்படுத்துதல் வேண்டும் என்றும் மக்களின் எதிர்பார்ப்பையே இனம் காட்டியது. இது மிலேச்சத்தனமான யுத்தத்தை நிறுத்தி சமாதான, ஜனநாயக வழிமுறைகளின் மூலம் இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வைக் காணும் எதிர்பார்ப்பையும் உள்ளடக்கியதாகும்.

மக்களின் இந்த ஜனநாயக வேட்கையை தந்திரோபாயமாகப் பாவித்து பயத்திலிருந்து, பீதியிலிருந்து, ஊழல்களிலிருந்து விடுபட்ட சமாதானமான ஜனநாயக இலங்கையை உருவாக்குவதற்கான உத்தரவாதத்தின் அடிப்படையில் தான் சந்திரிகா அவர்களின் தலைமையிலான பொதுஜன முன்னணி பதவிக்கு வந்தது.

ஆனால், ஜனாதிபதி அவர்களே! நீங்கள் இன்று கூறும் அமைதிப் புரட்சிக்கும் பூரண ஜனநாயக ஆட்சிக்கும் சான்றாக அமைபவை எவை எனக் கூற முடியுமா?

உங்களது ஜனாதிபதித் தேர்தலின்போது உங்களது கட்சியினால் நடாத்தப்பட்ட தேர்தல் ஊழல்களும், கட்டுக் கணக்கில் போடப்பட்ட கள்ள வாக்குக்களும் சான்றா?

தேர்தலின் பின் கட்சி ஆதரவாளர்களினால் நடாத்தப்பட்ட வன்செயல்களும், அதில் மக்கள் சிந்திய இரத்தமும் சான்றா?

உங்கள் அரசை விமர்சனம் செய்த "சண்டே லீடர்" பத்திரிகையின் ஆசிரியர் மீது குண்டர்களை ஏவி தாக்கிய சம்பவம் சான்றா?

சென்ற வருடம் பெந்தோட்டையில் நடைபெறவிருந்த ஐரோப்பிய - இ[illegible]கை அரச சார்பற்ற அமைப்புக்களின் கருத்தரங்கைக் காடையர்க[illegible]ரவிப் பலாத்காரமாகத் தடை செய்தது சான்றா?

நீங்கள் தலைமை வகிக்கும் அரசின் 'பாதுகாப்புப்' பிரிவினால் அப்பாவித் தமிழ் மக்கள் கொள்ளையடிக்கப்பட்டு, படுகொலை செய்யப்பட்டு, பொல்கொட வாவியிலும், அளவ்வையிலும் வீசப்பட்டமை சான்றா?

பேச்சுவார்த்தை என்று சில மாதங்களை இழுத்தடித்து விட்டு, விடுதலைப்புலிகள் போரை ஆரம்பித்ததைச் சான்றாக வைத்துக் கொண்டு போர் முனைப்புகளில் முழுமையாக இறங்கியமைதான் சான்றா?

மின்சாரத்துறை ஊழியர் வேலைநிறுத்தத்தின்போது மக்களுக்கு உண்மையைக் கூறாது அரச தொடர்பூடகங்களை முழுமையாக அரச சார்புப் பிரச்சாரங்களுக்குப் பயன்படுத்தி உங்கள் அரசின் பத்திரிகா தர்மம்தான் சான்றா?

ரிவிரசவின் பின் யாழ்ப்பாணத்தில் கொடியேற்றுவதைப் பிரசாரப்படுத்திய தொடர்பூடகங்களை, முல்லைத்தீவு முகாம் தாக்குதல் பற்றிய தகவல்கள் மக்களுக்கு மூடி மறைக்க செய்தித்தணிக்கையைப் பாவித்தமை சான்றா?

நீர்கொழும்புப் படுகொலைகள் வரை வளர்ந்து வரும் உங்கள் கட்சியினரின் வன்முறை அரசியல் சான்றா?

அல்லது இவ்வகையான வன்செயல்களை ஆதரித்து நியாயப்படுத்திய உங்களது பத்தளகெதர பொதுக்கூட்ட உரைதான் சான்றா?

இவற்றுக்குப் பதிலைக் கூறிவிட்டு உங்களின் அமைதிப் புரட்சிக்கும், நீங்கள் நிலைநாட்டியுள்ளதாகக் கூறும் பூரண ஜனநாயகத்திற்குமான ஆதாரங்களை நீங்கள் முன்வைத்தால் நாங்கள் நம்பத்தயார்.

அமைதியான ஜனநாயக நடைமுறைகளின் மூலம் பூரணத்துவமான பல்லினப்பாங்கான ஜனநாயகத்தை உத்தரவாதப்படுத்துவதுதான் சரிநிகரின் தலையாய குறிக்கோளாக இருந்து வந்துள்ளது. இக்குறிக்கோளை அடைய முடியும் என்ற நம்பிக்கையை சரிநிகர் தொடர்ச்சியாக வெளிப்படுத்தி வந்துள்ளது. இவற்றை அடைவதற்கான வழிவகைகளை காண்பதில் உரிய பாத்திரத்தை வகிக்கவும் சரிநிகர் இன்னமும் தயாராகவே இருக்கின்றது.

மக்கள் மனம் உருக வார்த்தைகளைப் பாவிப்பதும், மறுபுறம் அம்மக்களுக்கே எதிராக செயற்படுவதும் இந்நாட்டு அரசியலில் ஒன்றும் புதிதல்ல. கடந்த இரண்டுவருட அரசியலின் மூலம் நீங்களும் இதற்கு விதிவிலக்கல்ல என்பதைத்தான் நிரூபித்துள்ளீர்கள்.

மக்களை எப்பொழுதுமே வெறும் வார்த்தைகளால் ஏமாற்றிக்கொண்டிருக்க முடியாது என்பதை மட்டும் உங்களுக்கு இவ்விடத்தில் ஞாபகப்படுத்தி வைக்க விரும்புகின்றது சரிநிகர்!

# திருமலை: அரச அதிபரின் இன விசுவாசம்!

திருகோணமலை பட்டணமும் சூழலும் பிரதேசச்செயலாளர் பிரிவில் அரசாங்க அதிபரின் தலையீடு வெகுவாக அதிகரித்துள்ளது. பதினொரு பிரதேச செயலாளர் பிரிவுகள் திருகோணமலை அரசாங்க அதிபரின் எல்லைக்குள் இருக்கின்றன.

பல பிரதேசச் செயலாளர் பிரிவுகளுக்குள் அரசாங்க அதிபருக்கு காலடி வைக்கக் கூட முடிவதில்லை. புலிப்பயம் அவரை அவ்வாறு செய்கிறது. சில பிரிவுகளுக்குள் எது நடந்தாலும் கண்டு கொள்ளாமல் அனுமதிக்கிறார்: அது இன விசுவாசம்.

ஆனால் பாவம் நகரப் பிரதேசச் செயலாளர் பிரிவோ படாதபாடு படுகிறது. பிரதேசச் செயலாளர் வேலும் மயிலும் நல்ல அதிகாரி எனப் பொதுமக்களிடம் பெயரெடுத்தவர். ஏன் அரசாங்க அதிபருக்குப் பயந்து தனது கடமைகளை காவு கொடுக்கிறார் என்பது தான் புதிராக இருக்கிறது. சேவை நீடிப்புக்கு அரசாங்க அதிபரின் நல்லெண்ணம் தேவை என்று நினைக்கிறாரோ என்னவோ?

அண்மையில் லிங்கநகர் வாசிகள் விடயத்தில் அடாத்தாகச் செயல்பட்டவர் அரசாங்க அதிபர் அந்தக் கறை கழுவப்படாமலே தமிழ் மக்களின் நிவாரண விடயத்திலும் ஒரு தலைப்பட்சமாகக் கையை வைக்க ஆரம்பித்திருக்கிறார். விசாரணை என்ற பெயரில் அகதி மக்களுக்கு எவ்வளவு துன்பம் இழைக்க முடியுமோ அவ்வளவு துன்பம் கொடுப்பதே கடமை என்று செயல்படுகிறார். இரண்டு மாதங்களாக இவர்களுக்கு நிவாரணப் பணம் வழங்குவது தாமதப்படுத்தப்பட்டிருக்கிறது.

சிங்கள கிராமசேவகர் பிரிவில் எல்லாம் ஒழுங்காகவே நடைபெறுகின்றன. தமிழ் மக்களைக் கொண்ட பிரிவுகளில் தான் விசாரணை வேடிக்கை எல்லாம்.

கச்சேரியிலிருந்து உத்தியோகத்தர்கள் பிரதேசச் செயலாளர் அலுவலகத்துக்கு அனுப்பப்பட்டு விசாரணைகள் நடைபெறுகின்றன. நிவாரணம் பெறுவோர் அழைக்கப்பட்டு வதிவிட அத்தாட்சி காட்டுமாறு வற்புறுத்தப்படுகிறார்கள். வாக்காளர்கள் இடாப்பில் பெயர் பதிவு செய்யப்பட்டுள்ளது என்று நிரூபிக்கும்படி கேட்கப்படுகிறார்கள்.

இந்த மக்களில் அநேகர் கல்வி அறிவுகூட இல்லாதவர்கள். நிகழ்கால இருப்புக்கே போராடுபவர்கள். ஒவ்வொரு இனக்கலவரத்திலும் உயிர் உடைமைகளை இரை கொடுத்தவர்கள். 83க்குப்பின்னர் தினம் தினம் செத்துப் பிறப்பவர்கள். வாழ்வதற்கே வகையற்றவர்கள். பதிவுகளை எவ்வாறு மேற்கொண்டிருக்க முடியும்? பதிவுகள் இருந்தாற்கூட அவற்றைத் தேடியெடுத்து நிரூபிக்கும் திறமை எத்தனைபேரிடம் இருக்கிறது?

இருப்பிடமிழந்து நகரில் ஒட்டிக் கொண்டிருக்கும் அகதிகள் முகாமில் தங்கியும், தொழில் இன்றி வாழ்க்கை நடாத்தும் அகதிகள் இடிந்து போயிருக்கிறார்கள். சட்டம், நேர்மை, விசாரணை என்று வந்தால் எல்லோருக்கும் பொதுவானதுதானே? அப்படியிருக்க எங்களுக்கு மட்டுமேன் இந்த அநியாயம் என்று குமுறுகிறார்கள்.

கண்துடைப்புக்காக இரண்டொரு சிங்களப் பிரிவுகளுக்கு இலகுமுறை விசாரணை நடத்தப்பட்டிருக்கிறது. அதுவும் எந்த ஒரு மாதகால நிவாரணமேனும் தாமதப்படுத்தப்படாமல் தமிழ் மக்களைப் பொறுத்தமட்டில் ஜூலை ஒகஸ்ட் மாதக் கொடுப்பனவுகள் நிறுத்தப்பட்டே விசாரணை செய்யப்படுகிறது. விசாரணை தொடர்ந்து நடைபெறுகிறது. முடிவில் பல தமிழ்க் குடும்பங்கள் நிவாரணம் இழந்து போக இருக்கிறார்கள். இவர்கள் செய்த ஒரே குற்றம் தமிழராகப் பிறந்ததுதான். தமிழராகப் பிறந்தாற் கூட அரசாங்க அதிகாரிகள் மனமிரங்கி மன்னிக்கக்கூடும். இந்தச் சனங்களோ பாமரர்களாய் இருக்கிறார்களே: எவ்வாறு மன்னிக்கலாம்..?

நிவாரணங்கள், ஜனசக்தி, உதவிகள், இழப்பீடுகள் என்பவை பாதிக்கப்பட்டோருக்கும் ஏழைகளுக்குமானவை அல்ல, புத்தசாலிகளுக்கானவை என்பது மீண்டும் ஒரு தடவை இதனால் உறுதிப்படுத்தப்படுகிறது.

அரசாங்க அதிபர் தான் இவ்வாறு என்றால், பிரதேசச் செயலாளர் என்ன செய்கிறார்? காலையிலிருந்து மாலை வரை தினசரி நூற்றுக்கணக்கான மக்கள் வந்து மணிக்கணக்காக நின்று போகிறார்கள். இவர்களுக்கு குடிநீர் வசதியோ அவசரத்துக்கான கழிப்பிட வசதியோ கிடையாது. இதையாவது அவர் செய்தால் என்ன?

*விவேகி.*

# வவுனியா: அமைதி குலைகிறது!

வடகிழக்குப் பிரதேசம் மட்டுமல்ல, இலங்கையிலேயே மிகவும் பாதுகாப்பான, அமைதியான பிரதேசம்; மூவின மக்களும் அன்னியோன்னியமாக ஒற்றுமையோடு வாழும் நகரம் என பெருமை பெற்றிருந்தது வவுனியா நகரம். கடந்த சில வாரங்களாக இங்கு என்ன நடக்கிறது? இங்கு நிலவிவந்த 5,6 வருட கால அமைதிக்கு என்ன நடக்கப்போகிறது என்ற கவலையும் சிந்தனையும் நகரவாசிகள் மத்தியில் எழுந்துள்ளன.

அநாமதேய தாக்குதல்களும் துப்பாக்கிப் பிரயோகங்களும், மக்கள் இந்த நகர் மீது வைத்திருந்த நம்பிக்கையையும், நல்லெண்ணத்தையும் தவிடுபொடியாகச் செய்துள்ளன.

கடந்த ஒகஸ்ட் மாதம் 27ம் திகதி காலை 10 மணியளவில் வவுனியா நகர பஸ் நிலையப்பகுதியில் பொலிசார் மீது மேற்கொள்ளப்பட்ட துணிகரத் தாக்குதல் இந்த நகரின் அமைதிக்கான ஸ்திரநிலையை முதலில் ஆட்டங்காணச் செய்தது. இராணுவத்தினரும் பொலிசாரும் நகரவீதிகளிலும், வாகனங்களிலும், கடைகளிலும் வழமை போல பிரசன்னமாக இருந்த வேளையிலேயே இந்த நகரின் அமைதி நிலைமீது கைக்குண்டுகள் எறியப்பட்டு துப்பாக்கிப் பிரயோகமும் சரமாரியாக மேற்கொள்ளப்பட்டது. வவுனியா பொலிஸ் நிலையத்திலிருந்து கூப்பிடு தொலைவில் (புலிகள் எனக் கருதப்படும் ) ஆயுதந்தாங்கிய மூவர் கைக்குண்டுத் தாக்குதலை ஒரு பொலிஸ்ஜீப் மீது துரத்தித்துரத்தி மேற்கொண்டுள்ளார்கள்.

அல்லோலகல்லோலப்பட்டு பதறித் தவித்த நகரவாசிகள் இந்த பகல்நேரத் துணிகரத் தாக்குதலில் இருந்து மீள்வதற்கிடையில் மூன்றாவது தினம் இங்குள்ள பத்திரிகையாளர் மீது மேற்கொள்ளப்பட்ட இனந்தெரிவிக்காத ஆயுதபாணிகளின் கொலைப்பயமுறுத்தலாலும் அதனைத் தொடர்ந்து இடம் பெற்ற நள்ளிரவு நேர துப்பாக்கிப் பிரயோகத்தாலும் மேலும் பதட்டமடைந்துள்ளார்கள்.

தொடர்ந்து சில தினங்களின் பின்னர் பொலிஸ் நிலையத்திலிருந்து சில வீடுகளுக்கு அப்பால் உள்ள சந்தைப்பகுதியின் மலசலகூட வாசலில் துப்பாக்கிச் சூட்டுக் காயத்துடன் இறந்து கிடந்த இனந்தெரியாத இளைஞனின் கொலையும் நகரவாசிகள் மத்தியில் பீதியை ஏற்படுத்தி விட்டது.

அத்துடன் நின்று விடாமல் கடந்த 19ஆம் திகதி 10 மணியளவில் வவுனியா புகையிரத நிலைய பொலிசார் மீது இனந்தெரியாதோரால் மேற்கொள்ளப்பட்ட திடீர் தாக்குதலும் இப்பகுதி மக்களின் அமைதியைக் குலைத்துள்ளது. இத்தாக்குதலில் ஒரு பெண் பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் படுகாயமடைந்தார். இன்னும் ஒரு பெண் பொலிஸ் சப் இன்ஸ்பெக்டர் உட்பட நால்வர் காயங்களுக்கு உள்ளானார்கள்.

இரண்டு தினங்களின் பின்னர் கடந்த ஞாயிற்றுக்கிழமை நள்ளிரவு புகையிரத நிலைய பொலிசார் மீது இனந்தெரியாதோர் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ள முயன்றதையடுத்து பொலிசாரும் சரமாரியாக வேட்டுக்களைத் தீர்த்தனர். சுமார் 30 நிமிடங்களுக்கு மேல் நீடித்த இந்த வேட்டுச் சத்தங்கள் நகரப்பகுதியை உலுக்கி பீதியில் உறையச் செய்து விட்டது.

இந்த இனந்தெரியாத தாக்குதல் முயற்சி சம்பவங்கள் திட்டமிட்ட நோக்கங்களின் அடிப்படையில் வவுனியாவையும், மட்டக்களப்பு, திருகோணமலை, யாழ்ப்பாணம் போன்ற நகரங்களைப் போல பயத்தின் விளிம்பில் தொடர்ச்சியாக வைத்திருப்பதற்காக மேற்கொள்ளப்படுகின்றதோ என்ற சந்தேகம் நகரவாசிகள் மத்தியில் எழுந்துள்ளது.

தீவிரமான பாதுகாப்பு ஏற்பாடுகள் பாஸ் கெடுபிடிகளுக்குள் சிக்கியுள்ள வவுனியா நகரின் அமைதியை, பாதுகாப்பைச் சீர்குலைப்பதனால், யாருக்கு என்ன லாபம் என அவர்கள் வினவுகிறார்கள்.




**சுதந்திர இலக்கிய விழா '95 – '96**

விருது வழங்கும் வைபவம்

1996 ஒக்டோபர் 11 மாலை 4.30 மணிக்கு

கொழும்பு ஜோன் டி சில்வா அரங்கில் (விகாரமகாதேவி பூங்கா எதிரே) நடைபெறும்.

1994-95 சிங்கள தமிழ் புதிய எழுத்தாளர்களுக்கான ஆக்க இலக்கியப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசு வழங்கல்;

1994 - 95 ஆண்டுகளில் வெளியான சிங்கள -தமிழ் சிறப்பு நூல்களுக்கு விருது வழங்கல்.

ரவிபந்து வித்தியாபதி குழுவினரின் கலாநிகழ்வு ஆகியன இடம்பெறும்.

1996.10.08

எல்லாத் தொடர்புகட்கும் : இல. 04, ஜயரத்ன வழி, திம்பிரிகஸ்யாய, கொழும்பு 05, தொலைபேசி : 593615.
வெளியீட்டாசிரியர் : ச. பாலகிருஷ்ணன், இல. 18/02, அலோ சாலை, கொழும்பு 03. அச்சுப்பதிவு : நவகம அச்சகம், இல. 334, காலி வீதி, இரத்மலான

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்